பக்கங்கள் 24

உதயன்

யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 354 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 29, சனி 15.11.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

### தெளிவான வானிலை

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சீரான காலநிலைக்கான சாத்தியம் நிலவுகின்றது என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. குறிப்பாக அனைத்து பிரதேசங்களிலும் மாலையிலும் இரவிலும் சீரான அத்துடன்சீரான காலநிலைக்கு காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீனா மூலம் இந்தியாவை ஓரம்கட்டுகின்றது அரசு

## குறுகிய நோக்கத்துக்காக தொலைநோக்கற்றுச் செயற்படுகின்றனர்
## நாடாளுமன்றில் சாடினார் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்



யாழ்ப்பாணம், நவம்பர் 15
"இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தை அதிகரித்து, இந்தியாவை ஓரம் கட்டும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. ஒரு சிலரின் குறுகிய நோக்கத்துக்காக, வெளிவிவகாரக் கொள்கையில் இலங்கை அரசு தொலைநோக்கற்று செயற்படுகின்றது" - என்று குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.
"இலங்கையில் சீனா பெரிய கருத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. இவை வெளிப்படைத்தன்மை அற்றவையாக இருக்கின்றன. சீனாவிடமிருந்து இலங்கை பெரிய வட்டிக்கு கடனெடுத்து இந்தக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறது. இவற்றால் சில தனிப்பட்ட நபர்களுக்கு நன்மை ஏற்படுகிறது. இது விடயம் தொடர்பில் புதுடில்லி அக்கறையுடையதாகக்

22 ஆம் பக்கம் பார்க்க

### வெளிநாட்டை சேர்ந்தோருக்கும் பல்கலை அனுமதி

யாழ்ப்பாணம், நவ. 15
வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலங்கைப் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, மருத்துவம், பொறியியல், சட்டம் உள்ளிட்ட துறைகள் உட்பட இலங்கைப் பல்கலைக் கழகங்களில் கற்பிக்கப்பட்டு வரும் அனைத்துப் பாடநெறிகளுக்கும் இந்த அனுமதி வழங்கப்படுகின்

22 ஆம் பக்கம் பார்க்க

## குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயற்சி



"அரசின் வெளிவிவகார கொள்கைகள் நாட்டுக்கு பல வெற்றிகளைத் தேடிக் கொடுத்துள்ளது."
*- ஜீ.எல்.பீரிஸ்*

யாழ்ப்பாணம், நவ. 15
"குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதற்கு சம்பந்தன் முயற்சிக்கிறார். சீனாவுடனான உறவு, இந்தியாவுடனான உறவு மற்றும் சீனாவுடன் இலங்கை அரசு உறவு கொண்டிருப்பதால் இந்தியாவின் நிலைமை என்று, ஒன்றையொன்று பிணைத்துக் குழப்பி கருத்துகளை முன்வைத்திருப்பது ஏற்க முடியாது."- இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.
நாடாளுமன்றில் இடம்பெற்ற வெளிவிவகார அமைச்சு மீதான வரவு - செலவுத்திட்ட குழு நிலை விவாதத்தின் இறுதியில் பதிலளித்து உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

22 ஆம் பக்கம் பார்க்க

# இராணுவம் நிலைகொண்டுள்ள இடங்களின் விவரங்கள் சேகரிப்பு

## மும்முரமாக முன்னெடுக்கின்றது வடக்கு மாகாண சபை



யாழ்ப்பாணம், நவ. 15
வடக்குமாகாணத்தில் இராணுவம் நிலை கொண்டுள்ள காணிகள் மற்றும் கட்டடங்கள் தொடர்பான விவரங்கள் மாகாண சபையால், உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்து கோரப்பட்டுள்ளது.
"வடக்கு மாகாணசபையில் காணி தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள தனியார் காணிகளின் விவரங்களை உள்ளூராட்சி மன்றங்

19 ஆம் பக்கம் பார்க்க

### வருவாய்த்துறை அலுவலகம் அமைப்பதில் அசமந்தம்

யாழ்ப்பாணம், நவ. 15
வடக்கு மாகாண நிதி நியதிச் சட்டம் மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டு மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலையிலும், மாகாண வருவாய்த் துறை அலுவலகம் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. நியதிச் சட்டம் தொடர்பிலான வர்த்தமானிப் பிரசுரமும் வெளியாகியுள்ள போதும், இது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.
வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நிதி

19 ஆம் பக்கம் பார்க்க

### வெள்ளாங்குளம் சூட்டுச் சம்பவம்

## சந்தேகநபர்களிடம் ரி.ஐ.டி. விசாரணை



யாழ்ப்பாணம், நவ. 15
நேற்றுமுன்தினம் மன்னார், வெள்ளாங்குளத்தில் முன்னாள் போராளி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்கள், பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

- முன்னாள் போராளியான நகுலேஸ்வரன் நேற்றுமுன்தினம் இரவு அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.
- நேற்று அந்தப் பகுதியில் தேடுதல் மேற்கொண்ட பொலிஸார் மோப்பநாயின் உதவியுடன் ரி-56 ரகத் துப்பாக்கி ஒன்றையும், ரவை வெற்றுக் கோது ஒன்றையும் கண்டுபிடித்தனர்.
- குறித்த பகுதியைச் சேர்ந்த 4 பேர், சந்தேகத்தின் பேரில் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

### ஆரம்பித்தது ஆஸ்திரேலியாவின் ஆதிக்கம்



பக்கம் 19

## அதிகளவு மிதிவெடிகளை இராணுவமே அகற்றுகிறது

### ஐ.நாவில் விவரித்தார் ரவிநாத் ஆரியசிங்க

ஜெனிவா, நவ.15
இலங்கையில் 75 சதவீதமான மிதிவெடி அகற்றல் நடவடிக்கையை இராணுவமே முன்னெடுத்துள்ளது. கடினமான பகுதிகள் என்று அடையாளம் காணப்பட்ட பகுதிகளிலும் அவர்கள் மிதிவெடிகளை அகற்றியுள்ளனர். - என்று தெரிவித்துள்ளார் ஜெனிவாவுக்கான இலங்கைத் தூதுவர் ரவி நாத் ஆரியசிங்க.

விரிவான செய்தி 3ஆம் பக்கத்தில்

## ஜன.8 ஜனாதிபதித் தேர்தல் ஆயத்த பணிகள் படுவேகம்



யாழ்ப்பாணம், நவ. 15
ஜனாதிபதித் தேர்தல், ஜனவரி 8 ஆம் திகதியே நடைபெறும், அதனை கருத்தில்கொண்டே, தேர்தல் திணைக்களப் பணி களை முன்னெடுக்குமாறு உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு தேர்தல்கள் திணைக்களத்திலிருந்து அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின், இரண்டாவது தவணைக்குரிய பதவிக் காலம் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதியு டன் முடிவடை கின்றது. ஆனாலும் 4 வருடங்க்ளின் பின்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தலாம் என்பதன் அடிப்படையில் எதிர்வரும் 19 ஆம் திகதியுடன் இரண்டாவது தவணைக் காலத்தை ஜனாதிபதி மஹிந்த முடித்துக் கொண்டு தேர் தலை நடத்தவுள்ளார்.

22 ஆம் பக்கம் பார்க்க

"இயற்கையே எனது இறைவன், எனக்கு இயற்கை புனிதமானது, மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள்".

-மிகைல் கோபர்ச்சேவ் (சோவியத் யூனியனின் முன்னாள் அதிபர்)

## சந்திரிகா, ஹேமாவுக்கு நிதி ஒதுக்கீடு குறைப்பு



முன்னாள் ஜனாதிபதிகளுக்காக அரசால் வருடந்தோறும் ஒதுக்கப்படும் 29 மில்லியன் ரூபாவை, 5 மில்லியன் ரூபாவாகக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்பிர்காரம், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் மனைவி ஹேமா பிரேமதாஸ ஆகியோரின் மாதாந்த செலவுத் தொகை மட்டுப்படுத்தப்படவுள்ளது.

இந்த நிலையில், அவர்கள் இருவருக்கும் இந்த ஆண்டு 47 இலட்சம் ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்படு கின்றது.(ற)

# நான்கு தினங்கள் இலங்கையில் தங்குவார் பாப்பரசர் பிரான்ஸிஸ்

## இறுதி செய்யப்பட்ட பயண நிகழ்ச்சி நிரல் வெளியானது

கொழும்பு, நவ.15

பாப்பாண்டவர் முதலாம் பிரான்ஸிஸின் இலங்கைப் பயணம் தொடர்பிலான இறுதி செய்யப்பட்ட நிகழ்ச்சி நிரல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் ஜனவரி மாதம் 12ஆம் திகதி வத்திக்கானிலிருந்து புறப்படும் போப்பாண்டவர் ஜனவரி மாதம் 19ஆம் திகதி வத்திக்கான் திரும்புவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

13ஆம் திகதி இலங்கைக்கு வரும் போப்பாண்டவர் விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார், அதன் பின்னர் பேராயர்களுக்கு உரையாற்றவுள்ளார். அதன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சு நடத்துவார்.

அதன் பின்னர் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சர்வமத சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

14ஆம் திகதி காலி முகத்திடலில் புனித ஜோசப் வாஸ் அடிகளாருக்காக விசேட ஆராதனை நடத்தப்பட உள்ளது. பின்னர்ஹெலிக்கொப்டர்மூலம் மடுவுக்கு செல்ல உள்ளார். பின்னர் மருதமடு தேவாலயத்தில் விசேட ஆராதனை நடத்தப்பட உள்ளது, பின்னர் ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்பு திரும்பவுள்ளார்.

15ஆம் திகதி பொலவலான மாதா ஆலயத்துக்கு போப்பாண்டவர் பயணம் செய்யவுள்ளார்.



அதன் பின்னர் போப்பாண்டவருக்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விசேட பிரியாவிடை நிகழ்வு ஒன்று நடத்தப்பட உள்ளது.அதன் பின்னர் பிலிப்பைன்ஸின் மனிலா நோக்கி பாப்பாண்டவர் விமானம் மூலம் புறப்பட்டுச் செல்லவுள்ளார். (ற)

## விபத்துக்கள்

### அரியாலையில் பஸ் -டிப்பர் விபத்து




அரியாலையில் பஸ் - டிப்பர் விபத்தில் நான்கு பேர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்.கொடிகாமம் பணியில் ஈடுபடும் பஸ்ஸே விபத்துக்குள்ளாகியுள்ளது. இரு வாகனங்களும் பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.(ற-4)

### மோ.சைக்கிள் விபத்தில் இருவர் சாவு



நீர்கொழும்பு, கொச்சிக்கடை - மடம்பே பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 17 மற்றும் 18 வயதுகளுடைய இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். பெலேகடவில் இருந்து கடவல பகுதிக்கு பயணித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.



கொழும்பில் நேற்று மாலை பெய்த அடைமழை காரணமாக பலவீதிகள் நீரில் மூழ்கின. அதனால் போக்குவரத்துகள் பல மணிநேரம் பாதிக்கப்பட்டிருந்தன. பண்டாநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகம் முழுமையும் வெள்ள நீரில் மூழ்கியது. மழை காரணமாக கொழும்பு மாநகரத்தின் பெரும் பகுதிகளில் மின்சாரத் துண்டிப்பும் ஏற்பட்டிருந்தது.(ற)

# அரசமைப்புத் தொடர்பாக மக்கள் யோசிப்பதில்லை

## பொதுபல சேனா கூறுகின்றது

கொழும்பு, நவ.15

அரசமைப்பு பற்றி வன்னி அல்லது மலையக பொதுமக்கள் கவலைப்படுவதில்லை என்று கூறியுள்ளார் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர்.

"அரசியல்சாசனதிருத்தங்களை விடவும் பொதுமக்களுக்கு வேறும் பிரச்சினைகள் காணப்படுகின்றன. மக்கள் வாழ்வது தொடர்பிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியது அவசியமானது"- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"17ஆம், 18ஆம் மற்றும் 13ஆம் திருத்தச் சட்டம் பற்றி பொது மக்களுக்கு பெரிதாக கவலையில்லை. ஆயினும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்ய வேண்டும் என்பதே எமது இயக்கத்தி னது நிலைப்பாடாகும்"- என்று குறிப்பிட்டுள்ள அவர், "இரண்டாம் தவணைக்கான பதவிக் காலம் முடிவடையும் முன்னதாகவே ஜனாதிபதி தேர்தலை நடத்த முயற்சிக்கின்றார். அவ்வாறான அவசர அவசியம் கிடையாது"- என்றும் தெரிவித்துள்ளார். (ற)

# அமைச்சுப் பதவியை துறப்பதற்குத் தயார்

## மேர்வின் சில்வா கூறுகின்றார்

கொழும்பு, நவ.15

அமைச்சுப் பதவியையும்," சுகபோக வாழ்க்கையையும் துறந்து வீதிக்கு இறங்கத் தயாராக இருகின்றேன் என்று கூறியுள்ளார் அமைச்சர் மேர்வின் சில்வா.

நேற்று களனி, கிரிபத்கொடையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"அமைச்சுப் பதவிகளை துறந்து வெளியேற நான் தயாராகவே இருக்கின்றேன். அவ்வாறு செய்யும் பட்சத்தில் பாதுகாப்பு மற்றும் சுகபோக வாழ்க்கை என அனைத்தையும் இழக்க நேரிடும். ஆனாலும் அவை இல்லாமல் வீதியில் இறங்கி நடக்கும் தைரியம் எனக்கு உண்டு.

எனக்குத் தோன்றினால் நான் எதைப் பற்றியும் கவலைப்பட மாட்டேன். அமைச்சுப் பதவி உள்ளிட்ட அனைத்தையும் தூக்கி எறிந்துவிடுவேன். அதன் பின் வரும் இழப்புகள் குறித்து கவலைப்படும் நிலையில் நான் இல்லை"- என்று அவர் மேலும் கூறியுள்ளார். (ற)

# சீனக் கப்பல் போகின்றது ரஷ்யக் கப்பல் வருகிறது

கொழும்பு, நவ. 15

ரஷ்யக் கடற்படையின் நாசகாரி போர்க்கப்பல் நான்கு நாள் பயணமாக இந்த மாத இறுதியில் கொழும்புத் துறைமுகத்துக்கு வரவுள்ளது. கொழும்புத்துறைமுகத்துக்குவந்துசென்ற சீன நீர்மூழ்கிக் கப்பலால் உருவான சர்ச்சை முடிவடைவதற்குள்ளேயே, ரஷ்ய போர்க் கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்குவருகின்றது.

தெற்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் பாதுகாப்புத் தலைவர்களின் கலந்துரையாடல் கொழும்பில் நடைபெறவுள்ளது. இதற்காகவே இந்தக் கப்பல் இலங்கைக்கு வரவுள்ளது. நாசகாரிப் போர்க் கப்பலில், 30 அதிகாரிகள் உள்ளிட்ட 200 கடற்படையினர் பணியாற்றுகின்றனர். எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தை வந்தடையும் ரஷ்ய நாசகாரிப் போர்க்கப்பல், நான்கு நாள்கள் இங்கு தரித்திருக்கும்.

மாநாடு

நவம்பர் 27 ஆம் திகதி, சார்க் நாடுகள் மற்றும் 10 ஆசியான் நாடுகளின் பாதுகாப்பு தலைவர்கள் இணைந்து, புதிய கூட்டமைப்பை உருவாக்கவுள்ளனர். கொழும்பில் மூன்று நாள்கள் இது தொடர்பான கலந்துரையாடல் நடக்கவுள்ளது. இதில் ரஷ்யாவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனடோலி அன்ரனோவ்வும் கலந்து கொள்ளவுள்ளார்.

இதேவேளை, சீனாவில் இருந்து உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று இந்தக் கலந்துரையாடலுக்காக கொழும்பு வரும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-5)


# மாதுளுவாவே தேரர் மருத்துவமனையில்

## நெஞ்சுவலி ஏற்பட்டதை அடுத்து

கொழும்பு, நவ.15

திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக கோட்டே நாக விகாரை விகாரதிபதி மாதுளுவாவே சோபித தேரர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். நேற்றுக் காலை நெஞ்சுவலி அதிகரித்த நிலையில் மாலபேயில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாதுளுவாவே சோபித தேரர், ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் என்ற நிலைப்பாட்டை உறுதியாக கடைப்பிடித்து வருகின்றார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட ஜனநாயக ரீதியான கோரிக் கைகளை முன் வைத்து வரும் சோபித தேரர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக



போட்டியிட போவதாகவும் முன்னர் அறி வித்திருந்தார்.

இந்த நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ உட்பட அரச தரப்பினரை அவர் கடந்த புதன்கிழமை சந்தித்திருந்தார் என்றும், அதன் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மாதுளுவாவே சோபித தேரரை சாடியிருந்தார் என்றும் கூறப்படுகின்றது. (ற)

## நந்தன குணதிலக்க பதவி விலகினார்

கொழும்பு, நவ.14

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் களுத்துறை மாவட்ட அமைப்பாளரும் பாணந்துறை நகர சபை முதல்வருமான நந்தன குணதிலக்க இன்று தனது பதவிகளில் இருந்து விலகியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைப்பாளர் பதவியில் இருந்தும் நகர முதல்வர் பதவியில் இருந்தும் அவர் விலகியுள்ளதுடன், அவருக்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டிருந்த வாகனத்தையும் கையளித்துள்ளார்.

ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த நந்தன குணதிலக்க, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆரம்ப இணை தலைவராக இருந்துள்ளார். ஜே.வி.பியில் இருந்து விமல் வீரவன்ஸவுடன் விலகி தேசிய சுதந்திர முன்னணியை ஆரம்பித்த நந்தன குணதிலக்க, பின்னர் அந்தக் கட்சியில் இருந்து விலகி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் இணைந்து கொண்டார். (ற)

# எதிர்கால நம்பிக்கை இளைஞருக்கு இல்லை

## அரசின் நடவடிக்கையால் என்கிறார் விஜித ஹேரத்

கொழும்பு, நவ.15

நாட்டின் இளைஞர்கள் எதிர்காலம் பற்றி நம்பிக்கையின்றி வாழ்ந்து வருகின்றனர் என்று ஜே.வி.பியின் பரப்புரைச் செய லாளர் விஜித ஹேரத் நாடா ளுமன்றில் தெரிவித்துள்ளார். வரவு-செலவுத் திட்ட விவாதத் தில் பங்கேற்று உரையாற் றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இந்த அரசு இளைஞர் பற்றி எழில்மிகு வசனாங் களைப்பேசு கின்றது. எனினும், இளைஞர் கள் நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். எதிர்கா லம் பற்றி நம்பிக்கையில்லாத நிலைமையே காணப்படுகின் றது. இளைஞர் சமூகம் அதிகள வில் நாட்டில் அழுத்தங்களை எதிர்நோக்கி வருகின்றனர்."- என்று அவர் தெரிவித்தார். ற)

பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 29 சனி (15.11.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 354

## வடக்கில் உற்பத்தி, தொழில்சார் வளங்களை இனங்கண்டு திட்டங்களை உருவாக்குங்கள்

### நிபுணத்துவ வல்லுநர்களிடம் மாகாண சபை கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 15

வடமாகாணத்தில் உற்பத்தி, தொழில்சார் வளங்களை அடையாளப்படுத்தி அவற்றினூடாக உருவாக்கக்கூடிய திட்டங்களைத் தயாரித்து வழங்குமாறு, நிபுணத்துவம் சார் வல்லுநர்களை வடக்கு மாகாண சபை கோரியுள்ளது.

இது தொடர்பில் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் விடுத்துள்ள அறிக்கையில்,

கடந்த 30 வருட காலப் போர் சூழ்நிலை மற்றும் இலங்கை அரசின் திட்டமிட்ட புறக்கணிப்புகள் - பாகுபாடுகள் காரணமாகத் தமது வாழ்வாதாரங்களை இழந்தும், தொலைத்துவிட்டு நிரந்தரத் தொழில் வருமானம் எதுவுமின்றியும் எமது மக்கள் அல்லல்படுகின்றனர்.

இவர்களது வாழ்வியலையும் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த வேண்டியது மிக அவசியமாகும். இதன் பொருட்டு எமது தாயகத்தில் இருக்கக் கூடிய உற்பத்திசார் வளங்களை இனங்கண்டு அவற்றைக் கொண்டு உருவாக்கக் கூடிய தொழில் திட்டங்களைத் தயாரித்து வழங்கக் கோருகிறோம்.

இன்றைய நவீன தொழில் நுட்பங்களின் அடிப்படையில் அயல்பணி சேவைகளில் எமது இளைஞர்கள் ஈடுபடக்கூடிய வாய்ப்புகள் பற்றியும் ஆலோசனைகளை வழங்குமாறு கோருகிறோம். வடக்கு மாகாண சபை தனித்து நின்று திட்டங்களைத் தயாரிக்கலாம் என்றோ, நடைமுறைப்படுத்தலாம் என்றோ கருதவில்லை.

ஆனாலும் எமது உறவு

(22ஆம் பக்கம் பார்க்க)

## விடுதிகளில் கைதான பெண் உட்பட 7 பேருக்கும் மறியல்

தென்மராட்சி, நவ.15

சாவகச்சேரி நகரப்பகுதியில் இயங்கிய இரு விருந்தினர் விடுதிகளில் கைது செய்யப்பட்ட ஒரு பெண் உட்பட 7 பேரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

மீசாலை புத்தூர் சந்திக்கு அண்மித்த பகுதியில் இரவு வேளையில் வீதியில் செல்வோரை விபசாரத்துக்கு அழைத்

(22ஆம் பக்கம் பார்க்க)

# அதிகளவு மிதிவெடிகளை இராணுவமே அகற்றுகிறது

## ஐ.நா.வில் விவரித்தார் ரவிநாத் ஆரியசிங்க

ஜெனிவா, நவம்பர் 15

**இலங்கையில் 75 சதவீதமான கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளை இராணுவமே முன்னெடுத்துள்ளது. கடினமான பகுதிகள் என்று அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களிலும் அவர்கள் கண்ணிவெடிகளை அகற்றியுள்ளனர். இவ்வாறு ஜெனிவாவுக்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.**



ஜெனிவாவில் இடம்பெற்று வரும், மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை 5 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவில் நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் பணியை மேற்கொண்டுள்ளது. இதில் 2 ஆயிரத்து 500 சதுர கிலோமீற்றர் பகுதி அதிக ஆபத்தான பகுதி என்று அடையாளப்படுத்தப்பட்டு அவற்றிலிருந்து கடந்த 5 வருட காலப் பகுதியில் 41 லட்சத்து 28 ஆயிரத்து 336 வெடிபொருள்களை அகற்றியுள்ளோம். இவ்வருடம் மாத்திரம் 55 ஆயிரத்து 762 வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளன. ஆபத்தான பகுதி என்று அடையாளமிடப்பட்டுள்ள பகுதியில் 78.8 சதுர கிலோ

(22ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்தவை திட்டி தீர்த்தவர் பலவந்தமாக வெளியேற்றம்

யாழ்ப்பாணம், நவ. 15

வலி.வடக்கில் எங்கள் காணிகளை விடாமல் வைத்திருப்பவரின் பிறந்தநாளுக்கு விழா எடுக்கின்றீர்களா? என்று வலி. வடக்குப் பிரதேச செயலக ஊழியர்களைப் பேசியவரை, அங்கு நின்ற ஊழியர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றிய சம்பவம், மாவிட்டபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

தேசத்தின் நிழல் மரநடுகைத் திட்டம் மாவிட்டபுரத்தில் இன்று இடம்பெறவுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்தநாளை முன்னிட்டே இந்தச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிகழ்வு இடம்பெறும் பிரதேசத்தைத் துப்புரவு செய்யும் நடவடிக்கையில் வலி.வடக்குப் பிரதேச செயலக அலுவலர்கள் நேற்று முன்தினம் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது வீதியில் நின்ற வயோதிபர் ஒருவர், 'காங்கேசன்துறையில எங்கட காணியை விடாமல் விட்டவனுக்காடா பிறந்தநாள் விழா

(22ஆம் பக்கம் பார்க்க)

## போராளியின் கொலையை ஐ.நாவே விசாரிக்கவேண்டும்

### இலங்கை அரசின் விசாரணை நம்பிக்கையற்றது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், நவ. 15

மன்னாரில் சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் போராளியின் கொலை தொடர்பில் இலங்கை அரசு நியாயமான விசாரணை நடத்தும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் போர்க் குற்ற விசாரணைகளை முன்னெடுத்து வரும் குழுவினர், இந்தக் கொலை தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சி நேற்று விடுத்துள்ள அறிக்கையில், இலங்கைத் தீவு முழுவதும் இலங்கை அரசின் பூரண கட்டுப்பாட்டிலுள்ளது. இலங்கை ஆயுதப் படையினரிடமும், பொலிசாரிடமும் மட்டுமே ஆயுதங்கள் காணப்படு

(22ஆம் பக்கம் பார்க்க)

## ரயில் கடவை மூடிய பின்னர் அதனைக் கடந்தவர்கள் கைது

### அபராதம் விதித்தது நீதிமன்றம்

தென்மராட்சி, நவ.15

ரயில் வருவதை அறிவிக்கும் சமிக்ஞை ஒலி எழுப்பப்பட்டுக் கடவை மூடப்பட்ட பின்னர் அதனூடாகப் பயணித்தவர்கள் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக்கொண்டனர்.

இவ்வாறு போக்குவரத்து விதிமுறைகளை மீறியவர்களை நேற்றுச் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது இவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதால் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸாரால் இந்த வழக்குகள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. (த-9)

## குருக்கள்மடம் புதைகுழி அகழ 93 லட்சத்து 80 ஆயிரம் செலவு

### அறிக்கை சமர்ப்பித்தனர் களுவாஞ்சிக்குடி பொலிஸார்

களுவாஞ்சிக்குடி, நவ. 15

குருக்கள் மடம் மனிதப் புதைகுழியைத் தோண்டுவதற்கு 93 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா செலவாகும் என்றும், இதைத் தோண்டுவதற்குரிய ஏற்பாடுகளை உரிய தரப்புக்களுடன் பேசி நடவடிக்கை எடுப்பதற்குக் கால அவகாசம் தேவை என்றும் களுவாஞ்சிக்குடி பொலிஸார் கடந்த வியாழக்கிழமை களுவாஞ்சிகுடி நீதிமன்றத்தில் அறிக்கையொன்

(22ஆம் பக்கம் பார்க்க)

## நிறைவேற்று அதிகாரத்தை நீக்கக் கோருவோர் தெரிவுக் குழுவுக்கு வராததை மறந்துவிட்டனர்

### எதிர்க்கட்சிகளைச் சாடுகின்றார் ஜனாதிபதி

கொழும்பு, நவ. 15

1972 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற இரண்டு வருடங்கள் சென்றது. ஆனாலும் 13 ஆம் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற 24 மணித்தியாலமும் செல்லவில்லை. அத்துடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குமாறு கோரும் எதிர்க்கட்சியினர், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அமர்வில் கலந்து கொள்ளாததை மறந்து உரையாற்றுகின்றனர் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று எதிர்க்கட்சியினர் நிறைவேற்று ஜனாதிபதி

(22ஆம் பக்கம் பார்க்க)



## சீனக் கடற்படையினர் மீது உன்னிப்பான கண்காணிப்பு

### இந்தியக் கடற்படைத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, நவ. 15

சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு வருவது உள்ளிட்ட இந்தியப் பெருங்கடலில், சீனக் கடற்படையின் செயற்பாடுகளை இந்தியக் கடற்படை உன்னிப்பாக கண்காணித்து வருவதாக, இந்தியக் கடற்படைத் தள

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சங்கானையில் கடை உடைத்து திருட்டு

சங்கானை, நவ.15

சங்கானையில், மரக்கறிச் சந்தையின் முன்பாக உள்ள வர்த்தக நிலையமொன்று கடந்த திங்கள் இரவு உடைக்கப்பட்டு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. சிகரெட் வகைகள், பால்மா பைக்கற்றுக்கள், சில்லறைக்காசு அடங்கலாக சுமார் ஒரு லட்சம் பெறுமதியான பொருள்கள் களவு போயுள்ளன.

கூரையைப் பிரித்து உட்பக்க சீற்றை உடைத்து இறங்கியே இக் களவு நடந்துள்ளது. இதேவேளை, சங்கானை வர்த்தக சங்கத்தின் அனுசரணையுடன் 4 பாதுகாப்பு ஊழியர்கள் நியமிக்கப்பட்டு கடமையில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-29)

## சலுகைக் கட்டணத்தில் தொழிற் பயிற்சிகள்

தொழிற்பயிற்சி அதிகார சபையால் நாடெங்கிலும் இளைஞர், யுவதிகளுக்கு வழங்கப்பட்டு வரும் தொழிற் பயிற்சிகள் திட்டத்தின் கீழ் வாழ்வின் எழுச்சிக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு சலுகைக் கட்டணத்தில் தொழிற் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சி நிலை யங்களில் தொழிற்பயிற்சி பெற விரும்பும் வாழ்வின் எழுச்சி பயனாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் உரிய ஆதாரங்களைச் சமர்ப்பித்தால் 50 வீத சலுகைக் கட்டணத்தில் பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)


## மரண அறிவித்தல்



### திருமதி இராசம்மா பொன்னம்பலம்

குப்பிளானைப் பிறப்பிடமாவும் கட்டுவனை வசிப்பிடமாகவும் புத்தூர் கிழக்கு காளியானையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா பொன்னம்பலம் 12.11.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், திருச்செல்வராணி (ஜேர்மனி) இந்துராணி(புத்தூர்),கணேசமூர்த்தி (ஜேர்மனி), வசந்தராணி (ஜேர்மனி), ரஞ்சிதராணி(ஜேர்மனி),யோகராணி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கந்தையா(ஜேர்மனி), அமிர்தலிங்கம்(புத்தூர்),சசிகலா(ஜேர்மனி), சிவகுமார் (ஜேர்மனி),தவராசா(ஜேர்மனி),சுகுணலிங்கம்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நினா, கசுனா, கஜன், கவிதா, லதா, சர்விகா, சுனந்தன், நிறினா, சிவாகர், சியான், சியங்கா, நவினா, லக்சிகா, துசானிக்கா, ஆரணியா, ஐங்கரன், லவன்,பிரசாந், ரசிதரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜஸ்மிகாவின் அன்புப் பூட்டியும், காலஞ் சென்றவர்களான மார்க்கண்டு, லக்சுமி, தங்கப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.11.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புத்தூர் கிழக்கு அந்திரானை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளியானை, புத்தூர் கிழக்கு. (54082)(5.6) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### நல்லதம்பி கனகரத்தினம்

(பிரதம தாதிய பரிபாலகர் தெல்லிப்பழை-யாழ்ப்பாணம்-வவுனியா
சிரேஷ்ட போதனாசிரியர், தாதிய பயிற்சிக் கல்லூரி- வவுனியா)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி கனகரத்தினம் 10.11.2014 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம்-தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், மகாலட்சுமியின் பாசமிகு கணவரும், நல்லம்மா, சரஸ்வதி, கோபாலசிங்கம் ஆகியோரின் சகோதரனும், ஜனகன், ஞானதேசிகன், கோணேசன், கோமகள் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸஜிதா, நிஷாமினி, தனுசா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜயக்குமரன்,தனக்குமரன், மதிக்குமரன், பராபரக்குமரன், சாதனா, வாசகன்குமரன், மஞ்சரி, நவீன்குமரன், தஸ்வின்குமரன், கஜீனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.11.2014) முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.09, அகத்தியர் ஒழுங்கை, சாந்தசோலை வீதி, மகாறம்பைக்குளம், வவுனியா. (54068)(5.3)
தகவல்: குடும்பத்தினர்.
077 130 6446 / 077 877 9699

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 27 . 05 . 1933



விண்ணில் 15 . 11 . 2004

அமரர்

### அந்தோனிப்பிள்ளை இராயப்பு

(பிரபல கட்டடக் கலைஞர்)

"இருள்சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும்
நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்"
(திபா 23 : 4)

உயிரோடு உயிராகக் கலந்த எங்கள் பாசமிகு தந்தையே!
அன்பும் பண்பும் அறிவும் அனுபவமும்
ஒருங்கே அமையப்பெற்று வாழ்வில் வழிகாட்டிய தெய்வமே!
உயர்ந்த சிந்தனை சிரிப்பு புன்முறுவல்
போன்றவற்றால் அனைவரின் உள்ளங்களையும் ஈர்த்தவரே!
எத்தனை உறவுகள் எமக்கு இருந்தாலும்
உங்களின் இழப்பு என்றுமே ஈடுசெய்ய முடியாதது
பாரினில் எமைப்பிரிந்து பத்து ஆண்டுகள் ஆனாலும்
இன்றும் எம்மோடு இருப்பது போன்ற உணர்வு எம்நெஞ்சில் உள்ளது
தரணியில் நாமெல்லாம் உயர - உம்
நலன் பாராது பாடுபட்ட உத்தமரே!
ஆண்டவர் பாதத்தில் விண்ணவர் கூட்டத்தில்
தாங்களும் மகிழ்ந்திருக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக
இன்று (15.11.2014) சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு
யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமத்திலும், மிருசுவில் யோசப்
ஆச்சிரமத்திலும், முற்பகல் 11.00 மணிக்கு தவசிகுளம், மிருசுவில்
புனித காணிக்கை மாதா ஆலயத்திலும்
இரங்கல் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும்.

(54091)(7.6)

தவசிகுளம், மிருசுவில்.
077 445 0429

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

ஓம் ஸ்ரீ சாய்ராம்

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 17.08.1949 உதிர்வு 15.11.2006

### திருமதி நேசமலர் சின்னத்துரை

திதி: பூர்வபட்ச ஏகாதசி

மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும்
கொழும்பு, மட்டக்குளியை வதிவிடமாகவும் கொண்டவர்.

அம்மா, அன்பே சிவம் என்பது உன்னில் கண்டது
உன் முகமே எங்கள் உலகம் அம்மா.
அம்மா, நாம் பசுவைக் காணாத கன்றுகள் போல்
உன் முகத்தைத் தேடி அலைகின்றோம்.
அம்மா, உங்கள் முகம் மலர்ந்த சிரிப்பை
எப்போ எங்கே காண்போம் அம்மா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல கரைப்பிரான் ஆதி விநாயகப் பெருமானையும்,
ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாளையும் வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளோடு,

(54079)(12.6)

தொ.பேசி இல: 021 221 3058

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மாநகரசபை தயாரிக்கும் சேதனப் பசளைக்கு கிராக்கி

யாழ்ப்பாணம், நவ.15
யாழ். மாநகர சபையால் உற்பத்தி செய்யப்படும் சேதனப் பசளைக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.
சங்கிலியன் பூங்காவில் கடந்த வாரம் இடம்பெற்ற தாவர விற்பனை கண்காட்சியில் இந்த சேதனப் பசளையின் விற்பனை களை கட்டியது.
கிலோ பத்து ரூபாவுக்கு விற்கப்பட்ட இந்த சேதனப் பசளையை தாவர கண்காட்சிக்கு வருகை தந்த மக்கள் முண்டியடித்து வாங்கிச் சென்றனர்.
வடமாகாண விவசாய அமைச்சால் நடத்தப்பட்ட இந்த தாவர விற்பனை கண்காட்சி கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவு பெற்றது.
கண்காட்சி முடிவுறுவதற்கு முன்னரே இந்த சேதனப் பசளையை மக்கள் முண்டியடித்துப்பெற்றுச் சென்றனர்.
மாநகர சபையின் இந்த சேதனப் பசளை திட்டத்துக்கு மக்கள் மத்தியில் அமோக வரவேற்பு கிடைத்துள்ளதால் இந்தத் திட்டத்தை மேலும் சிறப்பு முறையில் விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநகர சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
மாநகர சபைப் பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகளில் இருந்து தரம்பிரிக்கப்பட்டு அவை பின்னர் பசளையாக மாற்றப்பட்டு வருகின்றன.
காக்கைதீவில் இயங்கும் சேதனப் பசளை தயாரிக்கும் நிலையம் ஊடாக இந்தப் பசளை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. (வ-17)

## செயலமர்வு

தென்மராட்சி, நவ.15
தென்மராட்சி கல்வி வலய ஆரம்ப பாடசாலைகளின் தரம் 1, 2 வகுப்பு ஆசிரியர்களுக்கான ஆரம்பக் கல்விச் செயலமர்வு இன்று காலை 8.30 மணி தொடக்கம் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் இடம்பெறும். (வ-9)

## 'விமர்சன ரீதியான வேறுபாடு' தலைப்பில் கருத்துரை நாளை

யாழ்ப்பாணம், நவ.15
சமகாலக்கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகத்தால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள கருத்துரை நிகழ்ச்சித் தொடரின் 12 ஆவது நிகழ்வாக 'விமர்சன ரீதியான வேறுபாடு' என்ற தலைப்பில் அசாரா ஜலீலின் கருத்துரை இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணிவரை இல: 199, கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக்காப்பகத்தில் நடைபெறவுள்ளது.
அசாரா ஜலீலால் வழங்கப்படும் கருத்துரை இலங்கையின் முதலாவது காண்பியக் கலைக்கான சஞ்சிகை ஆக்கத்தின் வேறுபட்ட நிலைவரங்களை வெளிப்படுத்தும்.
அசாரா ஜலீல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில் பட்டம் பெற்றவரும், 'டெயிலி மிரர்' பத்திரிகையில் வாராந்தம் கலை பற்றி எழுதுபவரும் ஆவார்.
இந்த நிகழ்வில் ஆர்வலர்கள் பங்கேற்க முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-10)

## 'பூமணி' சிறுவர் கவிதைகள் நூல் வெளியீடு ஞாயிறன்று

யாழ்ப்பாணம், நவ.15
நவாலியூர் தவிராயர் எழுதிய 'பூமணி' சிறுவர் கவிதைகள் நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
யாழ். வண்ணை கலைவாணர் நாடகமன்ற நிறுவுநர் கலாபூசணம் இராசையா பீதாம்பரம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலரும் கலாசார பேரவைத் தலைவருமான பா.செந்தில்நந்தனனும், சிறப்பு விருந்தினர்களாக குருநகர் நாட்டுக் கூத்து மன்றத் தலைவர் கலைமாமணி கிறகரி கிறிஸ்தோப்பரும், யாழ். மாவட்ட சி.அ.ஒ.கூட்டுறவுச் சங்கங் களின் ஒன்றிய உப தலைவர் கிருஷ்ணபிள்ளை இரத்தினராசாவும் கலந்து கொள்வர்.
நூல் வெளியீட்டுரையை 'தாயகம்' பிரதம ஆசிரியர் க.தணிகாசலம் நிகழ்த்துவார். நூலின் முதல் பிரதியை சட்டத்தரணி தேவராசா ரெங்கன் பெற்றுக் கொள்வார்.
ஆய்வுரைகளை பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன், பிரபல நொத்தாரிஸ் கவிஞர் எஸ்.ஜி. கணேசவேல் ஆகியோர் நிகழ்த்துவர். (வ)




## வேம்பொடுகேணி சி.சி.த.கவில் வகுப்பறைத் தொகுதி திறப்பு

பளை, நவ.15
பளை வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையில் சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தினரால் 25 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இரு மாடி வகுப்பறைத் தொகுதி உட்பட கட்டடங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு திறந்து வைக்கப் படவுள்ளன.
பாடசாலை அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் கலந்து கொள்வார்.
நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், பளைப் பிரதேச செய லர் திருமதி ப.ஜெயராணி, சுவிஸ் அபிவிருத்தி நிறுவன திட்ட முகாமையாளர் மார்ட் டீன் ஸ்ரூடர் ஆகியோரும்-
கௌரவ விருந்தினராக பளை கோட்டக் கல்வி அலுவலர் ம.ஆனந்தசிவமும் கலந்து கொள்வர்.
பாடசாலைக்கான மின் விநியோகம் அன்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
பாடசாலை வளாகத்தில் இரு மாடி வகுப்பறைத் தொகுதி, நவீன சமையல் கூடம், மாணவர் உணவு அருந்தும் மண்டபம், குளியலறையுடன் கூடிய கழிப்பறை, நீர்த் தாங்கி, உட்பட பல கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (வ-9)

## சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



பண்ணாகம், சுழிபுரத்தைச் சேர்ந்தவரும் ஓய்வுநிலை பிரதி நில அளவையாளர் நாயகமுமாகிய லயன் சரவணமுத்து கனகரசன் அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிவான் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.
வலிமேற்குப் பிரதேச சபை, வட்டு அரிமாக் கழகம் ஆகியவற்றின் உறுப்பினராகிய இவர், பண்ணாக ஒன்றியம் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்க தலைவரும் ஆவார். இவர் பண்ணாகம் மெய்கண்டான், சுழிபுரம் விக்ரோறியா, சுன்னாகம் ஸ்கந்தவரோதய மற்றும் இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும் ஆவார். (ஒ)

## பாராட்டு விழா

சுழிபுரம், நவ.15
வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினரும், ஓய்வு பெற்ற பிரதி நில அளவையாளர் நாயகமுமாகிய ச.கனகரசன், சமாதான நீதிவானாக பதவி ஏற்றமையைக் கௌரவிக்கும் வகையில், பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாராட்டு விழாவை சங்க மண்டபத்தில் ஏற் பாடு செய்துள்ளனர்.
சங்கத்தின் உப தலைவர் தி.முத்தரசன் தலைமையில் நடைபெறும் இந்தப் பாராட்டு விழா நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (ஒ)

**விஷேட் நீரிழிவு சிறுநீர் பரிசோதனை**
**நொதன் சென்றல் வைத்தியசாலை**

14.11.2014 உலக நீரிழிவு தடுப்பு தினத்தை முன்னிட்டு மெற்றோ போலிஸ் ஆதரவில் திருநெல்வேலி நொதன் சென்றல் வைத்தியசாலையில் 14.11.2014 தொடக்கம் 30.11.2014 வரை விசேட கழிவுடன் (Special discount package) நீரிழிவு சிறுநீர் பரிசோதனையுடன் கூடிய அனைத்து விதமான நீரிழிவு தொடர்பான இரத்தப் பரிசோதனைகளும் எம்மால் மேற்கொள்ளப்படும்.

(சி/17716) (4.6.3)

**முகாமைத்துவ பணிப்பாளர்.**

**டோஹாவில் "A" தரக் கம்பனியில் உடனடி வேலை வாய்ப்பு**

Dealers of Automotive & Heavy Equipment of Brand "TOYOTA" and "LEXUS" and also Services, Parts etc.,

| தொழில் | எண் | சம்பளம் |
|---|---|---|
| ஒட்டோ தொழில்நுட்பவியலாளர் AUTO TECHNICIAN | 19 | 2000 QR (72,000.00) |

ஓட்டோ மொபைல் எந்திரவியல் அல்லது டிப்ளோமா தகைமையுடன் டீசல் இயந்திரத்தில் வேலை செய்யக்கூடியதாக இருக்க வேண்டும், பகுதிகளை அறியக் கூடியதாகவும் நீரியல், மின்னியியல் முறைகளில் அனுபவமுள்ளவராகவும் கருவிகள் உபகரணங்களில் பழுதுகளை அறியக் கூடியவராகவும், வளைகுடா பகுதியில் அனுபவமுள்ளவராகவும் இருப்பது மேலதிக நன்மைபயக்கும்.

| தொழில் | எண் | சம்பளம் |
|---|---|---|
| (AUTO DENTER) ஒட்டோ டிங்கர் வேலை செய்பவர் | 10 | 2000 QR (72,000.00) |
| ஒட்டோ பெயின்ரர் (பெயின்ற் வேலை செய்பவர்) | 10 | 2000 QR (72,000.00) |
| இலகுரக வாகன சாரதி (செல்லுபடியாகும் சாரதி அனுமதி பத்திரம் அவசியம்) | 50 | 1600 QR (57,000.00) 1 QR = Rs. 35.88 |

இறுதி நேர்முகத்தேர்வு இம்மாதம் 16,17,18ஆம் திகதிகளில் வெளிநாட்டு அதிபர்களால் குருநாகலில் உள்ள புரடென்ஷல் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் நடைபெறும்.

**நிபந்தனைகள்**
* இரண்டு வருடகால ஒப்பந்தத்தை கொண்டது
* இலவச வைத்தியம் மற்றும் தங்குமிட வசதி
* வாரத்தில் 8 மணித்தியாலப் படி 6 நாள்கள் வேலை
* இரண்டு வருடங்களைப் பூர்த்தி செய்பவர்களுக்கு டோஹா-கொழும்பு இலவச விமான டிக்கட்
* மற்றையவை எல்லாம் டோஹா கட்டார் நாட்டின் தொழிலாளர் சட்டத்திற்கு அமையும்

(இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் அனுமதிக்கப்பட்டது என்பதை அறிவிப்படும்)

உங்கள் CV யை - prudential@sltnet.lk
(Subject எனும் பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவும்)
Visit our website - www.prudentialagency.lk
Prudential Forign Employment Agency (Pvt)Ltd,
No 108, Colombo Road, Kurunegala.
Tel: 077 9200500, 077 45 74 555 / 037 494 5555.
(Add app no: AL/2769/Advt38/14)

**தேவை**

கண்டியில் தங்கிநின்று வேலை செய்வதற்கு மேசன், கூலி வேலையாள்கள் தேவை. உணவு, தங்குமிடம் உண்டு. (54088)(5.6)
தொடர்பு: 077 371 5385

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**

தரம் 6 முதல் O/L வரையான கணித, விஞ்ஞான பாடங்களும் தரம் 10 மற்றும் 11 இற்கான ICT (Tamil, English Medium) வகுப்புக்களும் December 1 முதல் ஆரம்பம்
**Rapid IT Solution**
29, ராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி,
(ராஜா கிறீம் ஹவுஸ் அருகில்)
(சி17631) (12.6) TP:077 918 5724

**இடமாற்றம்**

**டயானா பிளாஸ்ரிக்**
108, பலாலி வீதி (இலுப்பையடிச் சந்தி)
* உடைந்த வாகன பிளாஸ்ரிக் ஒட்டுதல்.
* பழைய பிளாஸ்ரிக் வாங்குதல்.
* புதிய பிளாஸ்ரிக் தயாரித்தல்

(C/17542) (7.6.3)
தொடர்பு : 077 592 5088/021 222 8680

**COMPUTER COURSES**

Diploma in Computerized **Accounting** — Tally, Quick Book, Accpack, M.Y.O.B
Diploma in **Video Editing** — Premiere Pro CS6, Adobe Photoshop, Adobe AfterEffet, Pinnacle Studio,
Diploma in **AutoCAD** — 2D & 3D Modeling
Advanced Diploma in **Hardware & Networking**
**Java** (for Developers)
DMI COMPUTER EDUCATION
C/17630

முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (TVEC REG.NO P25/0056)

**DMI COMPUTER EDUCATION**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403 |
| நெல்லியடி | M.M.V.வீதி (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470 |
| சாவகச்சேரி | No.174, கண்டி வீதி, HNB அருகில் Tel. :021-227 0775 |
| சுன்னாகம் | KKS வீதி, NSB அருகில். Tel. :021-224 1970 |

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




10.11.2014 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுவிஞ்ஞானமாணிப் (M.Sc) பட்டம் பெற்ற
திருமதி
**ஜெ.லோ.ஆன்ஸ்ரறினா**
அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
**பாடசாலைச் சமூகம்**
**யா/புனித சாள்ஸ் ம.வி**
(54085)(10.6)

**70 ஆவது அகவையில்...**



ஓவியர் கலைவாரிதி, கலாபூஷணம்
**த.யோகநாதன்**
(யோகநாதன் ஆட்ஸ்)
கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக ஓவியத்தில் தன்னிகரில்லா படைப்புக்களை இலங்கையின் பல பகுதிகளிலும் மட்டுமன்றி வெளி நாடுகளுக்கும் தனது தூரிகையின் ஆற்றலை வெளிப்படுத்திய இவர் இன்று (15.11.2014) 70 ஆவது அகவையில் காலடி வைக்கின்றார்.
கலை உலகில் நீண்ட காலம் வாழ இறைவன் ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
வட்டூர் யோ.கேதீசன்,
(ஆசிரியர், ஓவியர் கலாபூஷணம் யோகநாதன் ஓவியக்கூடம்)
மருமகள்-தனுசா கேதீசன்
பேரப்பிள்ளைகள்:
கே.யதூர்சனா, கே.கவியாசினி.

காளிகோயிலடி, முளாய் வீதி, சுழிபுரம்.
077 974 3673
(54056)(4.3.6)

# தாமரைக்குளம் புனரமைப்பு

வலி.தென்மேற்கு, நவ.15

சுமார் 40 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் சுற்றி வர பெரிய மரங்கள் வளர்ந்து பற்றைக் காடாகக் காட்சியளித்த தாமரைக் குளம் எட்டரை லட்சம் ரூபா செல வில் புனரமைக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டம், பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கிளாலியில் அமைந்துள்ள தாமரைக் குளம் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் குளத்தைச் சுற்றிவர மரங்கள் வளர்ந்து காடு போல் காட்சியளித்தது.

அந்தக் குளத்தைப் புனரமைக்க வேண்டிய அவசியம் குறித்தும் அதனால் விவசாயிகளுக்கும் கால்நடைகளுக்கும் ஏற்படத்தக்க நன்மை குறித்தும் அந்தப் பகுதிக்கு பயணம் செய்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரிடம் விரிவாக எடுத்துக் கூறிய அந்தப் பகுதி மக்கள் அந்தக் குளத்தைப் புனரமைத்துத் தருமாறு கோரியிருந்தனர்.

(வ-115)

உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111

# கிளாலி றோ.க.த. பாடசாலை மாடிக் கட்டடம் இன்று திறப்பு

வலி.தென்மேற்கு, நவ.15

கிளாலிப் பகுதியில் சுவிஸ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் சுமார் ஒரு கோடி 50 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் மாடிக் கட்டடத்தின் திறப்பு விழா இன்று முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ்.கபிரியல் பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இந்தக் கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

110 அடி நீளமான இந்தக் கட்டடத்தில் ஆறு வகுப்பறைகள், நூல்நிலையம் மற்றும் அழகியற் கல்வி போன்ற பாடங்கள் இடம்பெறவுள்ளன.

கடந்த காலத்தில் ஏற்பட்ட போர்ச் சூழ்நிலையால் மேற்படி பாடசாலையிலுள்ள அனைத்துக் கட்டடங்களும் முற்றாகச் சேதமடைந்தன.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் உதவியினால் ஏற்கனவே 50 லட்சம் ரூபா செலவில் பாடசாலைக்கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (கு-115)

# சந்தையின் விற்பனை பிரிவுக்கு அடிக்கல்

தென்மராட்சி, நவ.15

சாவகச்சேரி நகர சபையின் பொதுச் சந்தை வளாகத்தில் 6 கோடி ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள சந்தை விற்பனைப் பிரிவுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெறும்.

நிகழ்வின் வரவேற்புரையை நாடு நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாணப் பணிப்பாளரும், சிறப்புரையை சாவகச்சேரி நகர சபையின் தலைவர் இ.தேவ சகயாம் பிள்ளையும் நிகழ்த்துவர். (கு-9)

# நூல்கள் அறிமுகம்

யாழ்ப்பாணம், நவ.15

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட கோண்டாவில் பொது நூலகம் நடத்தும் சிவத் தமிழ் வித்தகரின் 'நூல்கள் அறிமுகமும் நூலாசிரியர் கௌரவிப்பும்' நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோண்டாவில் இராம கிருஷ்ண மகாவித்தியாலய மண்டபத்தில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்த குமார் தலைமையில் நடைபெறும்.

(ரீ)

# நாடகப் போட்டி

கொழும்புத்துறை, நவ.15

கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் அரச ஊழியர்களுக்கு இடையில் நடத்தப்படும் 2014 ஆம் ஆண்டுக்கான விருது 'வழங்கும் கலைப் போட்டிகளில் தமிழ் மொழி மூல நாடகப் போட்டி யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ளது.

உடுவில் கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை இந்தப் போட்டிகள் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே போட்டிக்கான பிரதிகள் கலாசார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட நாடகப் பிரதிகளே இறுதிப் போட்டிக்காக நடித்துக் காட்டப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(வ-135)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

**சின்னப்பிள்ளை (இராசமணி) தங்கவேல்**



தோற்றம் 12.06.1948 | மறைவு 16.10.2014

கடந்த 16.10.2014 வியாழக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் சின்னப்பிள்ளை தங்கவேல் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (15.11.2014) சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக்கிரியைகளிலும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கொடிகாமம் வீதி, புலோலி தெற்கு, புலோலி.
021 226 3122 [52005][4.3.6]

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி காந்திமதி (காந்திமதி ரீச்சர்) இராஜகோபால்



யாழ்.உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காந்திமதி இராஜகோபால் (உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்) 13.11.2014 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா- சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராஜகோபால் (இலங்கை வங்கி - முன்னாள் இளைப்பாறிய உப முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவஞானம், செல்வரத்தினம், ஸ்ரீமதி, தேசோமயம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாக்கியம் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான செல்வநாச்சியார், சந்திரசேகரம் மற்றும் இராசலட்சுமி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனியும், சாரதலீலா (இலங்கை வங்கி, மானிப்பாய்) அவர்களின் அன்பு பெரியதாயும், சிவபாலனின் (கண்ணன் - முன்னாள் மின் இணைப்பாளர், யூரோவில்) மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.11.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10 மணியளவில் உரும்பிராய் வடக்கு எருலன் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(54099) (12.6)

தகவல்: பெறாமகள் - சாரதலீலா,
மருமகன் - சிவபாலன் (கண்ணன்)
TP: 077 484 3438, 021 223 0748

## மரண அறிவித்தல்

### தியாகராசா வெற்றிவேலு (வெற்றிமாஸ்டர்)



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், உசனை வதிவிடமாகவும் பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தியாகராஜா வெற்றிவேலு (வெற்றிமாஸ்டர்) 11.11.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.11.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப.2.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கொடிகாமம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

(54095) (12.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா சுந்தரராஜா



காரைநகர் இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், லண்டனை வதிவிடமாகவும், தற்போது 16B 1/1 அலோய் அவனியு, கொள்ளுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுந்தரராஜா 12.11.2014 புதன்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையா-மனோன்மணி தம்பதியரின் மூத்த புதல்வரும், ஜெயமதியின் அன்புக் கணவரும், மதுசூதனன், சங்கீதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரேஸ்வரி, காலஞ்சென்ற நடராஜா, சிறிஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.11.2014) சனிக்கிழமை (8Am - 5 Pm) ஜெயரட்ண மலர்ச்சாலை (பொரளை)இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (16.11.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30 மணியளவில் இறுதிக் கிரியைகள் ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று, மதியம் 12.00 மணியளவில் கனத்தை (பொறளை) இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி17484) (12.3.6)

தகவல்: பெறாமகன் - நடராஜா - செந்தில்குமார் - 071 411 8462

## கண்ணீர் அஞ்சலி



பிரதம தாதிய பரிபாலகராகக் கடமையாற்றி ஓய்வுபெற்று 10.11.2014 இல் இறைபதமடைந்த

**நல்லதம்பி கனகரட்ணம்**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம். அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், போதனாசிரியர்கள், துணை உத்தியோகத்தர்கள், தாதிய மாணவர்கள்
தாதியக் கல்லூரி, யாழ்ப்பாணம். (54061)(6.6)

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை, கொல்லங்கலட்டியில் வீடு, காணி + 9 பரப்புக் காணி விற்பனைக்கு.

தொடர்பு: 077 100 1390 (சி/17490) (4.6.3)

## அறைகள் நாள் வாடகைக்கு

ஒருவருக்கு 600/=, இருவர் 1300/=, நால்வர் 2000/=
6 Hours 450/= ஒருவருக்கு
**Hotel Villa City**
422, Galle Road, Wellawatte
T.P: 072 255 22 22. (C/16915) (10.6.3)

## விற்பனைக்கு

- தமிழ் ரைப்பிறைட்டர் 19' Long Carriage Halda.
- English ரைப்பிறைட்டர் 19' Long Carriage Optma.
- Morrice Minor Car 10 Sri - XXXX என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: க.நடேசன் சட்டத்தரணி, மதவடி வல்வெட்டித்துறை.
021 321 7725
(54096) (12.6)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **சிதம்பரம் இராசலிங்கம் (J.P)**
(ஓய்வுபெற்ற ஊழியர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை)



தோற்றம் 25.01.1934 | மறைவு 07.11.2012

அன்பின் ஊற்றாய் அமைதியின் பிறப்பிடமாய்
எமக்கு சிறந்த வழிகாட்டியாய் இருந்தீரே
ஈகையின் பெறுமதி மொழிந்த நீதிவானே
நீதியும் நிம்மதியும் நிறைந்த வாழ்வில்
எம்முடன் பழகிய நாள்கள் எத்தனை?
சோதிமயமான இறைவனுடன் இணைந்து
ஒளிவீசப் பிரார்த்திக்கின்றோம்
எம்மைவிட்டுப் பிரிந்து ஈராண்டுகள் என்ன
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உம் நினைவுகள் எம்மைவிட்டு நீங்காது.....

தேவாலய வீதி,
சங்கானை.

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

# மாதாந்தக் கூட்டங்களில் அநாகரிக வார்த்தைகள்

## திண்டாடுகிறார் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர்

வலி.தென்மேற்கு, நவ.15

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டங்களில் உறுப்பினர்கள் மத்தியில் ஏற்படும் முறுகல் நிலையினால் ஆக்ரோசமான சொற்போரும் அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களும் தொடர்ந்தவண்ணமிருக்கின்றன. இதனால் கூட்ட மண்டபம் அல்லோலகல்லோலப்படுகின்றது. அமைதியை நிலைநாட்ட முடியாத தவிசாளர் செய்வதறியாது திண்டாடுகின்றார்.

இதேநேரம் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களை மோதவிடாமல் தடுத்து நிறுத்துவதற்கும் சமரசப்படுத்துவதற்கும் சக உறுப்பினர்கள் படாதபாடுபடுகிறார்கள்.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் நவம்பர் மாதத்துக்கான கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பதில் தவிசாளர் எஸ்.மகேந்திரன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

பதில் தவிசாளரின் தலைமை உரையைத் தொடர்ந்து செயலாளரினால் கடந்த மாதக் கூட்டறிக்கை வாசிக்கப்பட்டுத் திருத்தங்களுடன் அங்கீகரிக்கப்பட்டது.

இதையடுத்து நிகழ்ச்சிநிரலின் படி கூட்டத்தை நடத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு பதில் தவிசாளர் உறுப்பினர்களை அடிக்கடி விநயமாகக் கேட்டவண்ணமிருந்தார். ஆனால் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தொடர்ந்து தெரிவித்த வண்ணமிருந்தனர். ஒரு கட்டத்தில் பதில் தவிசாளர் உரையாற்றிக் கொண்டிருந்த உறுப்பினரை அமருமாறு பணித்தபோதிலும், அவர் தனது கருத்தைத் தொடர்ந்து தெரிவித்தபோது, உம்மை சபையிலிருந்து வெளியேற்றுவதற்கு எனக்கு அதிகாரம் உள்ளது எனபதில் தவிசாளர் மிரட்டினார். ஆனால் மிரட்டலுக்கு அஞ்சாத உறுப்பினர் தனது கருத்தைப் பேசி முடித்து விட்டுத்தான் ஆசனத்தில் அமர்ந்தார்.

இதேவேளை- காக்கைதீவுச் சந்தை குறித்துச் சபையில் ஆராயப்பட்டபோது எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவருக்கும் ஆளும்கட்சி உறுப்பினர் ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து மோதல் உச்சக்கட்டத்தை அடைந்தது. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் ஆக்ரோசமான முறையில் தங்கள் கருத்துக்களைக் தெரிவித்தனர்.

ஒரு கட்டத்தில் பொறுமையை இழந்த எதிர்க்கட்சி உறுப்பினர் தனக்கு முன்னால் இருந்த பொருளை எடுத்து ஆளும் கட்சி உறுப்பினர் மீது வீசியபோது அந்தப் பொருள் குறி தவறிக் கீழே விழுந்துவிட்டது. இதனால் கூட்ட மண்டபம் சிறிது நேரம் அல்லோல கல்லோலப்பட்டதுமல்லாமல் அதிர்ந்தது.

இந்த நிலையில் பதில் தவிசாளர் அமைதியைக் காக்க முற்பட்டபோதும் அது கைகூடாததினால் செய்வதறியாது திண்டாடினார். இரு உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை கட்டுப்படுத்திச் சமரசப்படுத்துவதில் சக உறுப்பினர்கள் படாதபாடு பட்டனர்.

இதேவேளை, கூட்டம் ஆரம்பித்திலிருந்து முடியும் வரை வாதப்பிரதிவாதங்களுடன் காரசாரமான முறையில் இடம்பெற்றது. ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஆராயப்பட்ட சகல விடயங்களிலும் எதிரும் புதிருமாகவே தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். இந்த நிலை இவர்களுக்கிடையில் நிலவும் ஒற்றுமையின்மையை எடுத்துக்காட்டியுள்ளது.

கடந்த மாதம் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்திலும் எதிர்க்கட்சி,மற்றும் ஆளும் கட்சியைச் சேர்ந்த இதே உறுப்பினர்களுக்கிடையில் முறுகல் நிலை ஏற்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த-115)

# பொழுதை வீணே கழிக்கும் இளைஞர்களுக்குப் பயிற்சி

## புதிய திட்டத்தை முன்னெடுக்கிறது வலி.தென்மேற்குப் பிரதேச சபை

வலி.தென்மேற்கு, நவ.15

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் படிப்பை முடித்துவிட்டு வேலையை எதிர்பார்த்து வீடுகளில் முடங்கியிருக்கும் இளைஞர், யுவதிகளின் நலன் கருதி அவர்களைக் குறிப்பிட்ட காலங்களுக்குப் பயிற்சியாளர்களாக இணைத்துக்கொள்ள முன்வந்துள்ள வலி.தென்மேற்குப் பிரதேச சபை அவர்களுக்கு மாதாமாதம் சிறுதொகை ஊதியத்தை வழங்குவதற்காக 2015 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கவுள்ளது.

இதற்கான கோரிக்கையை ஆளும்கட்சி உறுப்பினரான கே.கௌரிகாந்தன் நிதிக்குழுக் கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் படிப்பை முடித்துவிட்டு வேலையை எதிர்பார்த்து வீட்டிலிருந்து பொழுதை வீணே கழிக்கும் இளைஞர், யுவதிகள் அந்தக் காலப் பகுதியில் வேலைகள் சம்பந்தமான பயிற்சியைப் பெறுவதற்காக வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் உதவியை நாடியுள்ளனர்.

இவர்களுக்கு பயிற்சிக் காலத்தின்போது குறிப்பிட்டளவு ஊதியம் வழங்குவதற்கு நிதி இல்லாததினால் இவர்களைப் பயிற்சியில் இணைத்துக் கொள்ள பிரதேச சபை தாமதித்து வருகின்றது. இவர்களின் நிலைப்பாட்டை உணர்ந்த ஆளும்கட்சி உறுப்பினர் கே.கௌரிகாந்தன் இரு பயிற்சியாளர்கள் வீதம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பயிற்சி வழங்குவதற்குச் சந்தர்ப்பம் வழங்குவதுடன் அவர்களுக்குக் கொடுப்பனவு வழங்குவதற்கு வசதியாக 2015 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்குமாறு நிதிக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்திருந்தார். (த-115)



காக்கைதீவுக் கடலில் கணவாய்கள் தற்போது அதிகளவில் பிடிக்கப்படுகின்றன. இந்தக் கடலில் தொழில் புரியும் சாவக்கட்டு மீனவர்களின் வலைகளிலேயே இவ்வாறான கணவாய்கள் அதிகமாக சிக்குகின்றன. இவை கிலோ 350 ரூபாவுக்கு மீனவர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு 400 ரூபாஅளவுக்கு காக்கைதீவுச் சந்தையில் வியாபாரிகளுக்கு விற்கப்படுவதாகச் சாவக்கட்டு மீனவர்கள் தெரிவித்தனர். ஆனால் இந்தக் கணவாய்களையோ அல்லது மீன்களையோ விற்பதற்கான வசதிகள் எவையும் காக்கைதீவு கடற்கரைச் சந்தையில் இல்லை என்றும்-இதனால் மழைகாலங்களில் வியாபாரிகள் துன்பப்படுவதாகவும், இரவில் வியாபாரம் செய்ய மின்சார வசதி இல்லை என்றும்- அவர்கள் குறைப்பட்டுக் கொள்கின்றனர். (த-21)

# மணியம்தோட்ட உள்ளக வீதிகளுக்கு தார் ஊற்றாமையால் மக்கள் இடர்

கொழும்புத்துறை, நவ.15

மணியம் தோட்டக் கிராம உள்ளக வீதிகள் கற்பாதைகளாக அமைக்கப்படாமையால் அந்தப்பகுதி மக்கள் போக்கு வரத்து மேற்கொள்வதில் தாம் பல சிரமங்களை எதிர்நோக்கு வதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதிக்கான பிரதான பாதை புதிதாகத் தார் வீதியாக அமைக்கப்பட்டுள்ளபோதிலும் குறுக்கு வீதிகள் மண் வீதிகளாகவே காணப்படுகின்றன.

நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வசித்து வரும் இந்தப் பகுதியில் தற்போது இந்திய வீட்டுத் திட்ட வீடுகள் முதற்தொகுதியாக அமைக்கப்பட்டு வருகின்றவேளையில் கட்டடப் பொருள்களைக் கொண்டு செல்வதில் பல இடர்பாடுகளை மக்கள் சந்திக்கின்றனர். மழை நேரங்களில் சுமையுடன் செல்லும் வாகனங்கள் மண்ணில் புதைவதால் சிரமங்கள் ஏற்படுகின்றன.

அதேவேளை, குடியிருப்பாளர்கள் தமது மோட்டார் சைக்கிள், ஒட்டோ போன்ற வாகனங்களை வீடுகளுக்குக் கொண்டு செல்ல மணற் பாதைகள் தடையாக இருப்பதாகக் கூறுகின்றனர்.

இந்த விடயத்தில் இந்தப் பிர



தேசத்தை நிர்வகிக்கும் உள்ளூராட்சிச் சபையினர் கவனமெடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-135)

# இயல் தமிழைப் பயிற்றுவிக்க யாழில் முதல் கலைக் கூடம்

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ்ப்பாணத்தில் முதல் முயற்சியாக முத்தமிழ்களில் ஒன்றான இயல் தமிழைப் பயிற்றுவிக்கும் நிறுவனமொன்று அறிவாலயம் என்னும் பெயரில் இயங்கி வருகின்றது. இதில் பாடசாலை மாணவர்கள் இணைந்து பயிற்சிகளைப் பெற்றுவருகின்றனர். பயிற்சிகளில் இணைந்து கொள்ள விரும்பும் பிள்ளைகள் தமது பெற்றோருடன் வருகைதந்து இணைந்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்பாக இந்த நிறுவனம் அமைந்துள்ளது. இந்த நிறுவனத்தில் நடைபெறும் பயிற்சிகள் நல்ல இலக்கியங்களைப் பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்தல், பிள்ளைகளின் வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டுதல், தமது கருத்துக்களைத் தயக்கமின்றி பலர் முன்னிலையில் உரிய வகையில் எடுத்துரைக்கும் மொழியாற்றலை வளப்படுத்தல், போட்டிகளுக்கு உரிய வகையில் தயார்ப்படுத்தி விருதுகளையும் பரிசுகளையும் வெல்லவைத்து தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பல், பயிற்சி விவாதக் களங்களை ஒழுங்கு செய்து விவாதிக்கும் ஆற்றலை மேம்படுத்தல், ஆற்றலும் தகைமையும் மிக்க ஆளுமையாளர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் ஆலோசனைகளின் அடிப்படையில் பேச்சாற்றல், எழுத்தாற்றலைப் புடம்போடல், நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்கும் திறனையும் அவற்றைத் தொகுத்து முன்னிலைப்படுத்தும் வல்லமையையும் வளர்த்தெடுத்தல், குடாநாட்டில் மட்டுமன்றி நாட்டின் பல பாகங்களிலும் நடைபெறும் இயல் நிகழ்வுகளில் பங்குபற்றும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல், தொலைக் காட்சி நிகழ்வுகளில் பங்குபற்றக் களம் அமைத்துக் கொடுத்தல் போன்ற நோக்கங்களை மையப்படுத்தி இந்தப் பயிற்சி நடைபெற்று வருகிறது.

வாராந்தம் சனிக்கிழமைகளில் மாலை 6 மணியிலிருந்து இரவு 8 மணிவரை ஒரு பிரிவாகவும், ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8.30 தொட்க்கம் முற்பகல் 10 வரை பிறிதொரு பிரிவாகவும் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. பயிற்சிகளில் இணைந்து கொள்ள விரும்பும் பிள்ளைகள் தமது பெற்றோருடன் வருகைதந்து இணைந்து கொள்ளமுடியும் என்று அதன் இயக்குநர் இ.சர்வேஸ்வரா தெரிவித்தார். (த-4)

# சாவகச்சேரி மருத்துவமனையில் 5 நாள்கள் இரத்தப் பரிசோதனை

தென்மராட்சி, நவ.15

சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதையடுத்து மருத்துவமனை ஆய்வு கூடத் தில் 5 நாள்கள் இரத்தப் பரி சோதனை உட்பட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த மருத்துவமனைக்கு மாகாண சுகாதார அமைச்சினால் கடந்த மாதம் நியமிக்கப்பட்ட நிரந்தர ஆய்வுகூட உத்தியோகத்தர்கள் கடமைகளைப் பொறுப்பேற்ற வேகத்தில் சொந்த இடங்களுக்கு விடுமுறையில் சென்று கடமைக்குத் திரும்பாததால் மருத்துவனைக்கு வரும் நோயாளர்களின் இரத்த மாதிரிகள் தனியார் ஆய்வு கூடங்களில் பணம் செலுத்தி அறிக்கை பெறவேண்டிய நிலை காணப்பட்டது.

இதனைக் கருத்தில் கொண்டு மருத்துவமனை நிர்வாகம் யாழ். பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டதையடுத்து வாரத்தில் மூன்று நாள்கள் மந்திகை ஆதார மருத்துவமனை ஆய்வுகூட உத்தியோகத்தரும், ஏனைய இரு நாள்கள் பிராந்திய நடமாடும் ஆய்வு கூட உத்தியோகத்தரும் வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் பரிசோதனைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் தினமும் சிகிச்சை பெறவரும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோரில் பெரும்பாலானோர் காய்ச்சல் மற்றும் வயிற்றுளைவினால் பாதிக்கப்பட்டவர்களெனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (த-9)

# கோடா வைத்திருந்தவருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், நவ. 15

சட்டவிரோதமாகக் கோடா மற்றும் கோடா தயாரிக்கும் உபகரணங்கள் என்பவற்றை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கோடா மற்றும் கோடா தயாரிக்கும் உபகரணங்கள் என்பவற்றை கைவசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் நெல்லியடிப் பொலிஸாராலும் மதுவரித் திணைக்கள் அதிகாரிகளாலும் கைது செய்யப்பட்டிருந்தார். குறித்த சந்தேகநபர் நேற்றையதினம் பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் கஜநிதிபாலன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் கோடாவை உடைமையில் வைத்திருந்ததற்காக 50 ஆயிரம் ரூபாவையும், தயாரிக்க பயன்படுத்தப்படும் உபகரணத்தை வைத்திருந்ததற்காக 50 ஆயிரம் ரூபாவையும் தண்டமாக விதித்து தீர்ப்பளித்தார். (த-109)

# சம்பள அதிகரிப்பு ஏமாற்று; வேலை சுற்றறிக்கையும் தமிழில் இல்லை

## தமிழ் ஆசிரியர்கள் கடும் விசனம்

அச்சுவேலி,நவ.15

இலங்கை ஆசிரியர் சேவைக்கான புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் ஆசிரியர்களுக்கான பதவிஉயர்வு மற்றும் சம்பள அளவுத் திட்டங்களை மாற்றியமைப்பதற்கான புதிய சுற்றறிக்கையை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

தனிச் சிங்கள மொழியில் வெளிவந்துள்ள இந்தச் சுற்றறிக்கை தேசிய மொழிக் கொள்கைக்கு அமைய சமகாலத்தில் தமிழ் மொழியில் வெளியிடப்படவில்லை என்று தமிழ் ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள ஆசிரியர் பதவி உயர்வு தொடர்பான சுற்றறிக்கையினால் ஆசிரியர்களுக்கான சம்பள அதிகரிப்பு 105 ரூபாவில் இருந்து 1650 வரையிலேயே ஏற்படும். இதன் மூலம் ஆசிரியர்களை அரசு ஏமாற்றமடைய வைத்துள்ளது.

இதனால் எமது போராட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். ஆசிரியர், அதிபர்களுக்கான சம்பளம் அதிகரிக்கும் வகையில் கல்வி அமைச்சு 2010 ஆம் ஆண்டு வெளியிட்ட இடைக்காலச் சம்பள மீளாய்வு அறிக்கையைத்தானும் நடைமுறைப் படுத்த முன் வரவேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் யோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர், அதிபர் சேவைக்கான புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் ஆசிரியர் பதவி உயர்வு தொடர்பான 2014/35 சுற்றறிக்கை தொடர்பாக யோசேப் ஸ்ராலின் தகவல் தெரிவிக்கையில்,

அதிபர் ஆசிரியர் சேவைக்கான சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் 2008ஆம் ஆண்டுகாலப் பகுதியில் வெளியிடுவதற்கு கல்வி அமைச்சு முன் வந்த வேளையில் அதற்கு தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தன. அதே பிரமாணக் குறிப்புக்களை 6 வருடங்கள் கடந்த நிலையில் கல்வி அமைச்சு கடந்த மாதம் வெளியிட்டுள்ளது. அத்துடன் ஆசிரியர் சேவை பதவி உயர்வு தொடர்பாக 2014/35 சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது. இவற்றை இலங்கை ஆசிரியர் சங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை.

6 வருடங்களுக்கு முன்பே ஏற்றுக்கொள்ள முடியாதது தேர்தலை முன்னிட்டு வெளியிடப்பட்டிருப்பதன் மூலம் ஏற்றுக் கொள்ள முடியுமா? 35/2014 சுற்றறிக்கை பிரகாரம் ஆசிரியர் சேவையில் உள்ளவர்களுக்கான சம்பள அதிகரிப்பு 105 ரூபாவில் இருந்து 1650 ரூபா வரையிலானதே. பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆயிரம் ரூபாவுக்கு குறைவான சம்பள அதிகரிப்பையே பெறமுடியும்.

2008/6 சுற்றறிக்கைக்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்த போது கருத்தில் கொள்ளப்படவில்லை. 2010ஆம் ஆண்டு இடைக்காலச் சம்பள மீளாய்வு அறிக்கையைக் கல்வி அமைச்சு வெளியிட்டது. பின்னர் அதனையும் நடைமுறைப்படுத்தவில்லை. 2010 ஆம்ஆண்டு கல்வி மீளாய்வு அறிக்கையை கல்வி அமைச்சு வெளியிட்டது. பின்னர் அதனையும் நடைமுறைப்படுத்தவில்லை. குறைந்தது 2010ஆம் ஆண்டு கல்வி அமைச்சு வெளியிட்ட இடைக் காலச் சம்பள மீளாய்வு அறிக்கையையாவது நடைமுறைப் படுத்தவேண்டும்.

எமது நிலைப்பாட்டினை கல்வி அமைச்சுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். அண்மையிலும் ஆசிரியர்கள் போராட்டத்தை நடத்தினோம். தொடர்ந்து எமது எதிர்ப்பினை உரிய முறையில் வெளிப் படுத்துவோம் எனக் கூறினார். (த-11)



## பாப்பரசருக்கு நினைவுக் காணிக்கை

கொழும்புத்துறை, நவ.15

இலங்கைக்கு வருகை தரவிருக்கும் பாப்பரசர் பிரான்சிஸ்ஸுக்கு யாழ்.மறை மாவட்டம் சார்பாக நினைவுக் காணிக்கையொன்று வழங்கப்படவுள்ளதாக யாழ். ஆயர் இல்லச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கமைவாக எதிர்வரும் டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி ஞாயிறு திருப்பலியில் சேகரிக்கப்படும் காணிக்கை பயன்படுத்தப்படவுள்ளதால் மனமுவந்து அன்றைய காணிக்கைகளை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-135)

# 226 குடும்பங்களுக்கு வீட்டு உதவித் திட்டம்

## வீடமைப்பு அதிகார சபையின் யாழ். முகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம், நவ 15

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 226 குடும்பங்களுக்கு வீடுகள் நிர்மாண மற்றும் புனர்நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதன் யாழ். மாவட்ட முகாமையாளர் என்.ராஜேந்திரன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு மற்றும் பொறியியல் நிர்மாண அமைச்சர் விமல் வீரவன்சவின் பணிப்புக்கு அமைய இந்த வீட்டு நிர்மாணம் மற்றும் புனர்நிர்மாண வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இதனடிப்படையில் இந்த வருடம் 226 குடும்பங்களுக்கான வீட்டு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அதில் 66 சாதாரண பொது மக்களுக்கு குறைந்த கடன் திட்டத்தின் கீழும், 55 அரச உத்தியோகத்தர்களுக்கும், 100 குடும்பங்களுக்கு மிக வறுமைப்பட்ட குடும்பங்கள் என்ற அடிப்படையிலும், மேலும் 5 வீடுகள் மானிய அடிப்படையிலும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சாதாரண குடும்பங்களுக்கு 7.7 மில்லியன் ரூபாவும், அரச உத்தியோகத்தர்களுக்கு 14.8 மில்லியன் ரூபாவும், வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு 8.2 மில்லியன் ரூபாவும், மானிய அடிப்படையில் வழங்கப்பட்ட 5 வீடுகளுக்கு .0.5 மில்லியன் ரூபாவுமாக 31.29 மில்லியன் ரூபா கடனுதவிகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார். அத்துடன் கடந்த ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் 50 குடும்பங்களுக்குக் காணி உறுதிகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (த-106)



## உலக நீரிழிவு தினத்தையொட்டி 3 இடங்களில் மருத்துவ முகாம்

வவுனியா, நவ.15

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு மூன்று இடங்களில் அடிப்படை வைத்திய பரிசோதனை நேற்றுக் காலை வவுனியா பிராந்திய சுகாதார வைத்திய பணிமனையினால் மேற்கொள்ளப் பட்டது. வவுனியா பிரதேச செயலகம், செட்டிக்குளம் பிரதேச செயலகம், வவுனியா பஸ் நிலையம் ஆகிய இடங்களில் இந்த வைத்திய பரிசோதனை இடம்பெற்றது.

வவுனியா பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு வைத்தியர்களான எஸ்.டேமியன், எஸ்.டி.வாணிசிறி, திருமதி கே.சந்திரிக்கா, எஸ்.சூரியகுமார், எஸ்.மதிதரன் ஆகியோர் வைத்தியப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது மனஅழுத்தம், குருதி அமுக்கம், நீரிழிவு நோய்ப் பரிசோதனை, உடல் நிறை வேறுபாடுகள் குறித்த பரிசோதனைகள் இடம்பெற்றன.

இதேபோன்று வவுனியா பஸ்நிலையத்தில் பயணிகள், சாரதிகள், வர்த்தகர்கள் ஆகியோருக்கும், செட்டிகுளத்தில் அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் பலருக்கும் இந்தப் பரிசோதனைகள் இடம்பெற்றன. ஆரோக்கியமான காலை உணவை ஆரம்பியுங்கள் என்ற தலைப்பில் உலக நீரிழிவு தினம் வவுனியா பிராந்திய சுகாதார வைத்திய பணிமனையால் ஏற்பாடு செய்யப்பட்டது. (த-402)

# வெளிக்குளம் கனிஷ்ட பாடசாலை மாணவரின் பெற்றோர் போராட்டம்

## கற்றல் செயற்பாட்டில் முன்னேற்றம் காணக் கோரிக்கை

வலி.தென்மேற்கு, நவ.15

வவுனியா வெளிக்குளம் கனிஷ்ட பாடசாலையின் கற்றல் செயற்பாட்டில் ஏற்பட்டுள்ள பின்னடைவைத் தவிர்த்து முன்னேற்றம் காணுமாறு கோரிக்கை விடுத்து ஆர்ப்பாட்டம் ஒன்று குறித்த பாடசாலை மாணவர்களின் பெற்றோரால் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதன்போது ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்குப் போதிய ஒத்துழைப்பைப் பாடசாலை அதிபர் வழங்காமை குறித்த வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளைத் தாங்கியிருந்தனர்.



போராட்டம் குறித்து அறிந்த வ்வுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா பாடசாலைக்குச் சென்று பெற்றோர், அதிபருடன் கலந்துரையாடினார். சுமார் இரண்டு மணித்தியாலங்கள் இவர்களுக்கிடையில் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றன.

அதிபர் விவேகானந்தா சபை சைவ பரிபாலன சபைப் பரீட்சைகளை நடத்த முன்வரவில்லை, பாடசாலையின் பௌதீகவளங்களின் முன்னேற்றம் இன்மை, பாடசாலை மாணவர்களின் பெறுபேறுகளில் வீழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு விடயங்களைப் பெற்றோர் வலயக்கல்விப் பணிப்பாளருக்குச் சுட்டிக்காட்டினர்.

இதன்போது கருத்து வெளியிட்ட வலயக் கல்விப் பணிப்பாளர், மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் அதிபர் மட்டுமல்ல பெற்றோரும் ஒத்துழைக்கவேண்டும். பெற்றோர் பாடசாலை அதிபருடன் தொடர்ந்து தமது பிரச்சினைகளை முன்வைக்கவேண்டும். பாடசாலை குறைபாடு தொடர்பாக என்னிடம் தெரியப்படுத்தலாம். பாடசாலை அபிவிருத்தி சங்கத்துக்கும் பாடசாலைக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற வேண்டும். இந்தப் பாடசாலையில் கற்றல் செயற்பாட்டில் ஏற்பட்டிருக்கும் பின்னடைவுகளை நிவர்த்திக்க நானும் முன்வந்து உதவத் தயாராகவுள்ளேன். அதிபரை எல்லாவற்றுக்கும் குறை சொல்வதைத் தவிர்ப்போம். எல்லோரும் சேந்து மாணவர்களின் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பாடுபடுவோம், அதிபரை அர்ப்பணிப்புடன் பணியாற்ற நான் உற்சாகமூட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (த-402)

## சளிப்படல மாதிரிப் பரிசோதனை பண்ணையில் மேற்கொள்ள வசதி

யாழ்ப்பாணம், நவ.15

பண்ணை மார்பு நோய்ச் சிகிச்சைப் பிரிவில் சளிப்படல மாதிரிப் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கான சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. தற்போது நாளாந்தம் 50 பேருக்குச் சளிப் படல மாதிரிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

கடந்த காலங்களில் சளிப்படல மாதிரிப் பரிசோதனை மேற்கொள்வதற்கு உபகரணங்கள் இல்லாத காரணத்தால் காசநோயின் தாக்கத்தை இனங்காண முடியாது நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். சாதாரண நோயாளிகளுக்கு சளிப் பரிசாதனைகள் மேற்கொள்ளக்கூடியதாகத் தற்போது உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதால் சளிப்படல மாதிரிப் பரிசோதனைகள் பண்ணை வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, சளி வளர்ப்புப் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கான வசதிகள் இங்கு இல்லாதபோதும் கொழும்புக்கு அனுப்பிப் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. (த-14)

## 106 மாணவர்கள் கௌரவிக்கப்படுவர்

இவ்வருடம் இடம்பெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் கரவெட்டி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச எல்லைக்குள் வசிக்கும் சித்தியடைந்த 106 மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். இப்பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வின்போது இம்மாணவர்களுக்கான கௌரவிப்பு இடம்பெறும் என கரவெட்டி வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசு தெரிவித்தார். (த-173)




கொழும்பு துறைமுக சுங்கத்திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் சோதனை செயன்முறைகள் வெகு தாமதமாக முன்னெடுக்கப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ள இலங்கை கொள்கலன் சாரதிகள், உதவியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் அந்தச் செயன்முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர். ஆயினும் குறித்த பணிப் புறக்கணிப்புப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்று துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் திட்ட அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன தெரிவித்துள்ளார். (ற)

# வேட்பாளராக ரணிலே களமிறங்க வேண்டும்

## சரத் பொன்சேகா கூறுகின்றார்



கொழும்பு, நவ.15

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக ரணில் விக்ரமசிங்கவே போட்டியிட வேண்டும் என்று கோரியுள்ளார் ஜனநாயகக் கட்சியின் தலைவரான முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன் சேகா. சிகிச்சைக்காக சிங்கப்பூர் சென்றிருந்த பொன்சேகா நேற்றுக்காலை நாடு திரும்பியுள்ளார். இந்தநிலையிலேயே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார். ரணில் விக்ரமசிங்க பொது வேட்பாள ராக போட்டியிட வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை அவர் நேற்று முற்பகல் ரணிலிடம் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

பொன்சேகாவின் இந்த யோசனையை சமகி சக்தி அமைப்பில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான கட்சிகளும் அமைப்புகளும் ஏற்றுக் கொண்டுள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரான நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசீம் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றில் பொது வேட்பாளராக போட்டியிட மிகத் தகுதியானவர் ரணில் விக்ரமசிங்க என்றே முடிவுகள் குறிப்பிடுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# கருவால் வெல்ல முடியாது

*- பீலிக்ஸ் பெரேரா*

கொழும்பு, நவ.15

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக கருஜயசூரிய களமிறக்கப்பட்டாலும், அவரால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்று கூறியுள்ளார் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா . நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமை வேட்பாளராக போட்டியிட்டவர் கரு ஜயசூரிய. ஆனாலும் அவரால் மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெறமுடியவில்லை. முதன்முதலாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட உபேக்ஷா சுவர்ணமாலியை விடவும் குறைவான வாக்குகளையே பெற்றார்."- என்றும் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

"இப்படியான நிலையில் கரு ஜயசூரியவால் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிட்டு என்ன சாதிக்க முடியும்? ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கும் வாக்குகளைக் கூட அவரால் பெற முடியாது போய்விடும். இன்னொரு புறத்தில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் கரு ஜயசூரிய தான் என்பதை எவரும் இதுவரை பகிரங்கமாக அறிவிக்கவில்லை.

இதுவரை அவர்களால் ஒரு வேட்பாளரை ஒருமனதாக தெரிவு செய்ய முடியவில்லை. அவ்வாறிருக்க தேர்தலில் அவர்கள் எவ்வாறு வெற்றி பெற முடியும்"- என்றும் அவர் அங்கு கேள்வியெழுப்பியுள்ளார். (ற)

# தனி இராச்சியத்துக்கு அடிக்கல் நடுகிறார் வடக்கு முதலமைச்சர்

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு



கொழும்பு, நவ.15

மாகாண சபைகளுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்களை நீக்கிய பின்பே வடக்கு மாகாண சபை தேர்தல் நடத்தப்பட்டிருக்க வேண்டும். அதை விடுத்து வட மாகாண சபை தேர்தலை நடத்தியதே அரசு விட்ட பெரிய பிழையாகும் - என்று தெரிவித்துள்ளார் ஜாதிக ஹெல உறுமையவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க.

நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இன்று வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி தனி இராச்சியத்துக்கான அடித்தளத்தை ஏற்படுத்திவிட்டார். மதவழமைச் சட்டம், தேச வழமைச் சட்டங்களை நீக்கி முழு நாட்டுக்கும் ஒரே சட்டத்தை கொண்டுவருவதோடு, மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை நீக்க வேண்டும். பிரிவினையைத் தூண்டும் மாகாண சபை அதிகாரத்துக்கு இனி ஒரு போதும் சந்தர்ப்பம் அளிக்கக் கூடாது.

இது தொடர்பான கோரிக்கைகளை நாம் அரசிடம் முன் வைத்துள்ளோம். மாகாண சபைகளின் அதிகாரத்தை முற்றாக நீக்காது வடக்கு் மாகாண சபை தேர்தலை நடத்தி அரசு மீண்டும் தவறு செய்து விட்டது.

அன்று பிரபாகரன் அதிகாரம் இல்லாது வடக்கை ஆட்சி செய்தார். இன்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் சிவில் அதிகாரத்தை மீறி மாகாண அதிகாரத்துடன் வடக்கைத் தனி இராச்சியமாக்க அடித்தளம் அமைக்கின்றார். ஒரு புறம் சிவில் மறுபுறம் மதம் சம்பந்தப்பட்ட சட்டங்களை பயன்படுத்தி பிரிவினைவாதத்தை ஏற்படுத்துக்கின்றார். ஆகவே சகலருக்கும் ஒரே சட்டத்தை நாட்டில் நடைமுறைப்படுத்த வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# பகிடிவதை; சப்ரகமுவ மாணவருக்கு வகுப்புத் தடை

கொழும்பு, நவ.15

மாணவர்கள் சிலரை பகிடிவதைக்கு உட்படுத்திய சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் 10 பேருக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ பீடத்தின் 10 மாணவர்களுக்கே வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று பல்கலைகழகசிரேஷ்ட மாணவ ஆலோசகர் கலாநிதி மஞ்சுள சுமித் தெரிவித்துள்ளார்.

புதிய மாணவர்கள் சிலரை பழைய மாணவர்கள் கடந்த 6ஆம் திகதி பகிடிவதைக்கு உட்படுத்துவதாகத் தெரிய வந்தை அடுத்து விரிவுரையாளர்கள் புதிய மாணவர்களை காப்பாற்றியுள்ளனர். பகிடிவதை சம்பவத்துடன் மேலும் சில சிரேஷ்ட மாணவர்கள் சம்பந்தப்பட்டுள்ளமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட மாணவ ஆலோசகர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# பிரதமர் பதவிக்கான கனவுகள் இல்லை

## அமைச்சர் மைத்திரிபால மனம் திறந்தார்

கொழும்பு, நவ.15

பிரதமர் பதவி குறித்த கனவுகள் எனக்குள் இல்லை என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"நான் முன்பு என்ன நிலையில் இருந்தேன் என்பதும், இப்போது எந்த நிலையில் இருக்கிறேன் என்பதும் எனக்கு நன்றாகவே தெரியும். எனது தற்போதைய வளர்ச்சி குறித்த திருப்தி எனக்குள் இருக்கின்றது.

ஒருசிலர் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடப் போகின்றேன் என்று கதை கட்டிக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர் அரசில் பிரதமர் பதவி எனக்கு கிடைக்க இருக்கின்றது என்று தெரிவிக்கின்றனர். பிரதமர் பதவி குறித்த ஆசை எல்லாம் எனக்குள் இல்லை. தற்போதுள்ள அமைச்சுப் பொறுப்பில் நான் திருப்தியடைகின்றேன்."- என்றும் அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறும்போது,

"ஆளுங்கட்சியை விட்டு எதிர்க்கட்சி வரிசைக்குச் செல்லவோ, எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக போட்டியிடுவது குறித்தோ நான் கனவிலும் சிந்திக்கவில்லை. எங்களுடைய பொது வேட்பாளர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான். அவருடைய வெற்றிக்காக பாடுபடுவதே எங்கள் நோக்கம்"- என்று குறிப்பிட்டார். (ற)

# 35 ஆயிரம் பேருக்கு நிரந்தர நியமனமாம்

## ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க கூறுகின்றார்

கொழும்பு, நவ.15

அரச சேவையில் பணியாற்றும் முறைசாரா மற்றும் தற்காலிக ஊழியர்கள் 35 ஆயிரம் பேருக்கு நிரந்த நியமனம் வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த 2015 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் அதற்கான பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் தபால் சேவை ஊழியர்களுக்கு இடையில் அண்மையில் அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போது ஜனாதிபதியின் செயலாளர் இதனைக் கூறியுள்ளார்.

"முறைசாரா மற்றும் தற்காலிகமாக பணியாற்றும் ஊழியர்கள் அனைத்து அரச நிறுவனங்களிலும் உள்ளனர். தபால் திணைக்களத்தில் இப்படியான ஆயிரத்து 500 ஊழியர்கள் பணிப்புரிந்து வருகின்றனர். நாளாந்தச் சம்பளம் என்ற அடிப்படையில் பணிப்புரிந்து வரும் இந்த ஊழியர்கள் ஏனைய அரச ஊழியர்கள் அனுபவிக்கும் சிறப்புரிமைகளை அனுபவிப்பதில்லை.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் இந்த முறை சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதுவரை தாக்கல் செய்யப்பட்ட வரவு-செலவுத் திட்டங்களில் இப்படியான வரப்பிரசாதங்கள் வழங்கப்பட்டதில்லை" - என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# கொஸ்லந்தையில் 131 குடும்பங்கள் இடம்பெயர்வு

## மண் சரிவு ஏற்படும் என்ற அச்சத்தால்

கொஸ்லாந்தையில் மண் சரிவு ஏற்படும் என்ற அச்சத்தால் இடம்பெயர்ந்த 131 குடும்பங்களைச் சேர்ந்த 464 பேர் சிறி கணேசா தமிழ் வித்தியலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 29ஆம் மண்சரிவு இடம்பெற்ற மீரியாபெத்த தோட்டத்துக்கு அருகிலேயே நேற்றுமுன்தினம் நில வெடிப்பொன்று அவதானிக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து கட்ட ஆய்வு நிறுவகம் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில், அங்கு மண்சரிவு ஏற்படுவதற்கான ஆரம்பக் குறியீடுகள் தென்பட்டன என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ற)

## தாய்ப்பால் தரும் ஆரோக்கியம்



குழந்தைக்கு தாய்ப்பால் சத்தான உணவு என்பது அனைவருக்கும் தெரியும். இதில் புரோட்டீன், கால்சியம் சத்துக்கள் உள்ளன. அது குழந்தையின் உடலுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை அளிக்கிறது. அதில் நிறைய நுண் ஊட்ட சத்துக்கள் இருப்பதால் செரிமான தன்மை அதிகம் உள்ளது. இதனால் குழந்தையின் உடல் நலத்துக்கு தாய்ப்பால் மிகவும் அவசியமானது என அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. இவை அனைத்துக்கும் மேலாக தாயின் உணர் வலைகளை குழந்தைகளுக்கும் ஊட்டும் திறன் படைத்தது என்ற புதிய தகவல் தெரிய வந்துள்ளது. தாய்ப்பாலின் 'பிரோமோன்' என்ற இரசாயன சிக்னல் (சமிக்ஞை) உள்ளது. அது தாயிடம் இருந்து குழந்தைக்கு உணர்வலைகளை கடத்துகிறது. மேலும் குழந்தைகளின் உடல் திறன் வளர்ச்சி அடைய வழி வகுக்கிறது.

## தினமும் பீன்ஸ் சாப்பிடுவதால்

பீன்ஸ், கலந்த உணவைத் தினமும் சாப்பிடுபவர்களுக்கு நுரையீரல் பாதிப்பு ஏற்படும் வாய்ப்புகள் கணிசமாகக் குறைந்துள்ளது. தற்போது மாறிவரும் கர்லக்கட்டத்தில் நமது உடல் நலத்தின் மீது அக்கறை என்பது அவசியமானதாகும். புகைபிடித்தல், புகையிலை பொருள்களை பயன்படுத்துதல், போன்றவற்றால் பாதிக்கப்பட்டு வந்த நுரையீரல் காற்று மாசுப்படுதலாலும் அதிகம் பாதிக்கப்படுகிறது. இதனால் நுரையீரல் புற்றுநோய், நெஞ்சுசளி, மூச்சுத்திணறல் மற்றும் பல்வேறு சுவாசக் கோளாறுகள் போன்ற நோய்கள் மனிதனைத் தாக்குகின்றன. மருத்துவத்துறையில் பல்வேறு மருந்துகள் இருந்தாலும், ஆரோக்கியான உணவுகளை உண்பதன் மூலம் நம்மைக் காத்துக் கொள்ளலாம். தினமும் சுமார் 50 கிராம் பீன்சை உட்கொண்டால் நுரையீரல் தொடர்பான நோய் தாக்குதலில் இருந்து 90 சதவீதம் வரை மனிதனுக்கு நோய் ஏற்படாது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். குறிப்பாகப் பச்சை பீன்சில் விற்றமின்; பி6, விற்றமின்; சி, விற்றமின்; கே மற்றும் மாங்கனீசு ஆகிய சத்துகள் அதிகம் உள்ளன. இது தவிர புரோட்டீன் சத்தும் பச்சை பீன்சில் அதிகம் உள்ளது. அதனால் பீன்சை முழுவதுமாக வேகவைப்பதைக் காட்டிலும் அரை வேக்காட்டுடன் சாப்பிடுவது சிறந்தது. பீன்சை வேகவைக்கும்போது அந்தத் தண்ணீரைக் கீழே ஊற்றாமல் சாம்பார் அல்லது சூப் தயாரிக்கப் பயன்படுத்துவதன் மூலம் பீன்சின் முழுசத்துகளையும் பெறமுடியும்.






உதயன்
15.11.2014







# வளைந்து நெளிந்து செல்லும் பாதை

# குதிரைச் சாணத்திலிருந்து மருந்து

குதிரை சாணத்தில் வளரும் காளானைப் பயன்படுத்தி, பக்றீரியாக்கள் சிலவற்றை அழிக்க முடியும் என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

உலகளாவிய ரீதியில் பலரின் உயிர்களைக் காவுகொள்ளும் பக்றீரியாக்களை அழிப்பதற்காகப் புதிய மருந்துகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று, பல விஞ்ஞானிகள் தமது ஆயுள் காலத்தை ஆய்வு கூடத்தில் செலவளித்துள்ளமை நாம் அறிந்ததே.

இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், பக்றீரியாக்களை அழிப்பதற்கு சிறந்த மருந்தாகக் குதிரை சாணத்தில் வளரும் காளானை சுவிட்ஸர்லாந்திலுள்ள விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இது அருவருக்கத்தக்க விடயம் என்றாலும் அந்தக் காளான் மருந்தாகவே கருதப்படுகின்றது. இது மற்றைய காளான்களை விட வித்தியாசமாகவும் கருஞ்சாம்பல் நிறத்தையும் கொண்டிருக்கும். இந்தச் சாம்பல் காளானானது உயிர்வேதியியல் வகையைச் சேர்ந்தது என்பதால், இதில் புரதம் அடங்கியுள்ளது. இது பாரம்பரிய உயிர் கொல்லியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பேராசிரியர் மார்கஸ் தலைமையிலான குழுவினால் கண்டுபிடிக்கப்பட்ட இந்தக் காளானை, இனி எவ்வாறு மருந்தாகப் பயன்படுத்தி, எந்த முறையில் மனித உடலுக்கு உட்செலுத்தலாம் என்பது தொடர்பான ஆராய்ச்சிகளைக் குறித்த குழு தற்போது மேற்கொண்டு வருகின்றது.



# ரிலாக்ஸா வாசியுங்க



ஓர் இடத்தில் அமெரிக்கா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ளவர்கள் இருந்தனர். அவர்களுடன் தமிழன் ஒருவனும் இருந் தான். அவர்கள் முன் நான்கு அறைகள் காணப்பட்டன.

அதில் முதல் அறையில் தங்கமும், இரண்டாவது அறையில் வைரமும், மூன்றாவது அறையில் வெண்கலமும், நான்காவது அறையில் இரும்புப் பொருள்களும் இருந்தன. கடவுள் அவர்களிடம் என்ன வேண்டும் என்று கேட்டார்.

**அமெரிக்கன் :** எனக்கு வைரம் வேண்டும் என்றான்.

**சீனாக்காரன் :** எனக்குத் தங்கம் வேண்டும் என்றான்.

**ஜப்பான்காரன்:** எனக்கு வெண்கலம் வேண்டும் என்றான்.

கடைசியாகத் தமிழனுக்கு வெறும் இரும்பு மட்டுமே கிடைக்கும் என்று மற்ற நாட்டவர்கள் எண்ணிக் கொண்டிருக்கையில்,

தமிழன் எனக்கு அந்த நான்கு அறைகளின் சாவி வேண்டும் என்று கேட்டு அந்த நான்கு பொருள்களையும் பெற்றுக் கொண்டான்.


தமிழன்டா....!

# அஜித்தை பிரதியடித்த விவேக்

தல அஜித் நடிப்பில் உருவாகி வரும் 'என்னை அறிந்தால்' திரைப்படம் எடுத்து முடிவடையும் நிலையில் உள்ளது.

இந்த நிலையில் அண்மைக் காலமாக நடிகர் விவேக், அஜித் பாணியில் வலம் வந்தார். இதை ரசிகர்கள் விசாரித்த போது அஜித் தான் என்னை அவ்வாறு வைக்கச் சொன்னார் என்று ருவிட்டர் பக்கத்தில் விவேக் தெரிவித்தார்.

இதற்கு ரசிகர்களின் ஆதரவு கூடியதும் ஓர் உண்மையை விவேக் கக்கி விட்டார். என்னை அறிந்தால் திரைப்படத்தில் அஜித்தும் நானும் ஒரே மாதிரியான கெட்டப்பில் கலக்க உள்ளோம் என்று அவரது ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.



## அடி பிக்காளி சிருக்கி!



# அடித்துக் கொன்ற ஆசிரியர்

ஆங்கிலம் பேசவில்லை என்பதற்காக ஆசிரியரொருவர் மாணவனை அடித்துக் கொன்ற சம்பவம் இந்தியாவில் இடம்பெற்றுள்ளது.'

இந்தியாவின், தெலுங்கானா மாநிலம் திருமலைகரி கிராமத்தில் வசித்து வந்த, இராமவத் சந்து என்று கிராமவாசிகளால் அறியப்பட்ட 6 வயது சிறுவனே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சிறுவன் தனியார் பாடசாலையில் கல்விகற்று வந்துள்ளான்.

மாணவன் ஒருநாள் பாடசாலைக்குத் தாமதமாகச் சென்றுள்ளான். இதனால் கோபமடைந்த ஆசிரியை, கைகளால் மாணவனைத் தாறுமாறாக அறைந்துள்ளார். இது தவிர மாணவன் தெலுங்கு மொழியைப் பேசியதற்காக, ஆங்கிலம் பேசத்தெரியாதா என்று கேட்டு, சிறுவனது தலையை சுவரிலும் முட்டியுள்ளார்.

பாடசாலை முடிந்து வீடு திரும்பிய சிறுவனுக்குக் கடுமையான காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. அது சாதாரண காய்ச்சல் என்று பெற்றோர் அதனை கவனத்தில் கொள்ளவில்லை. நள்ளிரவில் சிறுவனது நிலைமை மிகவும் மோசமாகக் காணப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து ஹைதராபாத்திலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுவன் சிறிது நேரத்தின் பின்னர் உயிரிழந்துள்ளார். தனது மகனது சாவுக்கு ஆசிரியரும் கவனயீனமற்ற பாடசாலையும் காரணம் என்று கோரி குறித்த ஆசிரியையையும் அதிபரையும் கைது செய்யுமாறு உயிரிழந்த சிறுவனது பெற்றோரும் உறவினர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இந்தியா செயற்படும் காலம் வந்துவிட்டது

அண்மையில் தமிழகம் சென்றிருந்த வடக்கு மாகாண முதலமைச்சர் அங்கு உரையாற்றும்போதும், செய்தியாளர் சந்திப்பு நடத்தியபோதும்; முக்கியமான விடயம் ஒன்றைக் குறிப்பிட்டிருந்தார். இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தம் அர்த்தமற்றது - பயனற்றது - என்பதே அவர் தெரிவித்த முக்கிய விடயம்.

"13ஆவது திருத்தச் சட்டமானது மேலும் திருத்தியமைக்கப்பட்டாலும் அது எமக்கு நன்மைபயக்காது. அரசமைப்பின் அடிப்படை, ஒற்றையாட்சியில் இருந்து மாற்றப்பட வேண்டும். எமது தனித்துவத்தை, சுயநிர்ணய உரிமையை உள்ளடக்கியதாக அரசமைப்பு மாற்றி அமைக்கப்பட வேண்டும்" என்று அவர் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருக்கிறார்.

மாகாண சபையைப் பெற்றுக்கொண்டு, அதில் ஆட்சி செய்து பார்த்துவிட்டுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - தமிழர் தரப்பு தெளிவாக எடுத்துள்ள முடிவு இது. அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் எதுவும் இல்லை, அதனை மேலும் மேலும் திருத்தி அமைத்தாலும் அர்த்தமுள்ள எந்த நன்மையும் அதனால் கிடைக்கப் போவதில்லை என்ற பட்டறிவையே முதலமைச்சர் தமிழகத்தில் தெளிவுபடுத்தியிருந்தார். அதாவது 13ஆவது திருத்தத்தைப் பெற்றுக்கொண்டு அதிலிருந்து முன்னேறி மேலும் அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்கிற புதுடில்லியின் கருத்துக்கு - முடிவுக்கு வழங்கப்பட்டுள்ள மிகத் தெளிவான பதில் இது.

இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை தமிழர் தரப்பு ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை. "அதில் ஒன்றுமேயில்லை" என்று கூறி தமிழீழ விடுதலைப் புலிகள் ஆரம்பத்திலேயே அதனை நிராகரித்துவிட்டார்கள். ஆனாலும் புலிகள் அதனை ஏற்றுக்கொண்டிருந்தால் அதிலிருந்து மேலும் முன்னேறி அதிகாரங்களைப் பெற முடிந்திருக்கும் என்ற நம்பிக்கை ஒன்று இருந்தது. நீண்டகாலமாக புதுடில்லியும், 'சவுத்புளக்' கொள்கை வகுப்பாளர்களும் இதனையே கிளிப்பிள்ளைப் பாடமாகச் சொல்லி வந்தார்கள்.

இப்போது, அவர்கள் சொல்லி வந்த வழியிலேயே அவர்களால் ஆதரித்துக் கொண்டுவரப்பட்ட முதலமைச்சரே 13ஆவது திருத்தத்தில் ஒன்றும் இல்லை என்ற உண்மையை பட்டறிவுப் பகிர்வுடன் இந்தியாவுக்கு எடுத்து விளக்கிவிட்டார். இப்போது இந்தியா என்ன செய்யப் போகிறது? "13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி அதற்கும் அப்பால் செல்லுங்கள்" என்ற தனது பல்லவியைக் கைவிட்டு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு ஒன்றுக்கு இலங்கை அரசை இனியாவது நிர்ப்பந்திக்குமா?

இந்தியா அப்படிச் செய்யவேண்டும் என்பதையும் வடக்கு முதலமைச்சரே வலியுறுத்தியுள்ளார். இலங்கையின் அரசமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று புதுடில்லி கொழும்புக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அவர் கூறியிருக்கிறார். "இதனைக் கோரக் கொண்டுவர இந்திய அரசுக்கு தார்மீக உரித்து உண்டு. எங்கள் சார்பிலுந்தான் நீங்கள் (இந்தியா) 1987ஆம் ஆண்டில் இந்திய - இலங்கை உடன்பாட்டில் கையெழுத்திட்டீர்கள் என்பதை மறவாதீர்கள். நீங்கள் எதிர்பார்த்தவாறு எமது நிலைமை அமையவில்லையானால் எங்கள் சார்பில் குரல் எழுப்ப உங்கள் நாட்டுக்கு உரிமையுண்டு. எமக்குப் போதிய உருத்தளிக்க எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யுமாறு நீங்கள் வலியுறுத்த வேண்டும்" என்று அதற்கான நியாயத்தையும் முதலமைச்சரே கூறியிருக்கிறார்.

"வடக்கு - கிழக்கு மாகாண மக்களிடையே கருத்துக் கணிப்பு நடைபெற வேண்டும் என்பது அந்த உடன்பாட்டின் உள்ளடக்கம். அதை நடத்துமாறு இந்தியா வலியுறுத்தலாம்" என்பதைக் கூறவும் அவர் தவறவில்லை.

இப்போது இருக்கின்ற ஒரேவழி இலங்கையின் ஒற்றையாட்சி முறைமையை மாற்றி, கூட்டாட்சி ஒன்றை ஏற்படுத்துவதுதான். இந்த விடயத்தில் இனியும் ஏாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டிருக்காமல் இந்தியா விரைந்து செயற்பட வேண்டும். இங்கு மீண்டும் அமைதியின்மை ஏற்படுவதை இலங்கை மட்டுமல்ல, இந்தியாவும் விரும்பாதுதானே!

# தேர்தல் களத்தில் மஹிந்த திரிசங்கு நிலையில் எதிரணி

லங்காதீப கட்டுரையிலிருந்து
தொகுப்பு வி.எஸ்.ரி.

எதிர்வரும் ஜனவரி அல்லது மார்ச் மாதத்தில் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாவதற்கு முன்னரே அரசியல் கட்சிகள் மத்தியில் அது குறித்த இழுபறிகள் தீவிரம் அடைந்துள்ளன. எது எவ்வாறான போதிலும் எதிர்வரும் 19 ஆம் திகதிக்குப் பின்னரே ஜனாதிபதி மஹிந்தவால் ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு தேர்தல் ஆணையாளருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்க இயலும்.

ஆனால் அதற்கு முன்னர், இரண்டாவது ஜனாதிபதிப் பதவிக் காலம் முடிவடையமுன்னர் புதிதாகத் தேர்தலை நடத்த முடியாது? அவ்விதம் நடத்தினாலும் அதில் மஹிந்தவால்



மூன்றாவது தடவையும் போட்டியிட முடியாது என்ற பிரச்சினை எதிர்க்கட்சிகளால் முன்வைக்கப்பட்டு வருகின்றது. 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை மஹிந்தவால் தமது தற்போதைய ஜனாதிபதிப் பதவியைத் தொடர இயலுமாயினும், ஜனாதிபதியொருவர் தமது பதவிக்கால ஆரம்பத்தின் பின்னரான நான்கு ஆண்டுகள் கழிந்தால் அவரால் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலொன்றைப் பிரகடனப்படுத்த இயலுமென்ற அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரகடனம் மேற்கொள்ளப்படவுள்ளது. அந்த நான்கு ஆண்டுகள் கால இடைவெளி எதிர்வரும் 19 ஆம் திகதி முடிவடைகிறது.

ஆனால் சட்டபூர்வமாக அது செல்லுபடியற்றது என்பது எதிர்க்கட்சியினரின் வாதம். முதலில் அதனைச் சற்றும் பொருட்படுத்தாத அரசு, பின்னர் அது குறித்த ஆலோசனையை உயர்நீதிமன்றிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

இந்த விடயத்தில் தமது எதிர்ப்பை வெளியிட்டுவரும் எதிர்க்கட்சிகள் தமது எதிர்ப்பை நியாயப்படுத்த முக்கிய மூன்று விடயங்களை முன்வைத்து வருகின்றன. அவற்றில் முதலாவது காரணமாகக் குறிப்பிடப்படுவது, 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பு விதிகளின்படி ஒருவர் இரு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதிப் பதவியை வகிக்க இயலாதென்ற விதிமுறை. அது, அரசமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தின்மூலம் நீக்கப்பட்டு எவரொருவராலும் எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் அந்தப் பதவியை வகிக்க வழிசெய்யப்பட்டபோதிலும் மஹிந்தவால் மீண்டும் அந்தப் பதவியை வகிக்க இயலாது என்ற குற்றச்சாட்டாகும். 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இரண்டாவது தடவையாக ஜனாதிபதிப் பதவியை மஹிந்த ஏற்ற வேளையில் மீண்டுமொரு தடவை அவர் அப் பதவியை வகிக்க இயலாதென்ற விதிமுறை நடைமுறையில் இருந்ததென்பதே எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் வாதமாகும்.

இந்தக் கருத்து முதலில் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவினால் முன்வைக்கப்பட்டிருந்தபோதிலும், பின்னர் ஐ.தே.கட்சி மற்றும் ஜே.வி.பி. உட்பட்ட ஏனைய கட்சிகளும் அதனையே முன்னிலைப்படுத்தித் தமது எதிர்ப்பை வெளியிட்டு வந்தன. 2010 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட அரசமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தில் எவராயினும் எத்தனை தடவைகளும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம் என்ற திருத்தத்தில், அதற்கு முன்னரான காலப்பகுதிக்கும் அது பொருத்தமானது என்ற வாசகம் உள்ளடக்கப்படாமையால் அரசமைப்புக்கான 18 ஆவது திருத்த விதிகள் ஜனாதிபதி மஹிந்த மூன்றாவது தடவையும் போட்டியிட அனுமதிக்கா என்பது எதிர்க்கட்சிகளது வாதம்.

இந்த விதிகள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பொருத்தமானதே. அவரும் இரண்டாவது தடவை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேளையில் அரசமைப்புக்கான 18 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை என்பதால், அவரும் கூட இரண்டாவது தடவை பதவியேற்ற தினத்தன்றே மீண்டும் ஒரு தடவை தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதொரு அம்சமே.

எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கான இரண்டாவது விடயம், ஜனாதிபதியாக முதலாவது தடவை பதவி ஏற்கும் ஒருவர் தமது முதலாவது பதவிக்காலத்தின் முதல் நான்காண்டுகள் முடிவில் மட்டுமே விரும்பினால் மீண்டும் ஜனாதி பதித் தேர்தலை நடத்த இயலும் என்பதே அரசமைப்பு விதி என்பதால், ஜனாதிபதி மஹிந்த தமது இரண்டாவது பதவிக் காலத்தின் முதல் நான்காண்டுகள் முடிவில் மீண்டும் தேர் தலை நடத்த முனைவது சட்டபூர்வமற்றது என்பதாகும். அரசமைப்புக்கான 18 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் மேற்குறித்த விதியே நடைமுறையில் இருந்ததால், 18 ஆவது திருத்த விதிகள் ஜனாதிபதி மஹிந்தவைப் பொறுத்தவரை ஏற்புடையனவல்ல என்பது எதிர்க் கட்சியினரின் வாதமாகும்.

அதுமட்டுமன்றி, ஜனாதிபதியொருவர் மீண்டும் ஜனாதிபதி யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அந்தப் புதிய பதவியை அவர் பொறுப்பேற்ற நாளிலிருந்து ஆறு ஆண்டுகள் காலம் அந்தப் பதவியை வகித்து முடிக்க வேண்டுமென அரசமைப்பு விதிகள் குறிப்பிடுவதால், தற்போது நான்கு ஆண்டுகள் காலமுடிவில் மஹிந்தவால் தேர்தலை முற்கூட்டியே நடத்த இயலாதென்பது எதிர்க்கட்சிகளால் முன்வைக்கப் படும் வாதமாகும்.

எதிர்க்கட்சிகளின் மேற்குறித்த குற்றச்சாட்டு குறித்து உயர்நீதிமன்றத்தின் கருத்தை அரசு கோர முயற்சிக்கும் என முன்னாள் பிரதம நீதியரசர் மட்டுமன்றி எதிர்க்கட்சிகளும் கருதின. ஆயினும் அது குறித்து உயர் நீதிமன்றத்தின் கருத்தைக் கோர ஜனாதிபதி மஹிந்தவுக்கு அதிகாரம் கிடையாதென வாதிடும் விதத்தில் அந்தத் தரப்புக்கள் அதற்கான காரணத்தையும் முன்வைக்கத் தவறவில்லை.

நாட்டின் சகல பொது மக்களுக்கும் பாதிப்பளிக்கத்தக்கதொரு விடயம் குறித்தே உயர் நீதிமன்றத்தின் கருத்தைக் கோரும் அதிகாரம் ஜனாதிபதி ஒருவருக்கு உண்டே தவிர, தனி மனிதரொருவரது தனிப்பட்ட பிரச்சினை தொடர்பாக- தாம் மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இயலுமா? என்பது குறித்த உயர்நீதிமன்றத்தின் கருத்தைக்கோரும் உரிமை மஹிந்தவுக்குக் கிடையாதென முன்னாள் பிரதம நீதியரசர் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆயினும் குறித்த சகல தரப்புக்களது ஆட்சேபனைகளைக் கருத்தில் எடுக்காது ஜனாதிபதி மஹிந்த குறித்த விடயம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் கருத்தைக் கோரியதுடன் உயர் நீதிமன்றமும் குறித்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து மஹிந்த மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இயலும் எனத் தனது கருத்தை வெளிப்படுத்தியுள்ளது.

தற்போது ஜனாதிபதி மஹிந்தவின் கோரிக்கை தொடர்பாக உயர்நீதிமன்றம் அவர் மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம் எனக் கருத்து வெளியிட்டிருப்பதால், ஜனாதிபதித் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டு, அவர் தமது வேட்பு மனுவைத் தாக்கல் செய்யும் வேளை அதனைத் தேர்தல் ஆணையாளர் அனுமதிக்கக் கூடாதென உயர்நீதிமன்றிடம் விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பும் இதனால் தடுக்கப்பட்டுள்ளது என்பது முன்னாள் பிரதம நீதியரசரின் கருத்து. அவ்விதம் எதிர்த்தரப்பினர் தேர்தல் ஆணையாளருக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைக் கையளிப்பதானாலும் கூட, ஜனாதிபதி மஹிந்த தேர்தலில் போட்டியிடமுடியுமெனத் தனது கருத்தை வழங்கிய உயர்நீதிமன்றத்திடமே எதிர்த்தரப்பினர் சென்றாக வேண்டும். எனவே தேர்தல் ஆணையாளருக்கு எதிராக உயர்நீதிமன்றத்திடம் முறையிடுவது எந்தவித பயனையும் தரப்போவதில்லை என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கருதுவதாகக் கொள்ளமுடியும்.

மொத்தத்தில் நோக்கும்போது தற்போது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக எதிர்க்கட்சிகள் முன்னெடுத்த அத்தனை எதிர்ப்பு முயற்சிகளும் தோல்வி கண்டுள்ளதாகக் கருத முடிகிறது. தமது முயற்சிகள் வெற்றியளிப்பது மிக மிகக் கஷ்டமானதொன்றே என்பதை கருத்தில் இருத்தி, தமது சார்பில் மஹிந்தவை எதிர்த்துப் போட்டியிடத் தக்கதொரு பொது வேட்பாளரை எதிரணிகள் தெரிவு செய்திருக்க வேண்டும். ஆனால் இற்றை வரை மஹிந்தவுக்கு எதிராகத் தேர்தலில் யாரை நிறுத்துவது என்பது குறித்து எதிரணியினரால் ஒரு முடிவு மேற்கொள்ள இயலாதிருப்பது துரதிர்ஷ்டமே.

பதவியிலுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியொருவருடனேயே தாம் மோதப் போகிறோம் என்பதையும், அரசின் சகல அதிகாரத் தரப்புக்களையும், வளங்களையும் பயன்படுத்தும் வாய்ப்பை மஹிந்த கொண்டுள்ளார் என்பதையும் கருத்தில் எடுத்து சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து தமது சார்பில் பொது வேட்பாளரொருவரைக் களத்தில் இறக்கிப் போராட வேண்டியுள்ளதென்பதை இன்றுவரைதானும் எதிர்க்கட்சிகள் உணர்ந்ததாகத் தோன்றவில்லை.

# குடிதண்ணீருக்குப் போராடும் தீவக மக்கள்

வந்தியத் தேவர்

மூன்றாவது உலகப் போர் தண்ணீருக்காகவே என ஏற்கனவே எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஆனால் அது எங்கு ஆரம்பமாகும் என்பதை ஊகிக்க முடியவில்லை. ஆனால் இந்தப் போர் யாழ். குடாநாட்டின் தீவுப்பகுதியில் இருந்து ஆரம்பித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. வழக்கமாகவே தீவுப் பகுதியில் தண்ணீர் தட்டுப்பாடு இருந்து வந்த போதிலும் இந்த ஆண்டில் என்றுமில்லாதவாறு தீவக மக்கள் மிக மோசமான குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளனர்.

தீவுப்பகுதியில் நெடுந்தீவை விட ஏனைய பகுதிகளில் இது அதிகளவில் காணப்படுகின்றது. இங்கு கிடைக்கக் கூடிய நீர் உவர்நீராக இருப்பதால் அனைத்துப் பகுதிகளிலுமே குடிதண்ணீருக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்றது. கிடைக்கக் கூடிய நல்ல நீர் கூட சிலரால் அளவுக்கதிகமாக எடுக்கப்படுவதால் உவர்த்தன்மை கொண்டதாக மாறி வருகின்றது. இதனால் இங்கு வசிக்கும் மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இங்கு ஏற்கனவே ஏராளமான மரங்கள் தறிக்கப்பட்டுவிட்டன. தொடர்ந்து தறிக்கப்பட்டு வருகின்றன. அதனால் மழைவீழ்ச்சியும் குறைந்துள்ளது. கிணறுகளிலும் குளங்களிலும் நீரையே காணமுடியவில்லை. குடிப்பதற்கு நீரின்றித் தவிக்கும் இந்த மக்கள் விவசாயம் மற்றும் தோட்டச் செய்கைகளை மறந்துவிட்ட நிலையில் காணப்படுகின்றனர். எங்காவது வேறு இடங்களுக்குச் செல்வதைத் தவிர வழியில்லை என்கிறார்கள் இந்த மக்கள். ஊர்காவற்றுறைப் பகுதியில் உள்ள மக்களுக்கு இந்தமுறை பெய்த மழையால் ஒரு பயனுமில்லை என்பது அனைவரதும் கருத்தாகும். தீவுப் பகுதியில் உள்ள கிணறு, குளங்கள் வறண்டு சொட்டு நீர்கூட இன்றிக் காணப்படுகின்றன. மக்கள் குடிதண்ணீருக்காக யாழ்.நகரில் இருந்து வரும் பௌசர்களை எதிர்பார்த்தபடி இருக்கின்றனர். நிலாவரையிலிருந்தும் குருநகர் பகுதியில் இருந்தும் நீர்வராதுவிட்டால் தீவக மக்களின் நிலை மிகவும் மோசமாக மாறியிருக்கும். முன்னர் வேலணை சாட்டி கிராமத்தில் இருந்து ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நயினாதீவு, எழுவைதீவுப் பகுதிகளுக்குக் குடிதண்ணீர் எடுத்துச் செல்லப்பட்டுவந்தது. தற்சமயம் சாட்டி நல்ல தண்ணீர் கிணற்றின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதால் இங்குள்ள மக்களுக்கே தண்ணீர் போதாத நிலையில் பௌசர்களில் எடுத்துச் செல்வதற்குத் தாம் அனுமதிக்கப் போவதில்லை எனப் போர்க் கொடிதூக்கத் தொடங்கிவிட்டனர் இங்குள்ள மக்கள். அங்குள்ள தண்ணீரைப் பாதுகாக்கும் போர்க்குரல்களை அங்கு நிறையவே கேட்கத் தொடங்கிவிட்டனர். மண்டைதீவுக்கு அல்லைப்பிட்டியில் இருந்து விநியோகிக்கப்படும் நீர் போதுமானதாக இல்லை என்பது அங்குள்ளவர்களின் கவலையாகும்.



பொதுவாகவே தீவுப்பகுதி மக்கள் தண்ணீருக்காகப் பணம் கொடுக்கவேண்டியுள்ளது. 20 லீற்றர் கொண்ட பரல் ஒன்றுக்குப் 15 ரூபா செலுத்த வேண்டியுள்ளது. இரண்டு மூன்று தினங்களுக்கு ஒரு தடவை கிடைக்கும் தண்ணீரால் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இல்லை என்கிறார்கள். மக்கள் குடிப்பதற்கு அன்றி வேறு தேவைகளுக்கு உவர் நீரையே பயன்படுத்த வேண்டியுள்ளது. அதற்குக் கிணற்றில் நீர் ஊறும்வரை காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

நெடுந்தீவு மேற்குப் பகுதியில் போதுமான அளவு நல்ல தண்ணீர் கிடைத்து வந்தது. தீவு முழுமைக்குமே பயன்பட்ட சாராப்பிட்டிப் பகுதியின் நல்ல தண்ணீர் இன்று உப்பு நீராக மாறியுள்ளது.

அங்கு கடமையில் இருக்கும் ஒரு சாரார் அளவுக்கு அதிகமாகக் கிணறுகளைப் பயன்படுத்திக் கொண்டதால் நன்னீர் கிடைத்த சாராப்பிட்டியில் இப்போது கிடைப்பது உப்பு நீரேயாகும்.

மிகவும் மோசமான குடிதண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட மழை வீழ்ச்சிக்குறைவும், மரங்களைத் தறிப்பதும் மட்டும் காரணமல்ல. தீவுப் பகுதியில் பெய்யும் கணிசமான மழைநீர் கடலுக்குச் சென்று வீணாகி வருகின்றமையும் காரணமாகும். தடுப்பணைகளை அமைத்து மழைநீரைச் சேமிப்பதுடன் மழைநீர் சேமிப்புத் தொட்டிகளைக் கட்டி முறைப்படி அதனைச் சேமிக்க முன்வர வேண்டும். குளங்களில் நீர் சேரக்கூடி ய வகையில் வாய்க்கால்களை அமைக்கவும் வேண்டும். மேலும் மழை நீரை வெளியேற்றுவதற்காகத் திறக்கப்படும் அணைத் தடுப்புக்கள் ஊடாக கடல் நீர் உட்புகுந்து உவர்த்தன்மையை ஏற்படுத்துவதாலும் கிணறுகள் உவர்நீராக மாறிக்கொண்டிருக்கின்றன.

தீவக மக்களின் நலனைக் கருதாத வகையிலான செயற்பாடுகளாலேயே இங்குள்ள மக்கள் தமக்குத் தேவையான குடிதண்ணீரைப் பெறமுடியாத நிலை உருவாகியுள்ளது என்பதே உண்மையாகும்.

---

## இது மரநடுகை மாதம்

# வீதியோரங்களில் மரங்களை நடுவோம்



ராஜராஜன்

வீதி அகலிப்பு என்ற பெயரில் வீதியோரங்களில் நிழல் பரப்பிக்கொண்டு நின்ற பெரிய மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டுவிட்டன.

இப்போது நிழலுக்கு ஒதுங்குவதற்குக்கூட ஒரு மரத்தையும் காண முடியவில்லை. காலத்தின் தேவையறிந்து வீதிகளை அகலிப்பதில் தவறொன்றும் இல்லை. ஆனால் தறித்து வீழ்த்தப்படும் மரங்களுக்கு ஈடாக புதிய மரக்கன்றுகள் நடப்படாமைதான் கவலையைத் தருகின்றது.

இந்தியாவுக்குச் சென்றிருப்பவர்கள் அங்குள்ள நெடுஞ்சாலைகளின் இருபுறமும் பெரிய பெரிய மரங்கள் வரிசையாக நிற்பதைக் கண்டிருப்பார்கள். இவை யாவும் தானாக முளைத்தவை அல்ல. திட்டமிடப்பட்ட வகையில் நடப்பட்ட மரங்களே அவை. அதிலும் அங்கு காணப்படும் நெடிதுயர்ந்த புளிய மரங்களும் அவற்றில் இடப்பட்டுள்ள இலக்கங்களும் புதியவர்களுக்கு வியப்பை அளிக்கக்கூடும். ஆனால் ஆண்டுதோறும் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் புளியின் அளவை அறிந்துகொண்டால் வியப்பு மறைந்து விடும். அறுசுவைகளில் ஒன்றான புளிப்புத் தன்மையை ஏற்படுத்தும் புளியை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் இந்தியா முதலிடத்தை வகிக்கின்றது. இதற்கு தெருவோரங்களில் நிற்கும் புளிய மரங்கள் உதவுகின்றன.

ஆனால் எமது நாட்டைப் பொறுத்த அளவில் மரங்களைத் தறித்து வீழ்த்துவதில் காட்டுகின்ற அவசரத்தையும், ஆர்வத்தையும் மரக்கன்றுகளை நடுவதில் எவரும் காட்டுவதில்லை.

சில வருடங்களுக்கு முன்னர் மந்திகை மருத்துவமனைப் பக்கமாகச் சென்றவர்கள் மருத்துவமனைக்கு முன்பாக உள்ள பகுதிகளில் காணப்பட்ட மரங்களை மறந்திருக்க மாட்டார்கள். அதிலும் அங்கு அமைந்துள்ள பஸ் தரிப் பிடத்தை சூழ பரந்த கிளைகளைப் பரப்பி நின்ற ஆல்மரங்களையும் அவை தந்த குளிர்மையான நிழலையும் மறந்துவிடுவது எளிதான காரியமல்ல. ஆனால் வீதி அகலிப்பின்போது இந்த மரங்கள் யாவும் ஈவு இரக்கமற்ற வகையில் தறித்துச் சாய்க்கப்பட்டதால் அந்தப் பகுதியொரு சூனியப் பிரதேசமாகவே காணப்படுகின்றது. வெயிலின் கொடுமையைத் தணிப்பதற்கு உகந்த ஓர் இடம் அங்கில்லை.

இதைப் போன்றுதான் ஏனைய இடங்களில் காணப்படும் வீதியோரங்களும் மரங்களின்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

அரசு இதில் அக்கறை செலுத்தாது விட்டாலும் சமூக ஆர்வலர்களும், வடக்கு விவசாய அமைச்சும் உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்து எதிர்கால வீதி அகலிப்பையும் கருத்திற்கொண்டு அதற்கேற்றவாறு வீதியோரங்களில் மரங்களை நடுவது காலத்தின் அவசியமான தேவையென்பதை எவரும் புறமொதுக்கி விடமுடியாது.



---

# சச்சினின் சுயசரிதை நூல்

பூ.கொ.சரவணன்

*(நேற்றைய தொடர்ச்சி...)*



**பூத்தது காதல்:** மெர்வ் ஹூக்ஸ் என்கிற பெரியமீசை வைத்திருந்த வீரரை வேங்கடபதி ராஜூவை அனுப்பி மீசையைப் பிடித்து இழுக்கச் சொல்லி சச்சின் முதலிய இளசுகள் பட்டாளம் ஊக்குவித்தது. அவரும் அதைச் செய்ய ஹூக்ஸ் சிரித்துக் கொண்டே அமைதியாக இருந்துவிட்டார். அஞ்சலியுடனான காதல் அத்தியாயங்கள் நூலின் முதல் பாகத்தின் முக்கிய பகுதி எனலாம். இங்கிலாந்து தேசத்து அன்னைக்கும், குஜராத்தி தந்தைக்கும் பிறந்த அஞ்சலி மஞ்சள் மற்றும் நீலவண்ண உடையில் விமான நிலையத்தில் இவரைப் பார்த்து பின்தொடர்ந்து இருக்கிறார். இவரும் கண்டதும் ஈர்ப்பு ஏற்பட்டு உடன் அண்ணன் இருந்தபடியால் அமைதியாகத் திரும்பியிருக்கிறார். அதற்குப் பின்னர் அஞ்சலி தொலைபேசி எண்ணைப்பெற்று சச்சின் வீட்டுக்கு அழைப்பு விடுக்க அந்த அழைப்பை சச்சினே எடுத்துப் பேச அங்கே தொடங்கியது காதல்.

இவரின் வீட்டுக்குப் பெண் நிருபர் போல வந்து கதைத்துவிட்டு அவர் போயிருக்கிறார். ஆறு மாதகாலம் ஆஸ்திரேலியா போனபோது அழைக்காமலே இருந்துவிட்டு தேர்வு நாளன்று அழைத்து அஞ்சலிக்கு அவர் வாழ்த்துச் சொல்ல அங்கே கண்ணீரும், காதலும் பொங்கிப் பாய்ந்திருக்கிறது. மாநில அளவில் முதலிடம் பெற்று மேற்படிப்பும் படிக்கப் போன அஞ்சலி சச்சினின் அழைப்பு மிகப்பெரிய ஊக்கத்தைத் தந்தது என்று பின்னர் கூறியிருக்கிறார்.

கிரிக்கெட் பற்றி ஆரம்பத்தில் ஒன்றுமே தெரியாமல் இருந்த அஞ்சலி, பின்னர் படிப்படியாகத் தேறிக்கொண்டே வந்தார். சச்சினின் வீட்டில் அவர்களின் காதலைச் சொல்லி நிச்சயதார்த்தம்வரை கொண்டு செல்லும் பொறுப்பு அஞ்சலி வசமே வந்தது. காரணம் சச்சினுக்கு சரளமாகப் பேசவராது என்பதுதான். ஆரம்பகாலங்களில் சச்சின் மிகவும் தடுமாறி இருக்கிறார். ஆங்கிலம் அவ்வளவு சரளமாக அப்பொழுது பேசவராது என்பதுவும் இதற்கொரு காரணமாகும்.

சச்சினுக்காகத் தன்னுடைய பிரகாசமான மருத்துவ வாழ்க்கையை அஞ்சலி தியாகம் செய்தார். சச்சின் சொல்வது போல அவரே. அவரது வாழ்வின் சிறந்த பங்காளராவார்.

*(தொடரும்)*

## பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றும் 8 வயது இந்திய வம்சாவளிச் சிறுவன்



டில்லி நவ 15

டில்லியில் சைபர் பாதுகாப்பு மாநாட்டில் அமெரிக்காவைச் சேர்ந்த இந்திய வம்சாவளிச் சிறுவன் ரூபன் பால் உரையாற்ற இருக்கிறான். 8 வயதே ஆகும் ரூபன் பால், அமெரிக்காவில் கம்ப்யூட்டர் கேம்ஸ் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாகவும் உள்ளான். மத்திய வெளியுறவு இணையமைச்சர் வி.கே.சிங் உட்பட சைபர் பாதுகாப்புத் துறையில் நிபுணத்துவம் பெற்ற பலரும் இந்த சைபர் பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றவுள்ளனர். இதில் 8 வயது சிறுவன் ரூபனுக்கும் உரையாற்ற வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஹூஸ்டனில் நடைபெற்ற சைபர் குற்றத் தடுப்புத் தொடர்பான மாநாட்டிலும் ரூபன் பால் உரையாற்றியுள்ளான். எனவேதான் இந்த மாநாட்டுக்கும் அழைக்கப்பட்டுள்ளான். சைபர் குற்றத் தடுப்பு தொடர்பாக ரூபன் பேச இருக்கும் 4ஆவது மாநாடு இதுவாகும். இணையம், கம்ப்யூட்டர் வழியாக நடைபெறும் குற்றங்கள் குறித்து சிறுவர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பது ரூபனின் விருப்பமாகும். (ரி)

## உணவுப் பாதுகாப்பு அமெரிக்கா ஒப்புதல்

உணவுப் பாதுகாப்பு விவகாரத்தில் உலக வர்த்தக அமைப்பில் இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு அமெரிக்கா ஒப்புதல் தெரிவித்துள்ளது.

இதையடுத்து, இந்த விவகாரத்தில் மூன்று மாதங்களாக நிலவி வந்த முட்டுக்கட்டை நீங்கும் என்று தெரிகிறது. இதன்படி, உலக வர்த்தக அமைப்பின் கூட்டத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவிக்கும் என்று கூறப்படுகிறது.

மேலும், இதன் மூலம் உணவுப் பாதுகாப்பு விவகாரத்தில் மானியம் 10 சதவிதத்துக்கு அதிகமாகக் கூடாது என்ற உலகவர்த்தகஅமைப்பின்வரம்புக்கு அதிகமாக இந்தியாவில் உணவு மானியம் வழங்கப்பட்டாலும், அதற்கு உலக வர்த்தக அமைப்பில் உள்ள நாடுகள் ஆட்சேபழ் தெரிவிக்க இயலாது. இன்று ஜி-20 நாடுகளுக்கிடையேயான இரு நாள் கூட்டம் தொடங்கவுள்ள நிலையில், இந்த முன்னேற்றம் முக்கியத்துவம் பெறுகிறது. இக்கூட்டத்தில் பிரதமர் நரேந்திரமோடி, அமெரிக்க அதிபர் ஒபாமா உள்ளிட்ட உலகத்தலைவர்கள்பங்கேற்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# காஷ்மீரில் அதிரடித் தீர்ப்பு

## 7 படையினருக்கு ஆயுள்தண்டனை

### அப்பாவி இளைஞர்களை சுட்டுக் கொன்ற குற்றத்துக்காக



டில்லி நவ 15

காஷ்மீரில் கடந்த 2010-ஆம் ஆண்டு மூன்று இளைஞர்களைச் சுட்டுக் கொன்றமை தொடர்பாக 7 ராணுவ வீரர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கி ராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஜம்மு-காஷ்மீரின் குப் வாரா மாவட்டத்தைச் சேர்ந்த 3 அப்பாவி இளைஞர்கள் ராணுவ வீரர்களால் கடந்த 2010 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டனர். பின்னர் இளைஞர்கள் மீது கறுப்பு நிறப்பூச்சு ஊற்றி அவர்களது உடல்கள் மீது துப்பாக்கி உள்ளீட்ட ஆயுதங்களை வீசி, வெளிநாட்டிலிருந்து ஊடுருவ முயன்ற பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக ராணுவ வீரர்கள் தங்களது அறிக்கையில் தெரிவித்தனர். இதனிடையே காணாமல் போன 3 இளைஞர்கள் தான் வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் என்று விசாரணையில் தெரிய வந்தது. இதனை அடுத்து இறந்த இளைஞர்களின் உறவினர்களின் கோரிக்கையை அடுத்து 11 ராணுவ வீரர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. 2010-ஆம் ஆண்டு ஜம்மு-காஷ்மீரில் ராணுவம் நடத்திய போலிக் கொலைக்கு எதிராக மிகப் பெரிய அளவில் போராட்டங்கள் நடந்தன. ராணுவத்தை எதிர்த்து போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீது சி.ஆர்.பி.எப். மற்றும் ராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 120-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இதனால் இந்தச் சம்பவம் தேசிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த நிலையில் இந்த வழக்கு மீதான இறுதி விசாரணையின் முடிவில் குறித்த சம்பவத்தில் ஈடுபட்ட 7 ராணுவ வீரர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கி ராணுவ நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தண்டனை வழங்கப்பட்டுள்ள 7 ராணுவ வீரர்களில் இருவர் உயர் ராணுவ அதிகாரிகள் ஆவர். மேலும், இந்த ராணுவ வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அனைத்துச் சலுகைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன. காஷ்மீரில் நடந்த இந்த துயரச் சம்பவத்துக்கு காலம் கடந்த பின்னர் வரவேற்கத்தக்க தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அம்மாநில முதல்வர் உமர் அப்துல்லா தனது டுவிட்டர் பக்கத்தில் கூறும் போது, காஷ்மீரில் உள்ள எவரும் நம்ப முடியாத் ஒன்று நடந்துள்ளது.

இது போன்ற வழக்குகளில் மிகவும் அரிதாக நீதி கிடைக்கின்றது. இந்தச் சம்பவம் போன்று இனி நடக்கக் கூடாது. இந்தத் தீர்ப்பு இத்தகைய செயலில் ஈடுபடுவோருக்குப் பாடமாக இருக்கட்டும் - என்றார். (ரி)




இதுவரைக் காலமும் வீதிகளில் வீணடிக்கப்பட்ட பொன்னான காலம் இனிமேல் வாழ்க்கையின் சந்தோஷங்களுக்காக, நாட்டின் அபிவிருத்திக்காக மற்றும் வியாபார அபிவிருத்திக்காக அர்ப்பணிக்க முடியும். அது மஹிந்த சிந்தனையில் நிஜமாகும் ஓர் பிரார்த்தனையாகும்.

நாடு முழுவதும் குறைந்த நேரத்தில் பயணியுங்கள், குறைந்த காலத்தில் பொருட்களை இடம் மாற்றுங்கள். நம் நாட்டின் சுதந்திரக் கல்வியினால் உருவாகிய பொறியியலாளர்களை தயார்படுத்தி தேசிய நிர்மாண நிறுவனம் மூலம் நிர்மாணிக்கப்படும் வடக்கு மலையக அதிவேக வீதிக்கு நாமும் பங்களிப்புச் செய்வோம்.

நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## 14 கோடி வருடங்களுக்கு முன்னைய டைனோசர் பல்

மலேசியாவில் கண்டுபிடிப்பு



ஜனார்த்தா, நவ.15
சுமார் 14 கோடி ஆண்டுகள் பழமையான டைனோசர் பல் ஒன்று ஆய்வாளர்களால் மலேசியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தாவர உண்ணி வரிசையைச் சேர்ந்த பறவை இடுப்பு' டைனோசர் வகை உயிரினத்தின் பல் என்று கூறப்படுகிறது.

சுமார் 13 மி.மீ. நீளமும், 10.5 மி.மீ. அகலமும் கொண்ட இந்தப் பல், மலேசியப் பல்கலைக்கழகத்தின் தலைமை ஆய்வாளரான மசா டோஷி சோன் குழுவினரால் பஹாங் மாகாணத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஆய்வில், வசேதா பல்கலைக்கழகம் மற்றும் குமா மோட்டோ பல்கலைக்கழகம் ஆகிய இரண்டு ஜப்பானியப் பல்கலைக்கழகங்களும் பங்குகொண்டன.

இதுகுறித்து மசாடோஷி சோன் கூறுகையில்,
"பஹாங் மாகாணத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு டைனோசர் தொடர்பான படிமங்கள் குறித்து ஆய்வைத் தொடங்கினோம். 2012ம் ஆண்டு சுமார் 7 கோடி ஆண்டுகள் பழமையான முதலாவது டைனோசர் படிமம் கிடைத்த இடத்துக்கு அருகில் இந்தப் பல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது"- என்றார்.
தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள பல், 'பறவை இடுப்பு' அமைப்புக் கொண்ட டைனோசரின்பல்ஆகும். அந்த டைனோசர் தாவர உண்ணியாகும். அது குதிரையின் உயரத்துக்கு இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது - என்றார். (வ)

## உலகில் உயர்ந்த மனிதன் நான்தான்!



லண்டனில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற 60 ஆவது உலகக் கின்னஸ் சாதனை நாள் நிகழ்ச்சியில் உலகில் மிக உயரமான மனிதனும் மிகக் குள்ளமான மனிதனும் முதல் தடவையாகச் சந்தித்துக் கொண்டனர். 8 அடி 2.5 மீற்றர்) உயரமுடைய சுல்ரன் கொசன் மற்றும் வெறும் 55 சென்ரிமீற்றர் உயரமுடைய சந்ர பகதூர் டங்கி ஆகியோரே உயரமான மற்றும் குள்ளமான மனிதர்களாவர். 'உயர்ந்த' மனிதரான துருக்கியைச் சேர்ந்த கொசனுக்கு 31 வயது. மிகக் குள்ளமான நேபாளத்தைச் சேர்ந்த சந்ர பகதூர் டங்கிக்கு 75 வயது. (வ)

## சர்ச்சைக்குரிய பதவியிலிருந்து விலகினார் பாக். பிரதமர் மகள்



லாகூர், நவ.15
பாகிஸ்தானில், இளைஞர் கடனுதவித் திட்டத்தின் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த பிரதமர் நவாஸ் ஷெரீபின் மகள் மரியம் நவாஸ், அந்த நியமனம் குறித்த சர்ச்சையால் அந்தப் பதவியிலிருந்து விலகியுள்ளார்.
முன்னதாக, ரூ.10,000 கோடி (பாகிஸ்தான் ரூபா) மதிப்பிலான கடனுதவித் திட்டத்தின் தலைமைப் பொறுப்பை வகிப்பதற்குரிய அனுபவம் மரியம் நவாஸுக்கு இல்லை என்று லாகூர் உயர் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை கூறியது.
மேலும், தகுதியுடைய நபரை வெளிப்படைத் தன்மையுடன் அந்தப் பதவியில் அமர்த்துமாறு அந்த நீதிமன்றம் அரசை வலியுறுத்தியிருந்தது.
இந்தநிலையில், தனது பதவியிலிருந்து புதன்கிழமை விலகிக் கொண்ட மரியம் நவாஸ், செய்தியாளர்களிடம் கூறுகையில், "பதவி விலகுமாறு யாரும் என்னை வற்புறுத்தவில்லை. இளைஞர் கடனுதவித் திட்டத்தின் தலைவர் பதவிக்குத் தகுதி வாய்ந்த நபரை நியமிப்பதற்கு வசதியாகவே பதவி விலகுகிறேன்" என்று தெரிவித்தார். (வ)

## 39 அடி உயர மணல் சிற்பம் அமெரிக்க கலைஞர் சாதனை



நிட்டேரொய், நவ.15
கடற்கரையில், பல அடுக்குகள் கொண்ட 39 அடி உயர கோபுர வடிவிலான மணல் சிற்பத்தை அமைத்து அமெரிக்க சிற்பக் கலைஞரொருவர் சாதனை படைத்துள்ளார். பிரேசில் நாட்டில் உள்ள நிட்டேரொய் நகரக் கடற்கரையில், இந்த மணல் கோபுரத்தை அமெரிக்காவின் பிரபல மணல் சிற்பக் கலைஞர் ருஸ்டி கிராப்ட் அமைத்துள்ளார்.
இது தொடர்பாக ருஸ்டி கிராப்ட் கூறுகையில், "இந்த 39 அடி உயர மணல் சிற்பத்துக்காக டிராக்டர்கள் மூலம் 20 'லோட்' மணல் அளவுக்குக் குவிக்கப்பட்டு, ஒரே வாரத்தில் உருவாக்கப்பட்டது. இந்தச் சாதனை முயற்சி கண்டிப்பாகக் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறும்" என்றார். பிரேசிலில் அமெரிக்காவின் பிரபல தனியார் நிறுவனங்களின் விளம்பரத்துக்காக இந்த மணல் கோபுரம் உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# சிரிய அகதிகளை ஏற்க மறுப்பு?

### அமெ. ஐரோப்பிய யூனியன் நாடுகள் மீது தொண்டு நிறுவனங்கள் விசனம்

டமாஸ்கஸ், நவ.15
சிரிய உள்நாட்டுப் போர் காரணமாக இப்பெரும்பெருமளவான அகதிகளில் மிகச் சொற்ப அளவு அகதிகளையே அமெரிக்க ஐரோப்பிய யூனியன் நாடுகள் ஏற்பதாக அகதிகளுக்கான இரு சர்வதேச நிறுவனங்கள் கடுமையான விசனம் தெரிவித்துள்ளன.
சர்வதேச மீட்புக் குழு மற்றும் நோர்வேயின் அகதிகள் சபை ஆகிய இவ்விரு நிறுவனங்களும் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில், சிரியப் போரில் அகதிகளாகி வரும் மக்கள் தமது நம்பிக்கையை முற்றாக இழந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதனால் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள் இந்த அகதிகளை அனுமதிப்பது தொடர்பில் தமது பங்களிப்பை இன்னும் அதிகமாகவும் விரைவாகவும் ஆற்ற வேண்டும் எனவும் குறித்த அறிக்கை தெரிவித்துள்ளது.



அந்தஅறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
கடந்தசெப்ரெம்பர் இறுதி வரை அமெரிக்கா வெறுமனே 166 சிரிய அகதிகளையும், பிரிட்டன் சில நூறு அகதிகளையும், பிரான்ஸ் அரசு 500 சிரிய அகதிகளையுமே அனுமதித்திருப்பதாகவும்கூறப்பட்டுள்ளது.
இந்தநிலையில் சர்வதேச சமூகங்கள்அனைத்தும்இணைந்து மில்லியன் கணக்கான சிரிய அகதிகளில் குறைந்தது 57 வீத மக்களையாவது அனுமதிக்க முன்வர வேண்டும் என்றும் இந்த அகதிகளுக்கான நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.
சிரியப் போர் காரணமாக இதுவரை குறைந்தது 3.3 மில்லியன் மக்கள் அகதிகளாக வெளியேறி இருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது.
அதைவிட அதிகளவு சிரிய அகதிகளை அதிகமாக உள்வாங்கிவரும் அதன் அண்டை நாடுகளான லெபனான், துருக்கி, ஜோர்டான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகளும் சமீபகாலமாக அகதிகளைத்திருப்பி அனுப்பத் தொடங்கியிருப்பதால் சிரிய மக்களின் நிலைமை மிக மோசமாகி வருவதாகவும் தொண்டு நிறுவனங்கள் சில தெரிவித்துள்ளன. (வ)

## இம்ரான், உல் காத்ரி ஆகியோரை கைது செய்ய நீதிமன்று உத்தரவு

இஸ்லாமபாத், நவ.15
பாகிஸ்தானில் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய போது வன்முறையில் ஈடுபட்டதாக தொடரப்பட்ட வழக்கில் இம்ரான் கான், தாஹிர் உல் காத்ரி ஆகியோருக்கு இஸ்லாமாபாத் நீதிமன்றம் கைது உத்தரவு பிறப்பித்துள்ளது.
கடந்த ஒகஸ்ட் மாதத்தில் தெஹ்ரிக் - இ - இன்சாப் கட்சியின் தலைவர் இம்ரான் கான், பாகிஸ்தான் அவாமி தெஹ்ரிக் கட்சித் தலைவர் தாஹிர் உல் காத்ரி ஆகியோர் அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தை நோக்கி தனித்தனியாகப் பேரணி நடத்தினர்.
நவாஸ் ஷெரீப்பை ஆட்சியிலிருந்து நீக்குவது என்ற குறிக்கோள் நிறைவேறாத நிலையில், தேர்தல் சீர்திருத்தம் உள்ளிட்ட தனது சில கோரிக்கைகள் தொடர்பாக அரசுடன் ஒப்பந்தம் செய்துகொண்டபின், காத்ரி கனடா சென்றுவிட்டார்.
இம்ரான் கான் தொடர்ந்து அரசுக்கு எதிராகப் பொதுக் கூட்டங்களை நடத்தி வருகிறார். எதிர்வரும் 30 ஆம் திகதி இஸ்லாமாபாத்தில் மிகப்பெரிய கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தப் போவதாகவும் அறிவித்துள்ளார்.



### இம்ரான் மீது வழக்கு

இந்தநிலையில், கடந்த ஒகஸ்ட், செப்ரெம்பர் ஆகிய மாதங்களில் நாடாளுமன்றம், அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி வன்முறையில் ஈடுபட்டதற்காக இம்ரான் கான், தாஹிர் உல் காத்ரி மற்றும் 26 பேர் மீது தீவிரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர்.
இந்த வழக்கு விசாரணையில், இம்ரான் கான், காத்ரி மற்றும் 26 பேருக்கு எதிராக கைது உத்தரவை நீதிபதி பிறப்பித்தார். (வ)

## பாகிஸ்தானில் 4 இடங்களில் பறந்தது ஐ.எஸ்.ஐ.எஸ்.கொடி

இஸ்லாமாபாத், நவ.15
பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் 4 இடங்களில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் கொடி ஏற்றப்பட்டிருந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
ஐ.எஸ். தீவிரவாதிகள் ஈராக் மற்றும் சிரியா அரசுக்கு எதிராக போரிட்டு, அந்த நாடுகளின் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றி உள்ளனர். மேலும், அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளுடன் அந்த இயக்கம் போர் புரிந்து வருகிறது. சமீபத்தில் பாகிஸ்தான் எல்லையான வாகாவில் 63 பேரைக் காவு கொண்ட மனித வெடிகுண்டுத் தாக்குதலுக்கும் இந்தத் தீவிரவாதிகளே பொறுப்பேற்றுள்ளனர்.
இந்தநிலையில், பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் நகரின் டேக்ஸிலாவில், பாகிஸ்தான் ராணுவத் தளபாடத் தொழிற்சாலையின் அருகே, 4 இடங்களில் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் கொடிகள் மின்சார கம்பங்களில் ஏற்றப்பட்டிருந்தன. இது குறித்து தகவல் அறிந்ததும் விரைந்து வந்த சட்ட அமுலாக்க முகவர்கள் அந்தக் கொடிகளை அகற்றினர்.
மேலும், மிகவும் பாதுகாப்பு நிறைந்தபகுதியில் யார் கொடியை ஏற்றினார்கள் என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. அந்தப்பகுதியில் இருக்கும் சி.சி.டி.வி.கமரா பதிவுகளை ஆய்வு செய்யும் பணியில் உளவுத்துறை இறங்கியுள்ளது. விசாரணையை மேற்கொள்வதற்காக தனிக் குழு அனுப்பப்பட்டுள்ளது. (வ)

## ஐ.எஸ்.ஐ.எஸ் ஆதரவாளர்கள் ஜேர்மனியில் கைது

ஜேர்மனியில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் ஆதரவாளர்கள் 9 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
ஜேர்மனியில் இருந்து சுமார் 450 பேர், சிரியாவுக்கு சென்று அங்குள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் இணைந்து தாக்குதல் நடத்தியதாகவும், அவர்களில் 150 பேர் நாடு திரும்பி விட்டதாகவும் உளவுத்துறைக்குத் தகவல்கள் கிடைத்தன.
இந்த நிலையில், மக்கள் நெரிசல் மிகுந்த வடக்கு ரினே வெஸ்ட்பாலியா மாகாணத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களை தேடும் வேட்டையில் 240 பொலிஸ் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். (வ)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். சொல்லாற்றல் அதிகரிக்கும். காரியங்களை சாதிக்கும் ஆற்றலும் திறனும் அதிகரிக்கும். சாமர்த்தியமாகப் பேசிக் காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள்.



**இடபம்**: தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்பட்டாலும் எடுத்த வேலையை எப்பாடுபட்டாவது செய்து விடுவீர்கள். குடும்பத்தில் சிற்சில சண்டைகள் வரலாம்.



**மிதுனம்**: உங்களது ஆலோசனையைக் கேட்டு குடும்பத்தில் இருப்பவர்கள் செயற்படுவார்கள். ஆன்மிக நாட்டம் உண்டாகும். வீண் அலைச்சல் ஏற்படலாம். சுபகாரியங்களில் கலந்து கொள்ள நேரலாம். காரிய வெற்றி உண்டாகும்.



**கடகம்**: தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எளிதாகப் பணிகளை செய்து முடிப்பார்கள். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.



**சிங்கம்**: மற்றவர்களிடம் கவனமாகப் பேசுவது கருத்து வேற்றுமை வராமல் தடுக்கும். வீண் அலைச்சல் குறையும். அடுத்தவர்களை அனுசரித்துச் சென்று காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். குடும்பத்தில் நன்மைகள் நடைபெறும்.



**கன்னி**: எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்கும் திறமை அதிகரிக்கும். துணிச்சலாக எதையும் செய்து முடித்து காரிய வெற்றி அடைவீர்கள். பூர்வீக சொத்துக்களில் இருந்த சிக்கல்கள் தீரும். நீண்டதூர பயணங்களால் சாதகமான பலன் கிடைக்கும்.



**துலாம்**: தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி விறுவிறுப்படையும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குப் பணி தொடர்பான கஷ்டங்கள் குறையும். குடும்பத்தில் மரியாதை கூடும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு இருக்கும்.



**விருச்சிகம்**: உத்தியோகத்தில் முன்னேற்றம் பெற எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். எதிலும் வேகமாக செயலாற்ற வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். மனக் கஷ்டம் நீங்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.



**தனுசு**: வாக்குவன்மையால் தொழில், வியாபாரம் சிறப்பாக நடைபெறும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி கிடைக்கும். அந்தஸ்து உயரும். நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும்.



**மகரம்**: குடும்பத்தில் மகிழ்ச்சியான கொண்டாட்டங்கள் இருக்கும். சுப காரியங்களில் குடும்பத்தினருடன் கலந்து கொள்வீர்கள். எடுத்த வேலையை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். பெரியோர் மூலம் அனுகூலம் உண்டாகும்.



**கும்பம்**: எந்த வேலையிலும் கவனம் சிதற விடாமல் இருப்பது வெற்றிக்கு உதவும். எதிர்ப்புகள் விலகும். மனக் குழப்பம் நீங்கும். ஆனால் பிறருடன் பழகும் போது நிதானம் தேவை. பொருளாதார முன்னேற்றம் உண்டாகும்.



**மீனம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் நன்மை தீமை பற்றிக் கவலைப்படாமல் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியை திறம்படச் செய்வார்கள். போட்டிகள் மறையும். உங்களது வார்த்தைக்கு மதிப்புக் கூடும்.

**நாளை**

**ஐப்பசி-30 ஞாயிற்றுக்கிழமை | 16.11.2014**

திதி: நவமி
பி.ப.12.51 வரை
நட்சத்திரம்: பூரம் முழுவதும்

சுபநேரம்:09.07-10.37 வரை
இராகுகாலம்:04.37-06.07 வரை

# அமைதியின் சொற்கள்

1. அமைதி ஆரம்பிப்பது இந்தப் புவியின் மேற்பரப்பில் இருக்கும் மனிதர்களில் இருந்துதான்.
2. நிம்மதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற பேரவா, எந்தவித கட்டுப்பாட்டுக்குள்ளும் அடங்காமல் ஒலிக்கிறது. அது ஒரு சிறைச்சாலையாக இருந்தாலும் கூட சிறைப்படுத்தப்பட்டவர்களும் கூட, பெரும் மாளிகையில் இருப்பவர்களும் கூட நிம்மதியைப் பெற்றுக் கொள்ள பேரார்வத்துடன் இருக்கிறார்கள்.
3. போரிலும் மிகப் பெரிய போர் மனிதனுக்குள் ஏற்படும் போர் தான். அது சண்டை நிறுத்தம் என்றில்லை. ஒரு கட்சி தான் இருக்கிறது. பேச்சு வார்த்தையும் நடத்த முடியாது. யுத்தத்தில் நீங்கள் வென்றாலும் கூட நீங்கள் தோல்வி அடைகிறீர்கள். போரின்மை என்பது அமைதி இல்லை. நான் சக மனிதனை என்னைப் பார்க்கும் விதத்தில் பார்க்கத் தவறும் போது போர்கள் நிச்சயமாக ஏற்படத்தான் செய்யும். உயிரின் மதிப்பை, பெறுமதியை என்னால் உணரமுடியாமல் போகும் போது போர்கள் மூண்டு கொண்டு தான் இருக்கும்.

பிரேம் ராவத்

# முதலாவது சோலார் வீதி நெதர்லாந்தில் அமைப்பு



உலகில் அதிகப்படியாக இருசக்கர வாகனங்களைப் பயன்படுத்தும் நாடுகளில் நெதர்லாந்தும் ஒன்றாகும். அந்த நாட்டில் இரு சக்கர வாகன வீதி ஒன்றில் உலகில் முதல் முறையாக இரு சக்கர வாகன சோலார் வீதி அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 70 மீற்றர் தூரத்துக்கு அமைக்கப்பட்ட சோலார் தகடுகள் பதிக்கப்பட்டுள்ள இந்த வீதி மூலம் குறிப்பிட்ட அளவு மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வாகனங்கள் இந்த வீதியில் செல்லும்போது தகுந்த பிடிமானம் கிடைக்குமாறும், உராய்வுச் சத்தம் அதிகம் இல்லாதவாறும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாகனத்தைச் செலுத்திச் செல்லும் போது, சற்று முன்னால் வீதி சேதம் அடைந்திருந்தாலோ, விபத்து ஏற்பட்டிருந்தாலோ, வாகனச் சாரதிகளுக்கு அபாய விளக்கு மூலம் எச்சரிக்கை செய்யும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் இரு சக்கர வாகனங்கள் அதிகப்படியாக உள்ளதால் படிப்படியாக இது போன்ற முயற்சிகள் அதிகரிக்கப்படும் என்றும் இதற்கான ஆராய்ச்சி மற்றும் செயற்பாடுகளுக்கு 3.7 மில்லியன் யூரோ செலவாகியுள்ளதாகவும் செய்தித் தொடர்பாளர் ஜன்னமிக்கெவன் டிரேன் தெரிவித்தார்.

மேலும் எதிர் காலங்களில் வாகன ஓட்டுநர்கள் தங்களது மின்னனு வாகனங்களுக்குத் தேவையான மின்சாரத்தை இது போன்ற வீதிகளிலிருந்து மின்னேற்றம் செய்து கொள்ளலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | 5 | | 6 | | 1 | |
| | | 5 | 9 | | | 3 | | 2 |
| | 1 | | | | | | | 9 |
| | 3 | | | | 1 | 7 | | 5 |
| | 5 | 6 | | | | 2 | 4 | |
| 4 | | 1 | 7 | | | | 3 | |
| 9 | | | | | | | 2 | |
| 1 | | 7 | | | 5 | 6 | | |
| | 2 | | | | 8 | 1 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 4 | 9 | 3 | 5 | 7 | 8 | 1 |
| 3 | 9 | 8 | 6 | 7 | 1 | 4 | 5 | 2 |
| 5 | 1 | 7 | 4 | 2 | 8 | 6 | 3 | 9 |
| 6 | 3 | 9 | 7 | 4 | 2 | 5 | 1 | 8 |
| 4 | 5 | 2 | 1 | 8 | 6 | 3 | 9 | 7 |
| 7 | 8 | 1 | 3 | 5 | 9 | 2 | 4 | 6 |
| 1 | 2 | 3 | 8 | 6 | 4 | 9 | 7 | 5 |
| 9 | 7 | 5 | 2 | 1 | 3 | 8 | 6 | 4 |
| 8 | 4 | 6 | 5 | 9 | 7 | 1 | 2 | 3 |





# திக்கம் கிண்ண இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், நவ. 15

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்திய 11 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை திக்கம் இளைஞர் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மாலை 3 மணிக்கு இடம்பெறும் நட்பு ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதும்.

மாலை 4 மணிக்கு இடம் பெறும் இறுதியாட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதும். இன்றைய நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், இனிய விருந்தினர்களாக சக்கோட்டை புனித சவேரியார் ஆலயத்தின் பங்குத் தந்தை நிருபன் நிசானந், வடமராட்சி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் இராஜகோபால் ராஜ்சீலன், ஞானாசிரியர் கல்லூரி ஆசிரியர் சுதர்சன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் நவநீதமணி, வர்த்தகர்களான ரி.நவரெட்ணராஜா, த.ஐங்கரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-23)

## யங்கம்பன்ஸ்க்கு மூன்றாம் இடம்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்திய 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மனோகரா விளையாட்டுக் கழகஅணிமோதியது. இதில்யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (உ-23)

## தீவக லீக் ஆட்டங்களில் மூன்று அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், நவ.15

தீவக உதைபந்தாட்ட லீக்கின் ஆளுநர் வெற்றிக் கிண்ணப் போட்டியில் நேற்று வெள்ளிக்கிழமைநடைபெற்றஆட்டங்களில் புங்குடுதீவுபாரதி, சென்.ஜேம்ஸ், அண்ணா ஆகிய கழகங்கள் வெற்றிபெற்றன.

நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆட்டங்கள் இடம்பெற்றன. புங்குடுதீவு பாரதி விளையாட்டுக்கழக அணிக்கும் சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புங்குடுதீவு பாரதி விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஊர்காவற்றுறைசென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் அம்பிகை நகர் ஸ்ரீ மகேஸ்வரி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில்ஊர்காவற்றுறைசென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மெலிஞ்சிமுனைஇருதயராஜா விளையாட்டுக்கழக அணிக்கும்நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நாரந்தனை அண்ணா 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (உ-23)

## பருத்தித்துறை லீக்கின் வெள்ளி ஆட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ. 15

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் ஆளுநர் வெற்றிக் கிண்ண போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் வல்வை வி.க, பலாலி விண்மீன், சென். சேவியர், திக்கம் இளைஞர் அணிகள் வெற்றிபெற்றன. திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இரு ஆட்டங்களும் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இரு ஆட்டங்களும் நடைபெற்றன.

பி.ப 3 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில்வல்வை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக்கழக அணி மோதியது. வல்வை அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மாலை 4 மணிக்கு இடம்பெறவிருந்த ஆட்டத்துக்கு சென். பீற்றஸ் விளையாட்டுக்கழக அணி வராமையால் பலாலி விண்மீன் வெற்றி பெற்றது.

அல்வாய் நண்பர்கள் விளையாட்டு மைதானத்தில் பி.ப. 3 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சென். சேவியர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக் கழகஅணிமோதியது. சென்.சேவியர் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மாலை 4 மணிக்குஇடம்பெறும்ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதியது. திக்கம் இளைஞர்2:0என்றகோல்கணக்கில் வெற்றி பெற்றது. (உ-23)

## மத்தியின் இன்னிங்ஸ் வெற்றி பறந்தது பருவ மழையால்

வலி.வடக்கு, நவ. 15

இராஜ்கிளின்டன் பெற்ற அரைச்சதம் மற்றும் ஐதுர்சன் டினுசன் ஆகியவர்கள் சரித்த இலக்குகளின் மூலம் கனகரத்தி னம் மத்திய மகா வித்தியாலயத்துக்கு எதிராக யாழ். மத்திய கல்லூரி வெற்றி பெற்றது. இன்னிங்ஸ்வெற்றியை ருசிக்க இருந்த தருணத்தில் மழை வந்து அதனைக் குழப்பிவிட்டது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் வடமாகாணப் பாடசாலை 13 வயது அணிகளுக்கு இடையே கிரிக்கெட் போட்டி நடத்திவருகிறது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் மத்திய கல்லூரியும் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி 41.5 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. இராஜ்கிளின்டன் ஒன்பது நான்குகளுடன் 77 ஓட்டங்கள் குவித்தார். சதுர்சன் 4 ஓட்டங்களால் அரைச் சதத்தைத் தவறவிட்டார். ஜனஸ்ரின் 5 இலக்குக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 27.2 ஓவர்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 58 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அன்ரனி வசந் 10 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். உதிரிகளாகப் 10 ஓட்டங்களும் பெறப்பட்டன.

டினுசன் 9 ஓவர்கள் பந்து வீசி 4 இலக்குகளை வீழ்த்தினார். இரண்டாவது இன்னிங்ஸையும் தொடர்ந்தாடுமாறு கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் பணிக்கப் பட்டது. 22 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 44 ஓட்டங்களை மட்டுமே பெற்றி ருந்த நிலையில் மழை வந்து இன்னிங்ஸ் தோல்வியிலிருந்து அணியைக் காப்பாற்றியது.

அன்ரனிவசந் 14 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். ஐதுர்சன் 11 ஓவர்கள் பந்து வீசி 4 இலக்குகளை வீழ்த்தினார். (உ-86)

## இளம்பறவை, சந்திரன் முல்லை. லீக்கில் வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 15

முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக்நடத்தும்ஆளுநர்வெற்றிகிண்ணப் போட்டியின் ஆட்டங்கள் முள்ளியவளை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் சிலாவத்தை இளம் பறவை விளையாட்டுக்கழக அணி, செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக்கழக அணி ஆகியவை வெற்றிபெற்றுள்ளன.

இதில் முதலில் இடம்பெற்ற சிலவத்தை இளம்பறவை விளையாட்டுக்கழக அணிக்கும் சுப்பறாங் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சிலாவத்தை இளம் பறவை அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக்கழக அணிக்கும் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதேவேளை- முல்லைத்தீவில் இராணுவம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக மைதானம், உடுப்புக்குளம் அலைஓசை விளையாட்டுக்கழக மைதானம் என்பவற்றில் இடம்பெறவுள்ளன. இந்தப் போட்டியில் 20 விளையாட்டுக்கழக அணிகள் பங்குபற்றுகின்றன. (உ-23)




## தாச்சிப் போட்டி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 15

வடக்கு மகாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் நிதிப்பங்களிப்புடன் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் இன்றும் நாளையும் நடத்தவிருந்த தச்சிப் போட்டி காலநிலை சீரின்மை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது எனவும் போட்டிநடைபெறும் திகதி, இடம் என்பன பின்னர் அறியத்தரப்படும் எனவும் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (உ-23)

# சாதனைகளின் உச்சியில் ரோஹித் சர்மா




துடுப்பாட்டமும் அரசியலும் மிகவும் பிரபல்யமாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் துடுப்பாட்டத்தை மேலும் பிரபல்யப்படுத்தி இந்திய அணிக்கு மகுடம் சூட்டியுள்ளார் இந்திய அணியின் துடுப்பாட்ட வீரரான ரோஹித் சர்மா. இலங்கைக்கு எதிரான நான்காவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ரோஹித் சர்மா 173 பந்துகளை மாத்திரமே எதிர்கொண்டு 264 ஓட்டங்களை விளாசினார்.

ஆரம்பத்தில் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி நூறு பந்துகளில் தனது சதத்தைப் பூர்த்தி செய்த ரோஹித் சர்மா சதமடித்த பின்னர் தனது தனித்துவப் பாணியில் பந்துகளை 360 பாகையில் பறக்கவிட்டார். 125 பந்துகளில் 150 ஓட்டங்களையும் 151 பந்துகளில் தனது இரண்டாவது இரட்டைச் சதத்தையும் நிறைவு செய்தார். அவ்வேளையில் ரசிகர்களின் கரவொலியால் ஈர்டன் கார்டன் மைதானமே அல்லோலகல்லோலப்பட்டது.

தொடர்ந்து ஆறுகளையும் நான்குகளையும் பறக்க விட்ட ரோஹித் சர்மா 166 பந்துகளில் 250 ஓட்டங்களைப் பெற்றார். 200 - 250 ஓட்டங்களைப் பெற வெறும் 15 பந்துகளை மாத்திரமே அவர் எடுத்துக்கொண்டார். இந்திய அணியின் இன்னிங்ஸின் இறுதிப்பந்தில் ஆட்டமிழந்த அவர் 173 பந்துகளில் 264 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

இந்தப் போட்டியில் 33 நான்குகளை விளாசியதன் மூலம் முன்னதாக சச்சின் சேவாக் (25 நான்குகள்) ஆகியோரின் சாதனைகளை முறியடித்து ஒரு நாள் போட்டியில் அதிக நான்குகள் விளாசியவர் என்ற சாதனையையும் பெற்றார்.

220 ஓட்டங்களை தாண்டியதன் மூலம் முன்னதாக சேவாக்கிடம் இருந்த ஒரு நாள் போட்டியில் அதி கூடிய ஓட்டம் பெற்றவர் (219ஓட்டங்கள்) என்றசாதனையை முறியடித்து 264ஓட்டங்கள் என்னும் புதிய சாதனையையும், ஒரு நாள் போட்டியில் இரண்டு முறை இரட்டைச் சதம் பெற்ற ஒரே வீரர் என்ற உலக சாதனையையும், ஒரு நாள் போட்டியில் 250 ஓட்டங்களைப் பெற்ற ஒரே வீரர் என்ற சாதனையையும் நிலைநாட்டி வரலாற்றையும் சாதனை உலகையும் தனக்குச் சார்பாக மாற்றியமைத்தார்.



இரட்டைச்சதம் கடந்த ரோஹித் சர்மா பின்பு இறுதிப்பந்தில் ஆட்டமிழந்ததன் மூலம் இரட்டைச்சதம் கடந்து இறுதிவரை ஆட்டமிழக்காது இருந்த வீரர் எனும் பெருமை தொடர்ந்து சச்சினிடமே உள்ளது. ஒரு நாள் போட்டிகளில் இரட்டைச் சதம் அடித்த அனைவரும் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ரி)

ஒரு போட்டியில் அதிக ரன் குவித்தவர்கள் (டாப்-5)

| வீரர் | ரன் | பந்து | 4 | 6 | நாடு | எதிரணி |
|---|---|---|---|---|---|---|
| ரோஹித் சர்மா | 264 | 173 | 33 | 9 | இந்தியா | இலங்கை |
| வீரேந்திர சேவாக் | 219 | 149 | 25 | 7 | இந்தியா | மே.இ.தீவுகள் |
| ரோஹித் சர்மா | 209 | 158 | 12 | 16 | இந்தியா | ஆஸ்திரேலியா |
| சச்சின் டெண்டுல்கர் | 200* | 147 | 25 | 3 | இந்தியா | தென் ஆப்பிரிக்கா |
| சார்லஸ் கவென்ட்ரி | 194* | 156 | 16 | 7 | ஜிம்பாப்வே | வங்கதேசம் |

# ஆர்ஜென்ரீனா அபாரம்

குரோஷியாவுக்கு எதிரான சர்வதேச நட்பு உதைபந்துப் போட்டியில் ஆர்ஜென்ரீனா அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆர்ஜென்ரீனா, குரோஷியா அணிகளுக்கு இடையிலான சர்வதேச நட்பு உதைபந்து போட்டி லண்டனில் நேற்று முன்தினம் நடைபெற்றது. ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் குரோஷியாவின் ஷார்பினி முதல் கோல் அடித்தார். இதற்கு ஆர்ஜென்ரீனா அணியினரால் பதிலடி கொடுக்கமுடியவில்லை. முதல் பாதி முடிவில் குரோஷியா 1:0 என முன்னிலை வகித்தது. பின், இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட ஆர்ஜென்ரீனாவுக்கு அன்சால்டி (49ஆவது நிமிடம்), லியோனல் மெஸ்சி (57ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர்.

கடைசி நிமிடம் வரை போராடிய குரோஷிய வீரர்களால் கூடுதலாக கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. ஆட்ட நேர முடிவில் ஆர்ஜென்ரீனா அணி 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (த)



# 2014 இல் சிறந்த வீரராக மிட்சல் ஜோன்சன்



சர்வதேச கிரிக்கெட் சபை, இந்த ஆண்டுக்கான ஐ.சி.சி. விருதுகளின் வெற்றியாளர்களை அறிவித்துள்ளது. முக்கிய விருதுகள் எதையும் இந்திய வீரர்களில் ஒருவர் கூட பெற வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் மிட்சல் ஜோன்சன், ஐ.சி.சி. சிறந்த டெஸ்ட் போட்டி வீரர் மற்றும் இந்த ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரர் ஆகிய இரண்டு விருதுகளைத் தட்டிச் சென்றுள்ளார்.

முன்னதாக இந்த ஆண்டுக்கான மக்கள் விருப்ப விருதுக்கு இந்திய வேகப்பந்து வீச்சாளர் புவனேஸ்வர் குமார் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். மேலும் ஐ.சி.சி. ஒருநாள் அணியில் விராட் கோஹ்லி மற்றும் தோனி ஆகியோரது பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அந்த அணிக்குத் தோனி தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

விருது பெற்றவர்கள் விவரம்:-

ஐ.சி.சி. சிறந்த ஒருநாள் போட்டி வீரர் - டி வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா).

ஐ.சி.சி. சிறந்த டெஸ்ட் போட்டி வீரர் - மிட்சல் ஜோன்சன் (ஆஸ்திரேலியா).

ஐ.சி.சி. மக்கள் விருப்பம் - புவனேஸ்வர் குமார் (இந்தியா)

ஐ.சி.சி. இந்த ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர் - மிட்சல் ஜோன்சன் (ஆஸ்திரேலியா).

ஐ.சி.சி. இந்த ஆண்டுக்கான ஒருநாள் அணி:

ஹபீஸ், டி கொக், விராட் கோஹ்லி, ஜோர்ஜ் பெய்லி, டி வில்லியர்ஸ், மகேந்திர சிங் தோனி (தலைவர்), டுவைன் பிராவோ, பல்க்னர், டேல் ஸ்டெய்ன், முகமது ஷமி, மெண்டிஸ், ரோஹித் சர்மா. (த)

# நெய்மரின் அதிரடியினால் வென்றது பிரேஸில் அணி



துருக்கியில் இஸ்தான்புலில் நடந்த நட்பு ரீதியிலான சர்வதேச உதைபந்துப் போட்டியில் பிரேஸில், துருக்கி அணிகள் மோதின. இதில் அசத்தலாக ஆடிய பிரேஸில் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. பிரேஸில் அணி சார்பில் நெய்மர் 2 (20, 60ஆவது நிமிடம்), வில்லியன் ஒரு (44ஆவது நிமிடம்) கோல் அடித்தனர். துருக்கியின் கயா (24ஆவது நிமிடம்), சேம் சைட் கோல் அடித்தார்.

இதேவேளை - நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் நடந்த போட்டியில் நெதர்லாந்து, மெக்சிக்கோ அணிகள் மோதின.

இதில் நெதர்லாந்து அணி 2:3 என்ற கோல் கணக்கில் தோல்வி அடைந்தது. நெதர்லாந்து சார்பில் ஸ்னெய்டர் (49ஆவது நிமிடம்), பிலைண்ட் (74ஆவது) தலா ஒரு கோல் அடித்தனர். மெக்சிக்கோ அணிக்கு வேலா (8, 62ஆவது நிமிடம்), ஹெர்ணான்டஸ் (69ஆவது) கைகொடுத்தனர். (த)



# ஆரம்பித்தது ஆஸ்திரேலியாவின் ஆதிக்கம்

ஆஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான ஒரு நாள் தொடரின் முதலாவது போட்டி நேற்றைய தினம் ஆஸ்திரேலியாவின் பேர்த் மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி ஆஸ்திரேலியாவை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இதன்படி ஆஸ்திரேலியாவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் அவ் அணிக்கு நிதானத் தொடக்கத்தை அமைத்துக் கொடுக்க 50 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 300 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலியா அணிசார்பாக பெய்லி 70 (75) ஓட்டங்களையும், வோர்ணர் 46(49) ஓட்டங்களையும், வேட் 35(40) ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக பிலண்டர் 4 இலக்குகளையும், ஸ்ரீன் 2 இலக்குகளையும் மோர்கல், ரகீர் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

301 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் ஆரம்பம் முதலே தடுமாற்றம் கொடுத்து சொற்ப ஓட்டங்களுடன் அடுத்தடுத்து வெளியேறினர். தொடர்ந்து வந்த வீரர்களும் நிலைக்கத் தவற அவ் அணி 48.1 பந்துப் பரிமாற்றத்தில் சலக இலக்குகளையும் இழந்து 268 ஓட்டங்களைப் பெற்று 32 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக வில்லியர்ஸ் அதிக பட்சமாக 80 (70) ஓட்டங்களையும் மில்லர் 65(65) ஓட்டங்களையும் பிளாசிஸ் 31(45) ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக நெய்ல் 4 இலக்குகளையும், ஜோன்சன் 2 இலக்குகளையும் வர்சன், மக்ஷ்வெல், கரிஸ்வூட் ஆகியோர் தலா ஒரு இலக்குகளையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக நெய்ல் தெரிவானார். (த-ரி)



# அபாயகரமான வீரர் ரோகித்

ரோகித் ஷர்மாவின் சாதனை குறித்து என் குழந்தைகளிடம் சொல்வேன் என்று அணித் தலைவர் கோஹ்லி கூறியுள்ளார்.

இலங்கைக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் 2வது முறை இரட்டைச் சதம் அடித்து ரோகித் ஷர்மா உலக சாதனை படைத்துள்ளார்.

இது குறித்து கோஹ்லி கூறியதாவது, ரோகித் ஷர்மா ஒரு அபாயகரமான வீரர் என்று தெரிவித்து இருந்தேன், அதை அவர் நிரூபித்துக் காட்டிவிட்டார். அவருடன் இணைந்து விளையாடியது எண்ணிப் பெருமைப்படுகிறேன், இந்தச் சாதனையை பற்றி என் குழந்தைகளிடம் பெருமையுடன் சொல்வேன்.

அன்று களத்தில் இருந்து ரோகித் ஷர்மாவின் ஆட்டத்தை நேரில் பார்த்தேன் என்று கூறுவேன். இந்தச் சாதனையை யாரும் முறியடிக்க முடியாது என நினைக்கிறேன் என்று கூறியுள்ளார்.

மேலும், இத்தொடரில் 4-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருக்கிறோம். இதனால் ராஞ்சியில் நடக்கும் 5ஆவது போட்டியை எளிதாக எடுத்து கொள்ள மாட்டோம்.

அதிலும் ஆக்ரோஷமான ஆட்டத்தையே வெளிப்படுத்துவோம். நான் அணித் தலைவராக இருந்தபோது தோல்வியை விட வெற்றி அதிகம் வந்து இருக்கிறது.

ஆனால் அணி இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும் போது தான் அணித்தலைவரின் திறமை பரிசோதிக்கப்படும். இதுபோன்ற சூழ்நிலை விரைவில் எனக்கு வரும் என்று கூறியுள்ளார். (த)

# இன்னும் 50 ஓவர் ஆடுவேன்

உலக சாதனை படைத்த ரோகித் ஷர்மா, தன்னால் இன்னும் 50 ஓவர் துடுப்பாட்டம் செய்ய முடியும் என்று கூறியுள்ளார்.

சர்வதேச ஒரு நாள் போட்டியில் தனிநபர் அதிகபட்சம், இரண்டு முறை இரட்டைச் சதம் அடித்த ஒரே வீரர், ஒரு இன்னிங்சில் அதிக பவுண்டரிகள் நொருக்கியவர்.

முத்தான சாதனைகளை ஒரே நாளில் தன்னகத்தே உள்ளடக்கிய ரோகித் ஷர்மா, தான் ஈட்டிய சாதனை குறித்து கூறியதாவது:-

காயத்தால் ஏற்கனவே சில மாதங்கள் ஓய்வு எடுத்து விட்டு தான் வந்திருக்கிறேன். உண்மையிலேயே எனக்கு எந்த களைப்பும் தெரியவில்லை. இன்னும் 50 ஓவர்கள் கூட என்னால் தொடர்ந்து துடுப்பாட்டம் செய்ய முடியும். 50 ஓவர்கள் முழுமையாக ஆடியது மிக வும் திருப்தி அளிக்கிறது. முடிந்த வரை நீண்ட நேரம் துடுப்பாட்டம் செய்வது எப்படி? என்பதில் கூடுதல் கவனம் செலுத்தி



வருகிறேன். மேலும், விராட் கோஹ்லியின் ஆட்டமிழப்புக்கு எனது தவறு தான் காரணம், ஆனால் கிரிக்கெட்டில் இது சகஜம். கொல்கத்தா ஈடன்கார்டன் எனக்கு எப்போதுமே சிறப்பு வாய்ந்தது. இங்கு தான் முதல் முறையாக ரஞ்சி கிரிக்கெட்டில் விளையாடினேன். எனது அறிமுக டெஸ்ட் சதத்தை அடித்தேன், அதில் இருந்து இங்குள்ள ரசிகர்கள் என்னை உற்சாகப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள் என்று கூறியுள்ளார். (த)

# களத்தடுப்பு மிக மோசம்

நாங்கள் இந்திய அணிக்குச் சிறிய நெருக்கடி கூடக் கொடுக்கவில்லை. கடைசி 20 ஓவரில் அதிக ஓட்டங்கள் கொடுத்து விட்டோம். எங்களது பந்து வீச்சாளர்களிடம் பதிலடி கொடுக்கப் பதில் இல்லை. களத்தடுப்பு மிக மோசமாக இருந்தது என்று இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் கூறியுள்ளார்.

இந்தியாவுடன் ஏற்பட்ட மோசமான தோல்வி குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

நாங்கள் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என அனைத்திலும் முன்னேற்றம் காண்பது அவசியம். கடைசி 25 ஓவரில் 290 ஓட்டங்கள் குவித்ததை நம்ப முடியாத வகையில் இருந்தது. அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ரோகித் சர்மா ஆட்டம் அபாரமாக இருந்தது-என்றார். (த)

## தொடர்ச்சிகள்

### சந்தேக

னர் என்று பொலிஸார் தெரிவித்த னர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் காவல்துறையில் பணியாற்றியிருந்த - முன்னாள் போராளியான கி.நகுலேஸ்வரன் (வயது-40) நேற்றுமுன்தினம் இரவு அவரது வீட்டில் வைத்து இனந் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். கொலைக்குப் பயன்படுத்திய ரி-56 ரகத் துப்பாக்கி கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், இந்தச் சம்பவம் தொடர்பில் நான்கு பேரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொலிஸார் நேற்றுக் கூறியிருந்தனர். இந்தநிலையிலேயே தற்போது சந்தேக நபர்களிடம் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, உடற்கூற்றுப் பரிசோதனைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நகுலேஸ்வரனின் உடல், பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றவுள்ள நிலையில், உடலை எரிக்காது புதைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ந-4)

### இராணுவம்

களிடம் கேட்டுள்ளோம்" என்று அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கில் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்புக்கள் தொடர்பில் வடக்கு மாகாண சபையில் விசேட அமர்வு நடத்தப்பட்டிருந்தது. அதில் முப்படையாலும், சிங்களக் குடியேற்றத்துக்காகவும் 82 ஆயிரம் ஏக்கர் வரையில் அபகரிக்கப்பட்டுள்ளது என்று அடையாளம் காணப்பட்டிருந்தது.

ஆனாலும் அதனை விடவும் அதிக ஏக்கர் காணிகளே இராணுவத்தினரால் அபகரிக்கப் பட்டுள்ளது என்று அங்கு குறிப்பிடப்பட்டதுடன், இது தொடர்பில் முழுமையான தகவல்களைத் திரட்ட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய உள்ளூராட்சி மன்றங்களினூடாக தகவலைத் திரட்டுவதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கொழும்பு அரசின் கீழ் செயற்படும் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பன இதற்குரிய ஒத்துழைப்பை வழங்காததன் காரணத்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் நிர்வகிக்கப்படும் உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக இவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முப்படையினரும்நிலைகொண்டுள்ள காணிகள் எவை?, அவற்றில் தனியாருக்குச் சொந்தமானவை எவை?, உள்ளிட்ட சகல விவரங்களும் இதன் போது திரட்டப்படவுள்ளன. (ந-5)

### வருவாய்த்துறை

நியதிச் சட்டம் மற்றும் முத்திரைவரி கைமாற்றல் நியதிச் சட்டம் என்பன கடந்த ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டிருந்தன. இவை வடக்கு மாகாண ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதனை ஒரு மாதத்தின் பின்னர், செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அங்கீகரித்திருந்தார்.

இரண்டு நியதிச் சட்டங்களும் வர்த்தமானி பிரசுரத்துக்காக வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. கடந்த ஓகஸ்ட் 31 ஆம் திகதி, விசேட வர்த்தமானி பிரசு ரம் ஊடாக இரண்டு நியதிச் சட்டங்களும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

நிதி நியதிச் சட்டத்துக்கு அமைவாக, வடக்கு மாகாண வருவாய்த்துறை அலுவலகம் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்குரிய ஆணையாளர் மற்றும் ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டும். இவை வடக்கு மாகாண நிதிக்குப் பொறுப்பாகவுள்ள முதலமைச்சர் மற்றும் பிரதம செயலாளரால் முன்னெடுக்கப்பட வேண்டும். இது வரையில் இதற்குரிய எந்தவொரு நடவடிக்கையும் மேற் கொள்ளப்படவில்லை. (ந-5)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 19.10.2014
ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

துரைச்சாமி திருநாவுக்கரசு

அவர்களின் அந்தியேட்டி
கிரியை நாளை (16.11.2014)
ஞாயிற்றுக்கிழமை காலை
9.00மணிக்கு
சாம்பலோடை தீர்த்தக்
கரையிலும், வீட்டுக்கிரியை
18.11.2014 செவ்வாய்க்கிழமை
முற்பகல் 11 மணிக்கு எமது
இல்லத்திலும் நடைபெறும்.



அன்னாரின் ஆத்சாந்திப் பிரார்த்தனையிலும்
மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

காளிகோயிலடி,
களபூமி, காரைநகர்.

குடும்பத்தினர்.

(54266)(10)

# அமைச்சுக் காணிக்கு சுற்றுமதில்; நீதிமன்றம் இடைக்காலத் தடை

யாழ்ப்பாணம், நவ. 15

மன்னார் நகரசபையின் அனுமதியின்றி கைத்தொழில் வாணிப அமைச்சுக்கு என கட்டப்பட்ட சுற்றுமதில் அறிவுறுத்தல்களையும் மீறிக் கட்டியதனால் மன்னார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததையடுத்து மதில் கட்டுவதற்கு நீதிமன்று இடைக்காலத்தடை விதித்துள்ளது. அது தொடர்பான ஆட்சேபனைக்காக வழக்கு எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த அமைச்சின் மன்னார் மாவட்ட அலுவலகம் ஒன்றைக் கட்டுவதற்காகவே நகரில் ரயில் நிலைய வீதியை அண்மித்துள்ள காணியில் இடம் எடுத்துச் சுற்றுமதில் அமைக்கப்பட்டு வந்தது. அந்தக் காணி முன்னர் இலங்கைப் போக்குவரத்துச் சபை இயங்கிய காணி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு சுற்றுமதில் அமைப்பதற்கு நகர சபையின் அனுமதியைப் பெறவில்லை. அனுமதி பெற்றுக் கட்டுமாறு அவர்களுக்குக் கூறியபோதும், அதனை அவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. அது தொடர்பில் குறித்த அமைச்சுக்குக் கடிதம் மூலமாக அறிவித்தும் அதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் நகர சபையினர் மன்னார் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர்.

அதனைப் பரிசீலித்த நீதிமன்று சுற்றுமதில் கட்டுவதற்குக் கடந்த வாரம் இடைக்காலத் தடை விதித்தது. அது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கில் நகர சபை சார்பாக சட்டத்தரணி ப.விநோதனும், வழக்கின் எதிராளிகளும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். அது தொடர்பான ஆட்சேபனைக்காக வழக்கு எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(த-4-56)

# காத்தான்குடி நகரசபை ஏகமனதாக 'பட்ஜெட்' ஏற்பு

காத்தாக்குடி, நவ, 15

காத்தான்குடி நகரசபையின் 2015ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டக் கூட்டம் நகரசபை சபா மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றபோது வரவு -செலவுத்திட்டம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வரவு -செலவுத்திட்ட அறிக்கையை நகரசபைத் தலைவர் எஸ்.எச்.அஸ்பர் சபையில் முன்வைத்தார்.

இந்த வரவு -செலவுத்திட்ட அறிக்கையில் திண்மக்கழிவு முகாமைத்துவம், சுகாதாரம், கல்வி அபிவிருத்தி, கர்ப்பிணிகளுக்கான போஷாக்கு உள்ளீட்டவைகள் உள்ளடக்கப்பட்டதுடன், திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக காத்தான்குடி நகரசபைத் தலைவர் எஸ்.எச்.அஸ்பர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் பிரதித் தவிசாளர் எம்.ஐ.எம்.ஜெஸீம், நகரசபை உறுப்பினர்களான எம்.அலி சப்ரி, எச்.எம்.எம்.பாக்கீர், எம்.எஸ்.சியாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஒ-10)

# மட்டு. பல்கலை மாணவருக்கு உதவி வழங்கும் நிகழ்வு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஊக்குவிப்புத் தொகை மற்றும் பெண்களுக்கான வாழ்வாதாரம், அவசர தேவைக் கான உதவி வழங்கல் நிகழ்வு வியாழக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட்ச்செயலகத்தில் நடைபெற்றது.

இளைஞர் அபிவிருத்தி அகமும் மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த இந்த நடவடிக்கையில் 5 லட்சத்து 72 ஆயிரத்து 500 ரூபா 43 பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் 20 பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

பெண்களை வலுப்படுத்துதல், இளைய சமுதாயத்தினரின் திறன்களை வலுப்படுத்துதல், கீழ் மட்டத்திலுள்ளவர்களின் வாழ்வாதார மீட்சிக்கு உதவுதல் உள்ளிட்ட பல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு 1998ஆம் ஆண்டிலிருந்து திருகோணமலையை தலைமையகமாகக் கொண்டு இளைஞர்களுக்கான அகம் நிறுவனம் இயங்கிவருகிறது. இந்த நிறுவனம் 2013ஆம் ஆண்டு இறுதியிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்பட்டு வருகின்றது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் க.லவகுகராஜா, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன், மாவட்ட உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஏ.சுதர்சன், அகம் நிறுவனத்தின் மதியுரைஞர் பி.சச்சிதானந்தம், பிரதி இணைப்பாளர் எஸ்.கலாரதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(ஒ-10)

CHUNDIKULI GIRLS' COLLEGE JAFFNA

New Admission - 2015
English Medium Nursery

★ For 3+ & 4+ Classes (Girls Only)
★ Only Limited Vacancies
★ For 3+ Class
Age:- Born on or after 01.02.2011 before 31.01.2012
★ For 4+ Class
Age:- Born on or after 01.02.2010 before 31.01.2011
★ Applications Close on 5th December 2014
★ Applications Forms (limited number) will be available at the College office from 20th November 2014
★ Interviews will be held soon after the submission of the applications.

(C17643)
(12.6)

Principal.

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm



Silver 10.15am, 2.15pm, 6.15pm



Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

# மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மும் மொழிப் பெயர்ப் பலகைகள்

மட்டக்களப்பு, நவ. 15

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு - இஸ்லாமிய வர்த்தகர்களின் நலன்புரி அமைப்பினால் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் மும்மொழிகளிலான பெயர்பலகைகள் டி.வி.டி. பிளேயர்கள் என்பன அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் சிரமமின்றி வைத்திய சேவைப் பிரிவுகளை அடையாளம் காண்பதற்காகவே மும்மொழிகளிலான பெயர்ப் பலகைகளை கையளித்ததாக இஸ்லாமிய வர்த்தக நலன்புரி அமைப்பினர் தெரிவித்தனர்.

குறித்த பொருள்கள் மட்டக்களப்பு இஸ்லாமிய வர்த்தகர்களின் நலன்புரி அமைப்பின் தலைவரும்,சமூக சேவையாளரும், மட்டு-பிலால் எம்போரியத்தின் உரிமையாளருமான கே.எம்.எம்.கலீலினால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி எம்.பரீட்டிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

(10)

# தவறவிட்ட பெற்றோரை கண்டு பிடிக்கும் திட்டம்

*கலந்துரையாடல்கள் மட்டக்களப்பில்*

பெற்றோரைத் தவறவிட்டு சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் தங்கியுள்ள பிள்ளைகளின் தாய் -தந்தையரை தேடிக் கண்டுபிடிக்கும் திட்டத்தை விரைவுப்படுத்துதல் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன.

கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்கள ஆணையாளர் தலைமையில் நடைபெற்று வரும் இந்தக் கலந்துரையாடல்கள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின.

இந்தக் கலந்துரையாடல் மட்டக்களப்பிலுள்ள சிறுவர் இல்ல முகாமையாளர்கள், நிர்வாகிகள், சிறுவர் உத்தியோகத்தர்களுக்கு நடத்தப்பட்டது. இதன்போது மட்டக்களப்பு சிறுவர் நன்னடத்தை காரியாலய பொறுப்பதிகாரி எம்.வரதராஜன், தலைமைக் காரியாலய ஆலோசகர் எஸ்.ரவிச்சந்திரன், தலைமைக் காரியாலய உத்தியோகத்தர் அனுஸ்கா ஹேமந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 10)

வீடு வாடகைக்கு தேவை
அரசாங்க உத்தியோகத்தில் பணிபுரியும் இரண்டு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்திற்கு நல்லூர், திருநெல்வேலியை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 722 2262 (54093) (4.6.3)

யாழ். நகரில் EDIUS 7 Pro
HD /SD



வீடியோ எடிட்டிங் பயிற்சி வகுப்புக்கள்
எடிட்டிங் செய்வதற்கான Software களுடன் செய்முறை பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.
நாள்: நவம்பர் 17 -18, நேரம்: மு.ப. 10.00 - 5.00 (இரண்டு நாள்கள் நடைபெறும்)
இடம்: சொர்ணாம்பிகை மண்டபம் (TCT) இல.527, நாவலர் வீதி, நல்லூர்.
CHOICE HD & EDIUS 7 Pro DEALER IN SOUTH-TN
யாழ்.நகர்: 0777 162 339 | 0777 710 958 | 0777 321 313
லாப், யாழ்ப்பாணம். C/17642)(5.6)

பாராட்டி வாழ்த்துகின்றோம்




10.11.2014 அன்று
யாழ். பல்கலைக்கழகத்தில்
முகாமைத்துவ கற்கை
நெறியில் பட்டம் பெற்ற
சிவலோகநாதன்
அனுசா
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துவதுடன் அவர்
மேன்மேலும் பல பட்டங்
கள் பெற மனதார பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: (47336) (4.3.6)
அப்பா, அம்மா, அக்கா, அத்தான்மார்.

வைத்தியம் ஞாயிறு, திங்கள்
அனைத்துவித முள்ளந்தண்டு பிரச்சினைகள்,
சத்திரசிகிச்சையின் பின்வரும் விறைப்பு, வலி,
உணர்வுக்குறைவு, இறுக்கம் குழந்தை இன்மைக்கான
அனைத்து வித சிகிச்சைகள், கருப்பைக்கட்டிகள், வாதம்,
இருமல், இளைப்பு, Asthma Allergy உடல் பருமன்,
உடல் மெலிவு, பலவீனம், தளர்ச்சி, பயம், நாட்பட்ட
தலைவலி, பீனிசம், தலைமுடி கொட்டுதல்.
சித்த வைத்தியர்: Dr.R.Sivagurunathan
077 730 1669 நல்லூரிலும் வெள்ளவத்தையிலும். (சி/17491) (4.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி இந்திராணி ஐயாத்துரை

யாழ்ப்பாணம், இணுவிலைப் பிறப்பிடமாகவும் மன்னார், சாவற்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி ஐயாத்துரை (13.11.2014) வியாழக்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை அவர்களின் மனைவியும், ரகுநாதன், ஜெயதேவி, உமாராணி ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்றவர்களான பாக்கியவதி, ஞானேஸ்வரன் மற்றும் சிவபாதசுந்தரம் ஆகியோரின் மாமியாரும், ரபோனி சந்திரமோகன் (கனடா), மங்களரூபி ஜெகதீஸ்வரன்(லண்டன்), ஜெயசக்தி பிரபாகரன்(வவுனியா), ருத்திராதேவி-சுகந்தன், சிவப்பிரியை -குகரூபன் (கனடா), நரேந்திரம் -சுபா உமா, சர்வேஸ்வரன், சக்திதரன் ஆகியோரின் பேர்த்தியும், திவ்யா, அபிராம், சாய்மோன்(கனடா), ரிஷிக்கா, கவிஜன் (லண்டன்), அர்ஜீன் (வவுனியா), கீரன் (கனடா), தேவனா(மன்னார்) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் (13.11.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப. 4.00 மணியளவில் மன்னார் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்:
பேர்த்தி ருத்திரா சுகந்தன்.

பி.சுகந்தன்: 077 815 5369
உருத்திராதேவி: 077 640 1049

(54258) (4.6)

## ஆதார வைத்தியசாலை-பருத்தித்துறை மந்திகை நோயாளர் நலன்புரி சங்கம் 2015ஆம் ஆண்டுக்கான கேள்வி கோரல்

மந்திகை நோயாளர் நலன்புரி சங்கத்துக்கு சொந்தமான சிற்றுண்டிச் சாலையையும், துவிச் சக்கர வண்டி, வாகனங்கள் தரிப் பிடத்தையும் 2015ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு குத்தகைக்கு நடத்துவதற்கு கேள்வி விண்ணப்பம் கோரப்படுகின்றது. 15.11.2014 முதல் 29.11.2014 வரை விண்ணப்பப் படி வங்களை மீளளிப்புச் செய்யப்படாத தொகை ரூபா 3000/= செலுத்தி, நலன்புரி சங்க பொருளாளரிடம் வைத்திய சாலையில் பெற்றுக் கொள்ளலாம். 30.11.2014 நண்பகல் 12 மணிவரை முத்திரையிடப்பட்ட படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். 30.11.2014 மாலை 3.00 மணிக்கு கேள்வி விண்ணப் பங்கள் திறக்கப்படும்.

தலைவர்
மந்திகை நோயாளர்
நலன்புரி சங்கம்.

(C/17648) (10.6)


# நீதிமன்றைப் படம் பிடித்த பெண் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், நவ. 15
மன்னார் நீதிமன்றத்தினுள் புகுந்து நீதிவானின் உத்தியோகபூர்வ அறையையும் பின்னர் அவரது வாகனத்தையும் இரகசியமாகப் படம்பிடித்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் பொலிஸாரினால் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மன்னார் நீதிவான் நீதி மன்றத்தில் நடந்துள்ளது. நேற்று வழக்கு நடவடிக்கைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது இளம்பெண்ணொருவர் மறைவாக நின்று கொண்டு இரகசியமான முறையில் தனது கையடக்க தொலைபேசி மூலமாக நீதிவான் ஆனந்தி கனகரட்ணத்தின் வாகனத்தையும் (கார்) அவரது உத்தியோகபூர்வ அறையையும் படம் பிடித்துள்ளார்.

வழக்கு ஒன்று தொடர்பில் அங்கு சென்றிருந்த இளைஞர் ஒருவர் அதனை அவதானித்து நீதி மன்ற பொலிஸாரிடம் கூறியுள்ளார். அதனையடுத்து குறித்த பெண்ணின் கையடக்க தொலைபேசியை பரிசோதித்த பொலிஸார் அதில் குறித்த படங்கள் இருப்பதை உறுதிசெய்தனர்.

அது தொடர்பாக குறித்த பெண்ணிடம் வினவியபோதும் அவர் சரியான காரணத்தை தெரிவிக்காததால் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட பெண் மடுவைச் சேர்ந்தவர் என்பதுடன் தற்போது கொழும்பில் வசித்து வருபவர் என்றும் தெரிவிக் கப்படுகிறது. அது தொடர்பில் பொலிஸார் விசாரணையை மேற்கொண் டுள்ளனர்.

(ற-4,103)

## வாசிப்பு மாத போட்டி இன்று

தென்மராட்சி, நவ.15
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் இன்றும் நாளையும் சாவகச் சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

அதில் ஆங்கில மொழி மூலம் போட்டிகளும் தமிழ் மொழி மூலம் போட்டிகளும் உயர் தரப் பிரிவு மாணவர்களுக் கான கட்டுரைப் போட்டிகளும் இடம்பெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (ற-9)


## ஆதார வைத்தியசாலை-பருத்தித்துறை மந்திகை நோயாளர் நலன்புரி சங்கம்

### நோயாளர் பராமரிப்பாளர்களை சேவைக்கு இணைத்தல்

மேற்படி சேவைக்கு இணைந்து கொள்ள விருப்பமானவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு 30.11.2014 இற்கு முன்னர் விண்ணப் பிக்கவும். தொண்டூதியம் வழங்கப்படும். ஆண், பெண் இருபாலாரும் சுயவிவரக் கோவையுடன் விண்ணப்பிக்கலாம். வயது 20 இற்கு மேல்.

தலைவர்,
மந்திகை நோயாளர் நலன்புரி சங்கம்,
ஆதார வைத்திய சாலை,
பருத்தித்துறை.

(C/17646) (10.6)


## மரண அறிவித்தல்



### வைத்திலிங்கம் தெய்வநாயகி

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் பாதிரி கோயிலடி சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தெய்வநாயகி நேற்று (14.11.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற செல்லையா மற்றும் செல்வபூரணம், அற்புத வேல் நாதர் (முன்னாள் ஊழியர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அஞ்சலாதேவி, அப்பையா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் இன்று (15.11.2014) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாதிரி கோயிலடி,
சண்டிலிப்பாய்.

(54271) (10)

தகவல்:
அற்புதவேல்நாதர்.


## விற்பனைக்கு

HONDA CBR 250 CC Motor Bike
New model 2012 பாவனை 8000km
தொடர்பு: 077 559 8666
(54251)(5.6)

## காணி விற்பனைக்கு

உடுவில் மானிப்பாய் பிரதான வீதியில் (உடுவில் மகளிர் பாடசாலை அருகில்) 4½ பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக் குண்டு.
(54264)(5.6)
தொடர்பு: 077 543 8612 / 077 625 7972

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111


## மரண அறிவித்தல்



### செல்லையா அம்பலவாணர் (அப்புத்துரை)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா அம்பலவாணர் (அப்புத்துரை) 12.11.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- முத்துப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கார்த்திகேசு-செல்லம்மா தம்பதியரின் மருமகனும்,காலஞ்சென்ற இராசம்மா, கதிரவேலு, பூரணம் சங்கரப்பிள்ளை, நவீனம்மா, காலஞ்சென்ற சரவணமுத்து, கமலாதேவி, காலஞ்சென்ற பூபதி ஆகியோரின் சகோதரனும், சற்குணராஜா (பிரான்ஸ்), அன்னபூரணி (கொலன்ட்), தருமவதி(மட்டுவில்), இராசரத்தினம் (பிரான்ஸ்), திருச்செல்வம்(பிரான்ஸ்), தனலட்சுமி, ஜெயகாந்தி,கருணாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வாசுகி, சிங்கராஜா, பாலசிங்கம், சாந்தநாயகி, நிமலாதேவி, சிங்கராஜா, அகிதன், ஹவ் ஆகியோரின் மாமனாரும், அபிராம், சாயுரன், சரணியா,சகானா, சாருஜன், பால்ராஜ், லோரன்ராஜ், கிருசாந்தி, பாலவேனிகா, சஜிக்கா, அக்ஷயன், திவ்வியா, கபிஷன், யசின், சுரேஸ், சியான், தவித், கரணிகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.11.2014)ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குச்சப்புட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிராஞ்சி லேன், மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்: பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


# ST.ANTONY'S

No.187, K.K.S. Road, Jaffna Town.
T.P: 021 222 4865, 075 069 8608.

சிறுவர்களுக்கான கணினி மலிவு விற்பனை
12900/= மட்டுமே
Free:- Games, Head Phone/ 4GB Pendrive
ஒரு வருட உத்தரவாதம் கையிருப்பு உள்ளவரை மட்டுமே



Intel Full set Computer
Only 39500/=
- Dual-Core 3.20GHz CPU
- Asrock Motherboard
- 250GB Hard Disk
- 2GB Ram
- "19" LED Monitor (Samsung,Viewsonic,HP)
- DVD Writer
- Keyboard
- Speaker

Free:- Head Phone/ Web cam, 8GB Pendrive
மூன்று வருட உத்தரவாதம்

Only 53500/= HP I3-Laptop
4 GB Ram
500 GB Hard Disk
1 Year Warranty

HP Full Set Computer
24750/=
- Intel 3.2 GHZ CPU
- 80 GB Hard disk
- 1 GB Ram
- "17" LCD Monitor
- DVD Rom
- Keyboard
- Optical Mouse
- Speaker

Free:- Head Phone/Web cam, 4GB Pendrive
ஒரு வருட உத்தரவாதம்

Only 49500/= HP D.Core-Laptop
2 GB Ram
500 GB Hard Disk
1 Year Warranty

Only 18500/= HP D.Core-Laptop
1 GB Ram
80 GB Hard Disk
1 Year Warranty



Intel Full set Computer
Only 41500/=
- Dual-Core 3.20GHz CPU
- Asrock Motherboard
- 500 GB Hard Disk
- 2 GB Ram
- "19" LED Monitor
- (Samsung,Viewsonic,HP)
- DVD Writer
- Keyboard
- Speaker

Free:- Head Phone/ Web cam, 8GB Pendrive
3 Years Warranty

(C/17649)(10)


## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் புலேந்திரன்

(ராஜா மருந்தக உரிமையாளர்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் முதலாம் ஒழுங்கை பருத்தித்துறை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் புலேந்திரன் (12.11.2014) அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம்-சேதுபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சிற்றம்பலம்-அன்னமுத்து தம்பதியரின் மருமகனும், சாரதாதேவியின் அன்புக் கணவரும், காந்தசொரூபனின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர் சாலையில் அஞ்சலிக்காக வைக் கப்பட்டு நாளை (16.11.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று, கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(54267)(10)

தகவல்:
குடும்பத்தினர்.

## தொடர்ச்சிகள்

### வடக்கில்

களின் உதவியுடனும், ஒத்துழைப்புடனும் எமது மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டை முன்னெடுக்க முடியும். மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்கள், வாய்ப்புக்கள் பற்றிய ஆலோசனைகளை கைதடியிலுள்ள எமது பேரவைச் செயலகத்துக்கு தபால் மூலமாகவோ, மின்னஞ்சல் (councilnpc@gmail.com) மூலமாகவோ அனுப்பிவைக்கலாம் என்று கோரியுள்ளார். (த-5)

### அதிகளவு

மீற்றர் பகுதியில் இன்னமும் நிலக்கண்ணி வெடிகள் அகற்ற வேண்டியுள்ளன.

நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கையில் 75 வீதமான பணிகளை இராணுவமே முன்னெடுக்கின்றது. அதனைவிட ஏனைய சர்வதேச நிறுவனங்களும் இதனை முன்னெடுக்கின்றன. நிலக் கண்ணி வெடிகளால் அபாயத்தை எதிர்கொண்டுள்ள நாடுகளுடன் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவது குறித்த தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள இலங்கை தயாராகவுள்ளது - என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (த-5)

### மஹிந்தவை

எடுக்கிறியள்' என்று கோபமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவைத் தூற்றிப் பேசியுள் ளார். அத்துடன் இராணுவத் தினரையும் திட்டி, ஜனாதிபதி யையும் திட்டித் தகாத வார்த் தைகளைப் பயன்படுத்திப் பேசியுள்ளார். இதன்போது அங்கு நின்ற ஊழியர்கள், குறித்த வயோதிபரை அந்த இடத்தை விட்டு அகலுமாறும், பெண் அலுவலர்களும் நிற் கின்றனர் என்றும் தெரிவித் துள்ளனர்.

அதன் பின்னரும் குறித்த வயோதிபர் அங்கு நின்று, ஜனாதிபதியையும், இராணுவத்தினரையும் தகாத் வார்த்தைகளால் தொடர்ந்து திட்டியுள்ளார். இதன்போது வலி. வடக்குப் பிரதேச செயலக ஊழியர்கள் சிலர் அவரைப் பலவந்தமாக அந்த இடத்திலிருந்து வெளியேற்றியுள்ளனர். (த-5)

### விடுதிகளில்

ததாகப் பெண் ஒருவரைக் கைது செய்த கொடிகாமம் பொலிஸார், அந்தப் பெண் கொடுத்த தகவலை அடுத்து சாவகச்சேரி நீதிவானின் உத்தரவின் பேரில் சாவகச்சேரியில் உள்ள இரு விருந்தினர் விடுதிகளை முற்றுகையிட்டு அங்கிருந்த ஆண்கள் 6 பேரைக் கைது செய்து நீதி மன்றில் முற்படுத்தியிருந்தனர். இவர்கள் 7 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளான ந. ஸ்ரீகாந்தா, எஸ். செலஸ்ரின் ஆகியோர் இவர்களைப் பிணையில் விட மனுச் சமர்ப்பித்தனர். இவர்களது பிணை மனுக்களை நிராகரித்த நீதிவான் பெண் உட்பட 7 பேரையும் எதிர் வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-9)

### நிறைவேற்று

முறையை நீக்கக் கோரி ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர். ஆனாலும் போர் முடிவடைந்த பின் அரசமைப்பில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்காக நாடாளுமன்ற தெரிவுக் குழு ஒன்றை அமைத்தேன். சில அமர்வுகளும் இடம்பெற்றன. இருந்தாலும் எதிர்க்கட்சியினர் இதில் கலந்துகொள்ளவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதில் கலந்துகொள்ளவில்லை. இதனால் இதனை முன்னெடுக்க முடியவில்லை.

நிறைவேற்று அதிகாரத்தினால் நான் ஒரு சர்வாதிகாரி என்று எதிர்க்கட்சியினர் கோஷம் எழுப்புகின்றனர். நான் நிறைவேற்று அதிகாரத்தை நாட்டின் 30 வருட காலப் போரை முடிவுக்கு கொண்டுவரவும், நாட்டை அபிவிருத்தி செய்யவுமே பயன்படுத்தி உள்ளேன். ஹெலிகொப்டர் மூலம் சட்டவரைவு நாடாளுமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அதன் விளைவுகளை நாம் அனுபவித்தோம். 2002 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் அரசு, நோர்வேயுடன் இணைந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டது. அவர்களுக்கு அப்போது நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரம் இருக்கவில்லை. ஆனாலும் நாடாளுமன்ற அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்தியே ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. அதன் விளைவுகளுக்கு நானே முகம் கொடுத்தேன்.

வரவு - செலவுத் திட்டம் மூலம் மக்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. இது எவ்வாறு சாத்தியமாகும் எனச் சிலர் வினவுகின்றனர். போருக்காகத் தற்போது பணம் செலவாவதில்லை. அரிசி உட்பட பல தானியங்கள் இறக்குமதிக்காகத் தற்போது பணம் செலவாவதில்லை. இந்தப் பணத்தைப் பயன்படுத்தியே மக்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டன - என்றார். (த-5)

### போராளியின்

கின்றன. அதிலும் வடக்கு மாகாணத்தில் சுமார் 15 இராணுவ டிவிசன்கள் நிலைகொண்டுள்ளதுடன், இந்தப் பிரதேசம் உளவுத் துறையினரது அதி உச்ச கண்காணிப்பின் கீழும் உள்ளது.

அதுமட்டுமன்றி 'புனர்வாழ்வு' அளிக்கப்பட்டதாகக் கூறிச் சமூகத்துடன் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகள் அதி தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டும் வருகின்றனர். இவ்வாறான புறச் சூழ்நிலையில் முன்னாள் போராளியான நகுலேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தக் கொலைக்கு இலங்கை அரசே முழுப் பொறுப்பாகும்.

இந்தக் கொலை தொடர்பாக இலங்கை அரசு நியாயமான விசாரணைகள் எதனையும் நடத்தும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை. எனவே இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை மேற்கொண்டு வரும் ஐ.நா மனித உரிமைகள் சபை, இந்தக் கொலை தொடர்பாகவும் முழுமையான விசாரணை ஒன்றினை மேற்கொள்ள வேண்டும் எனக் கோருகின்றோம் - என்றுள்ளது. (த-5)

### குருக்கள்மடம்

றைச் சமர்ப்பித்துள்ளனர்.

குருக்கள்மடம் மனிதப் புதைகுழி தோண்டுவது தொடர்பாகக் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் பொறியியலாளருமான சிப்லி பாறூக்கினால் கடந்த மாதம் 2ஆம் திகதி களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு ஏற்கனவே விசாரணைக்கு வந்தபோது, இந்தப் புதைகுழியை தோண்டுவதற்கான ஏற்பாடுகள் குறித்து நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டுமென களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையிலேயே, இந்த மனு மீதான விசாரணை இடம்பெற்றது. அறிக்கையைப் பரிசீலித்த நீதிபதி ஏ.எம்.றியாழ், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 29ஆம் திகதிக்கு வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

1990ஆம் ஆண்டு காத்தான்குடியைச் சேர்ந்த சிலர் கல்முனையிலிருந்து காத்தான்குடிக்குச் சென்று கொண்டிருந்தபோது குருக்கள்மடம் பிரதேசத்தில் வைத்து கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். இவர்களின் சடலங்கள் குருக்கள்மடம் பகுதியில் புதைக்கப்பட்டுள்ளதாகக் கோரி உயிரிழந்தவர்களின் உறவினர்கள் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-10)

### சீனக்

பதி அட்மிரல் ஆர்.கே.டோவன் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுவரையில் சீனக் கடற்படையின் செயற்பாடுகள் கவலை தருவதாக அமைந்துள்ளன. இது அவர்களின் கடற்கொள்ளைத் தடுப்புப் படையின் ஒரு பகுதியாக, 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தியப் பெருங்கடலில் இருந்து வருகின்றது. வழக்கமாகக் கப்பல்களையும் எப்போதாவது, நீர்மூழ்கிகளின் நடமாட்டங்களையும் அவதானிக்க முடிகின்றது.

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாகக் கொழும்புத் துறைமுகம் அவர்களுக்கு இருந்திருக்கும். இந்தியப் பெருங்கடலில் சீனக் கடற்படையின் நடவடிக்கைகள் இடம்பெறும் பகுதிகளை நாம் மிக நெருக்கமாகக் கண்காணித்து வருகிறோம். அவர்கள் கொழும்புக் கடற்பரப்பில் தான் இருக்கிறார்கள். இது கொழும்பு, சீன கடற்படைகளுக்கு இடையிலான விவகாரம். தமது நீர்மூழ்கிகளுக்கான விநியோகத் தேவைகளுக்காக இந்தியாவை சீனா அணுகவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-5)

### சீனா மூலம்

காணப்படுகிறது. தமது கருத்திட்டங்களூடாக சீனா இலங்கையில் ஆதிக்கம் செலுத்துகிறது. இலங்கையில் சீனா என்ன செய்கின்றது என்பதை நாட்டு மக்கள் அறிந்துகொள்ள வேண்டும்."- என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றில் நேற்றுக் காலை இடம்பெற்ற வெளிவிவகார அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

"இலங்கை தனது இறைமையைப் பேணுகிறதா? பல்வேறு சர்வதேச அமைப்புக்கள் தலையீடு செய்கின்றன. இந்த நிலையில், இலங்கை தனது இறைமையை எவ்வாறு பேணுகிறது? பல்வேறு கருத்திட்டங்களுடன் இலங்கை சீனாவுடன் கைச்சாத்திட்டுள்ளது. முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா காலத்திலும் சீனாவுடன் உறவு பேணப்பட்டு வருகிறது. ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் இந்த உறவு அதிகரித்துள்ளது."- என்றும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும்போது,

"2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டுவரை 2.18 பில்லியன் அமெரிக்க டொலர் கடன்பெற சீனாவுடன் இணக்கம் ஏற்பட்டுள்ளது. 2005 முதல் 2013 வரை இலங்கைக்கு சீனா வழங்கிய நிதியில் 2 வீதம் மட்டும் நன்கொடை. ஏனைய 98 வீதமும் கடனாகும்.

ஆனால் இந்தியா 1.3 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்கியுள்ளது. இதில் மூன்றில் ஒரு பங்கு நன்கொடையாகும். இதனூடாக ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது.

இலங்கை - இந்திய பிராந்திய நலன் கருதி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சீனாவின் பெரிய கருத்திட்டம் இலங்கையில் அனைவருக்கும் நன்மைபயக்குமா? சுதந்திரம் பற்றிச் சிந்திக்கவேண்டும். சீனாவின் கருத்திட்டம் இலங்கை மீது எந்தளவுக்கு கட்டுப்பாட்டை விதிக்கிறது என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல் மற்றும் போர்க்கப்பல் கடந்த செப்ரெம்பர் மாதம் கொழும்பில் தரித்து நின்றது. இதன்போது இலங்கை பல உத்தரவாதங்களை வழங்கியுள்ளது. கடந்த காலங்களில் இப்படியான நிகழ்வு இடம்பெறவில்லை. இந்த நிலையில், இது பல கேள்விகளையும் சந்தேகங்களையும் ஏற்படுத்துகிறது. சீனாவின் ஆதிக்கத்தினூடாக இந்தியாவை ஓரம் கட்ட - அதன் வகிபாகத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

கொழும்பில் சீனாவின் உதவியுடன் துறைமுக நகரம் அமைக்கப்படுகிறது. சீனா 1.54 பில்லியன் ரூபா நிதியை இதற்காக ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் 125 ஏக்கரில் 88 ஏக்கர் சீனாவுக்கு 99 வருட குத்தகைக்கும், 20 ஏக்கர் இலவசமாகவும் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய அரைவாசிப் பகுதி சீனாவின் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் சீனாவின் செல்வாக்கு அல்ல, ஆக்கிரமிப்பே அதிகரித்துள்ளது. இதனூடாக இலங்கைக்கோ அல்லது இந்தியாவுக்கோ நன்மை ஏற்படப்போகிறதா? அல்லது தெற்காசியாவுக்கு நன்மை ஏற்படப்போகிறதா? - எனக் கேள்வி எழுப்புகின்றேன்" - என்றார். (ற-5)

### வெளிநாட்டை

றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கைப் பெற்றோரின் பிள்ளைகள், இராஜதந்திரிகளின் பிள்ளைகள் ஆகியோர் இந்தக் கற்கைகளுக்கு விண்ணப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை இராஜதந்திரிகளின் பிள்ளைகள் தவிர்ந்த ஏனையவர்கள் சுய நிதியில் கற்கைநெறிகளுக்கான கட்டணங்களைச் செலுத்த வேண்டும் என்றும் இராஜதந்திரிகளின் பிள்ளைகளுக்கு கட்டணக் குறைப்பு வழங்கப் படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நடத்தப்படும் உயர்தரப் பரீட்சைக்கு இணையான பரீட்சையொன்றில் குறித்த துறைக்கான தெரிவுக்குரிய பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் அனுமதிக்கான அடிப்படைத் தகுதியாகக் கொள்ளப்படுகின்றது. இலங்கைப் பிரஜாவுரிமை உடையவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பிக்கும் பரீட்சைக்குத் தோற்றியது உட்பட குறைந்தது மூன்று வருடங்கள் வெளிநாடுகளில் கல்வி கற்றிருக்க வேண்டியது அவசியமானது என்பதுடன் அதனை ஆவணங்கள் ரீதியாக நிரூபிக்கவும் வேண்டும்.

தற்போது வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மருத்துவக் கற்கைகளுக்காக விண்ணப்பித்து வருவதுடன் விண்ணப்பங்களின் எண்ணிக்கையும் வருடாவருடம் அதிகரித்த வண்ணமுள்ளது என்றுபல்கலைக்கழக மாணிய ஆணைக்குழுத் தகவல்களிலிருந்து அறியக்கூடியதாகவுள்ளது.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பிள்ளைகள் இந்த அனுமதி வாயிலாக மிகக் குறைந்த கட்டணத்தில் கற்கைநெறிகளைத் தொடர வாய்ப்புள்ளதாகவும் இந்த வாய்ப்பை அவர்கள் பயன்படுத்த முன்வரவேண்டும் எனவும் கல்வியியலாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ற-4)

### குழம்பிய

"வெளிவிவகார அமைச்சும் அரசும் பல்வேறு அசௌகரியங்களுக்கும், சவால்களுக்கும் மத்தியில் கொள்கை ரீதியான உறவுகளை மேற்கொண்டு வருகின்றது. அரசு மேற்கொண்டுள்ள இராஜதந்திர நடவடிக்கைகள் - வெளிவிவகார கொள்கைகள் என்பன எமது நாட்டுக்கு பல வெற்றிகளைத் தேடிக்கொடுத்துள்ளது."- என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஒரு சிரேஷ்ட உறுப்பினராவார். அவர் மீது நான் மரியாதை கொண்டிருக்கிறேன். எனினும், அவர் குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதற்கு முயற்சிக்கிறார். சீனாவுடனான உறவு, இந்தியாவுடனான உறவு மற்றும் சீனாவுடன் இலங்கை அரசு உறவு கொண்டிருப்பதால் இந்தியாவின் நிலைமை என்று ஒன்றையொன்று பிணைத்து குழப்பி கருத்துகளை முன்வைத்திருப்பது ஏற்க முடியாது. இதனை நான் கண்டிக்கிறேன்."- என்று அங்கு குறிப்பிட்ட பீரிஸ்,

"ஐரோப்பிய நீதிமன்றத்தின் தீர்ப்புத் தொடர்பில் இங்கு கருத்துகள் முன்வைக்கப்பட்டன. நாம் வெளிநாட்டு நீதிமன்றத்துக்கு அடிபணியப் போவதில்லை என்பதைக் கூறிக்கொள்கின்றேன். இதனை முன்னரும் கூறினேன். மேலும், இந்த விடயம் தொடர்பில் நாம் தற்போது 14 நாடுகளுடன் இணைந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். எமது நாட்டைப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுப்போம்.

இதேவேளை, ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகம் அமைக்கும் பணிகள் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் வெறுமையானவை. இதனை ஒரு பொருட்டாகவே நாம் கருதவில்லை" - என்று மேலும் தெரிவித்தார். (ற-5)

### ஜன.8

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும் எனவும் உயர் நீதிமன்றம் விளக்கம் வழங்கியுள்ள நிலையில், எதிர்வரும் 19 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் ஜனாதிபதியின் 4 ஆண்டு பதவிக் காலம் முடிவுக்கு வருகின்றது. அதன் பிரகாரம் புதிய தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

இதேவேளை - தேர்தல்கள் திணைக்களத்தில், தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில், ஜனாதிபதித் தேர்தல் ஜனவரி 8 ஆம் திகதியே நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தத் திகதியை தேர்தல் திகதியாக கருத்தில் கொண்டே, தேர்தல்கள் பணியை முன்னெடுக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனவரி 8 ஆம் திகதி நடத்தப்பட தவறின் 13 ஆம் திகதியே தேர்தல் நடைபெறும் என்ற எதிர்பார்ப்பு இருப்பதால், 8 ஆம் திகதியை கருத்தில் கொண்டு தேர்தல்கள் திணைக்களப் பணிகளை முன்னெடுத்தால், ஜனாதிபதித் தேர்தல் 13 ஆம் திகதி பின் தள்ளப்பட்டு நடந்தாலும் பாதிப்பை ஏற்படுத்தாது என்பதால் அவ்வாறு பணிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## குற்றங்களும் கைதுகளும்

மட்டக்களப்பு

### ஏறாவூரில் ஆலய உண்டியல் உடைத்து பணம் களவாடல்



மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சித்தாண்டி முச்சந்திப் பிள்ளையார் கோயில் உண்டியல் நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு அதிலிருந்து பணம் களவாடப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த ஆலய வீதியைச் சுத்தம் செய்வதற்காக ஆலயப் பாதுகாப்பாளர் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் வந்தபோது, உண்டியல் வைக்கப்பட்ட இடத்தில் அது இல்லாததை அவதானித்து ஆலய நிர்வாக சபையினருக்குத் தெரியப்படுத்தினார்.

இந்தநிலையில், ஆலய நிர்வாக சபையினர் உண்டியலைத் தேடியபோது, பணம் களவாடப்பட்ட நிலையில் வெற்று உண்டியல் கோயிலுக்கு அருகில் காணப்பட்டதாக ஆலயத் தலைவர் பரசுராமன் தவராசா தெரிவித்தார்.

அந்தக் களவு தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த ஆலயத்தில் கடந்த 6 மாதங்களுக்கு முன்னரும் இவ்வாறு களவு போயுள்ளதாகவும்; இந்தக் களவு தொடர்பிலும் ஏறாவூர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந் ததாகவும் அவர் மேலும் கூறினார். (வ)

தென்மராட்சி

### போக்குவரத்து விதிகளை மீறியவர் அகப்பட்டார்

வீதியில் ஆபத்தை விளைவிக்கக்கூடிய வகையில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிளை வீதிப் போக்குவரத்து கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸார் நிறுத்துமாறு சமிக்ஞை செய்தபோது நிறுத் தாமல் சென்றதையடுத்து பொலிஸார் அதனைச் செலுத்திச் சென்ற மட்டுவில் வாசியைத் துரத்திப் பிடித்தனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவரும் அவரோடு பயணித்தவரும் தலைக்கவசம் அணியாமலும் சாரதிய அனுமதிப் பத்திரம் இல்லாமலும் பயணித்ததைக் கண்டுபிடித்தனர்.

பொலிஸார் குறித்த நபருக்கு எதிராக ஐந்து குற்றச்சாட்டுக்களை முன் வைத்து நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முன்னி லைப்படுத்தினர்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து ஐந்து குற்றங்களுக்குமாக 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ–9)

தென்மராட்சி

### சாரதிக்கு அபராதம்

வாகனத்தின் முன்பக்கத்துக்கு கறுப்புக் கண்ணாடி பொருத்திய நிலையில் வாகனத்தைச் செலுத்திச் சென்ற சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண் டதை அடுத்து 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ–9)

## கிழக்கு மாகாணத்தில் அஞ்சல் தின நிகழ்வு

மட்டக்களப்பு, நவ.15

உலக அஞ்சல் தினத்தை நினைவுகூரும் முகமாக அஞ்சல் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கிழக்கு மாகாண உலக அஞ்சல் தின நிகழ்வு, நாளை ஞாயிற்றுக்கிழமை மட்டக் களப்பு வின்சன்ற் மகளிர் தேசிய பாடசாலையில் நடை பெறவுள்ளது.

அஞ்சல் மா அதிபர் டீ.எல்.பி. ஆர்.அபயரத்ன தலைமை யில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், கிழக்கு மாகா ணத்தைச் சேர்ந்த தபால் திணைக்கள உயரதிகாரிகள், தபாலதிபர்கள், உப தபால திபர்கள், தபால் திணைக்கள ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளதாக கிழக்கு மாகாண பிரதி அஞ் சல் மா அதிபர் வீ.விவேகா னந்தலிங்கம் தெரிவித்தார்.

இந்தநிகழ்வின்போது அர்ப் பணிப்புடனான சேவையை வழங்கிய தபால் திணைக்கள உத்தியோகத்தர்கள் கௌர விக்கப்படவுள்ளதுடன், சிறந்த தபாலகங்களுக்கான விருது களும் வழங்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண பிரதி அஞ் சல் மா அதிபர் மேலும் தெரி வித்தார். (வ)

## அமெரிக்காவில் சாவின் விளிம்பிலிருந்த குழந்தைக்காக பாடல் பாடிய தந்தை



லொஸ்ஏஞ்சல்ஸ், நவ.15

அமெரிக்காவில் பிறந்து மூன்று நாளே ஆன குழந்தை யொன்று எதிர்பாராத நிலை யில் இறந்துவிட்டது. அது இறக்கும் வேளையில் அந்தக் குழந்தையின் தந்தை பாடிய பாடல் அடங்கிய வீடியோ பார்ப் பவர்கள் கண்களில் கண் ணீரை வரவழைக்கிறது.

அமெரிக்காவின் கலிபோர் னியா மாநிலத்தில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகரைச் சேர்ந்தவர் கிறிஸ் பிக்கோ. கர்ப்பமாக இருந்த அவரது மனைவி ஆஷ் லிக்கு குறை மாதத்தில் ஆண் குழந்தையொன்று பிறந்தது. லொஸ் ஏஞ்சல்ஸ் அருகே உள்ள லோமாலிண்டா பல் கலைக்கழக மருத்துவமனை யில் நடைபெற்ற பிரசவத்தின் போது குழந்தையின் தாயான ஆஷ்லி இறப்பைத் தழுவி னார். தாயின் வயிற்றில் 24 வாரங்களே இருந்த குழந்தை இன்குபேட்டரில் வைக்கப் பட்டு மருத்துவர்களின் தீவிர கண்காணிப்பில் இருந்தது.

ஆனால் சிகிச்சை பயனின்றி குழந்தை உயிர் இழந்தது. முன்னதாக குழந்தை மருத் துவமனையில் உயிருக்குப் போராடியபோது கிறிஸ் அதன் அருகில் அமர்ந்து கிற்றார் வாசித்துக் கொண்டே மெல் லிய குரலில் பாட்டுப்பாடிய காணொலி இணையத்தளத் தில் வெளியாகியுள்ளது. ஒவ் வொரு நிமிடமும் ஆயிரக் கணக்கானோர் அந்த காணொ லியைப் பார்த்து வருகின்ற னர்.

காணொலியில் குழந்தையின் முகம் தெரியவில்லை. துண்ணி யால் குழந்தையின் உடலைச் சுற்றி வைத்து ஆங்காங்கே டியூப்கள் இணைக்கப்பட்டிருந் ததையே காணமுடிகிறது. அந் தக் காணொலியைப் பார்த்த அனைவருமே துக்க மிகுதி யால் கண்கலங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)




உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் பேரணி மட்டக்களப்பு நகரில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் ஏற்பாட்டில் நடைபெற்ற பேரணியில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன், மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் விழிப்புணர்வு வீதி நாடகமும் நடைபெற்றது. (வ)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ 15

துன்னாலை காசிநாதர் வித்தி யாலய பரிசளிப்பு விழா வித்தி யாலய பிரதான மண்டபத் தில் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் பொ.இரத்தினராசா தலைமையில் நடைபெறவுள் ளது. பிரதம விருந்தினராக கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.பொன்னையா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (த-35)

## வேலையற்ற பட்டதாரிகளுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 15

முல்லைத்தீவு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக் கான விசேட கலந்துரையா டல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத் தீவு மகாவித்தியால யத்தில் நடைபெறவுள்ளது. அதில் முல்லைத்தீவு மாவட்ட வேலை யற்ற பட்டதாரிகள் அனைவ ரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள் ளனர். (த-4)

## குறிஞ்சாக்கேணி பிரதேச செயலகம் அமைப்பது குறித்து பரிசீலிக்க முடிவு

திருமலை, நவ.15

கிண்ணியா பிரதேச செய லகத்திலிருந்து பிரித்து குறிஞ் சாக்கேணி பிரதேச செயல கமென புதிய பிரதேச செய லகமொன்றை உருவாக்கு வது குறித்து பரிசீலிக்க முடியும் என்று சுற்றாடல்துறை அமைச் சர் சுசில் பிரேம ஜெயந்த புதன் கிழமை தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கும் அமைச்சருக்குமி டையிலான சந்திப்பொன்று புதன்கிழமை நாடாளுமன் றக் கட்டடத் தொகுதியில் இடம் பெற்றது. அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர் ஒரு மாதத்துக்கு முன்னர் திருமணம்

யாழ்ப்பாணம், நவ. 15

குடும்பஸ்தரைக் கொலை செய்து கிணற்றினுள் வீசிய குற்றச்சாட்டில் விசாரணை இடம்பெற்றுவந்த நிலையில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் குற்றவாளியாக இனங் காணப்பட்டதனையடுத்து அவர்களுக்கு யாழ்.மேல் நீதி மன்று நேற்று முன்தினம் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. அவர்களில் ஒருவர் ஒரு மாதத்துக்கு முன் னரே திருமணம் செய்து கொண்டதோடு தீர்ப்புக்கு முதல்நாள் அவரது தந்தை யார் இறந்துவிட்டார் என்றும் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு பெப்ரவரி 3 ஆம் திகதி நெடுங்குளம் பிள் ளையார் கோயில் வீதி, கொழும்புத்துறையைச் சேர்ந்த மார்க்கண்டு சிவராசா என்பவர் தலை, அடிவயிறு என்பனவற்றில் வெட்டுக் குத் துக் காயங்களுடன் கிணற் றிலிருந்து சடலமாக மீட்கப்பட் டார்.

அவரைக் கொலை செய்தது அவரது மனைவியான சுமதி மற்றும் 3 ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறையைச் சேர்ந்த கமலநாதன் கெங்கா தரன் ஆகியோர் என்று நீதி மன்று விசாரணையில் உறு திப்படுத்தியது.

திருமணம் செய்த இருவருக் கிடையே பிறிதொரு நபரின் தலையீடு ஏற்பட்டு அதன் காரணமாகக் கோர எண் ணம் ஏற்பட்டு ஒரு உயிர் சாது ரியமாகப் பறிக்கப்பட்டதான தன்மை காணப்படுகிறது. இத்தகைய செயற்பாடுகள் அனுமதிக்கப்படவோ, பொறுத் துக்கொள்ளவோ முடியாது என்று நீதிமன்று வெளிப்படுத் துகிறது. அவ்வாறான நடவ டிக்கைகள் கடுமையாகக் கவனிக்கப்பட்டுத் தவறுகள் சீர்திருத்தப்படவேண்டும்என்று மன்று தெரிவித்தது.

இதனையடுத்து அவர்கள் இருவரையும் பார்த்து உங்க ளுக்கு ஏன் தூக்குத் தண் டனை விதிக்கக்கூடாது என் பது தொடர்பில் நீங்கள் ஏதா வது கூற இருந்தால் கூறலாம் என்று நீதிபதி இருவரிடமும் கேட்டார்.

அதற்கு முதலாம் எதிரியான கெங்காதரன், 'நான் இந்தக் குற்றத்தைச் செய்யவில்லை. அப்பா நேற்று மோசம் போய் விட்டார். எனக்கும் கொலைச் சம்பவத்துக்கும் எந்தவித சம் பந்தமும் இல்லை. போன மாதம் தான் கலியாணம் செய்தனான்.' என்று கூறி னார். அந்தக் கேள்விக்கு இரண்டாம் எதிரியான சுமதி பதிலளிக்கையில், 'எனக்கு இரண்டு பிள்ளைகள் இருக் கிறார்கள். நான்தான் அவர் களை வைத்துப் பார்க்கி றேன். என்னுடன் தான் சின்ன ஆக்கள் இருக்கிறார் கள். நான் கடைக்குச் சாப்பாடு கொடுத்துத் தான் அவர்கள் இரண்டு பேரினது படிப்புச் செலவுகளைப் பார்த்து அவர் களை வளர்க்கிறேன். அவர் கள் நீதிமன்றுக்கு வந்திருக் கிறார்கள். நான் கொலை செய்யவில்லை ஐயா.எனக் கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை' என்று கூறினார்.

குறித்த இருவரையும் நீதி மன்று குற்றவாளிகளாகக் கண்ட நிலையில், திறந்த நீதி மன்றில் வெளிச்சம் அணைக் கப்பட்டது. நீதிபதி உட்பட அனைவரும் எழுந்து நின் றார்கள். இருவருக்கும் தூக் குத் தண்டனை விதிக்கப்படு கிறது என்று கூறி நீதிபதி தீர்ப் பில் ஒப்பமிட்டுப் பேனாவை முறித்தார்.

இருவருக்கும் ஜனாதிபதி தீர் மானிக்கும் இடத்தில் திகதி உயிர் பிரியும்வரை கழுத் சுருக்கிடப்பட்டுத் தூக்குத் த டனை நிறைவேற்றப்படும் என விளக்கப்பட்டது. (கு-

## வேம்படியில் இன்று கருத்தமர்வு

யாழ்ப்பாணம், நவ 15

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவர்களுக்கான உயர்கல்வி வழிமுறைகள் மற்றும் தொழில் வாய்ப்புகள் என்னும் தலைப்பிலான விரிவுரை ஒன்று வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இன்று நடைபெறவுள்ளது.

பாடசாலையின் மாபெல் தம்பையா மண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் இந்தக் கருத்தமர்வில் பேராதனைப் பல்கலைக் கழக தொழில் வழிகாட்டல் பிரிவின் இயக்குநரான கலாநிதி கே.பெரேரா கருத்துரை வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வுக்கு ஜி.சீ.ஈ உயர்தர மாணவர்கள் (2014,2015) மற்றும் அவர்களின் பெற்றோர்கள் பங்குபற்றுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். பாடசாலை மாணவர்கள் பாடசாலை சீருடையில் சமுகமளிக்குமாறு பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (த-4)

## மெலிஞ்சிமுனை கடலில் தங்கூசி வலைகள் மீட்பு

யாழ்ப்பாணம், நவ.15

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனைக் கடற்பகுதியில் ஒரு தொகுதி தங்கூசி வலைகளைக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை மீட்டுள்ளனர்.

அரசினால் தடை செய்யப்பட்ட இந்தத் தங்கூசி வலைகள் கடற்கரையோரப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டன.

இந்த வலைகளைப் பயன்படுத்திக் கடற்றொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் அவற்றைக் கடற்கரையில் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வலைகளை மீட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் அவற்றை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் பாரப்படுத்தினார்கள்.

குடாக்கடல் மற்றும் தீவுப் பகுதிக் கடலில் தற்போது மீனவர்கள் சிலர் இந்தத் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி வருகின்றனர் என்று முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதனை அடுத்துத் தாம் நடவடிக்கையில் இறங்கியுள்ளதாகக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தங்கூசி வலைகளைப் பயன்படுத்தித் தொழில் ஈடுபடுவோருக்கு எதிராக எதிர்காலத்தில் கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

இதற்காகக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் அதிகாரிகள் கடற்றொழில் நடைபெறும் இடங்களில் தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் தற்போது இவ்வாறு தங்கூசி வலைகளைப் பயன்படுத்துவது வெகுவாகக் குறைவடைந் துள்ளது என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (த-17)



யாழ். பொது நூலகம் அகில இலங்கை ரீதியாக உள்ளூராட்சி அமைச்சினால் நடத்தப்பட்ட போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமையைப் பாராட்டி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தால் ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. இந்திய பதில் துணைத் தூதுவர் எஸ். தட்சணாமூர்த்தி இந்த நூல்களைப் பிரதம நூலகர் திருமதி சதாசிவமூர்த்தியிடம் கையளித்தார். (த-86)

## மாற்றுத்திறனாளிகள், மாணவரை மையமாகக் கொண்டு குடிதண்ணீர்

### வலி.மேற்குப் பிரதேசத்தில் அறிமுகம்

வலி.தென்மேற்கு, நவ.15

குடிதண்ணீர் வழங்கும் திட்டமானது மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாடசாலை மாணவர்களை மையமாகக் கொண்டதாக அறிமுகப்படுத்தப்படுகிறது. மிகப் போட்டி நிலையில் உருவாக்கப்படுகின்ற இந்தத் திட்டம் தொடர்பில் 130 திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் வலி.மேற்குப் பிரதேசத்துக்கு இந்தத் திட்டம் தெரிவு செய்யப்பட்டிருப்பது சிறப்பான அம்சமாகும்.

இவ்வாறு 'வேள்ட் விஷன்' நிறுவனத்தின் ஆஸ்திரேலியத் திட்டமிடல் பணிப்பாளர் அன்று விக்டோரியா கல்லூரி மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சர்வதேச கைகழுவும் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசினார்.

'வேள்ட் விஷன்' நிறுவனத்தின் திட்டமிடல் பணிப்பாளர் அன்ரனி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

இந்தத் திட்டம் தொடர்பில் எமது பணி கடந்த ஜூன் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. சிறுவர்கள் சுகாதாரமான - சுத்தமான குடிதண்ணீரைப் பெறவேண்டும் என்பதே எமது இலக்காகும். இந்தத் திட்டம் ஏறத்தாழ மூன்று வருடங்கள் வரை நிலைக்கக் கூடியதாகும். இந்தத் திட்டத்தை அனைவரும் பயன்படுத்தி நன்மையடைய வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோளாகும்-என்றார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வலி.மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் பேசும் போது கூறியதாவது: பல அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ்ந்து வருகின்ற மக்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு இந்தத் திட்டம் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. மாணவர்களுக்கான கல்வி, சத்துணவு, சுகாதாரம் மற்றும் ஆரோக்கியமான வாழ்வு தொடர்பில் பல நடவடிக் கைகளை மேற்கொண்டு வருகின்றமை வரவேற்கத்தக்கது. இன்று எமது பிரதேசமானது சுகாதாரமான சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் பல இடர்பாடுகளை எதிர்நோக்கிய வண்ணமுள்ளது. இதனால் மக்கள் பல துன்பங்களையும் துயரங்களையும் சுமக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிறுவனத்தின் செயற்பாடானது சிறுவர் முதல் பெரியோர் வரை பயன் பெறத்தக்க முறையாக அமைந்துள்ளது-என்றார். (த-115)



ஐப்பசி இறுதி வெள்ளியான நேற்றுக் குடாநாட்டில் உள்ள சிவன் ஆலயங்களில் இயம சங்கார நிகழ்வு இடம்பெற்றது. நல்லூர் சிவன் ஆலயத்தில் லிங்கேஸ்வரர் கேடயத்தில் எழுந்தருளி இயம சங்காரத்தில் ஈடுபட்ட காட்சி. (த-17)


## மரண அறிவித்தல்

### வைரமுத்து புலேந்திரன்



சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து புலேந்திரன் (11.11.2014) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - சின்னம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான சீனியர் - சிவயோகமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி மற்றும் அரியமலர், புவனேஸ்வரி, சிவசுப்பிரமணியம், விஜயராணி, காலஞ்சென்ற ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சரவணபவா, சரோஜினிதேவி, யோகராணி, பரமலிங்கம் (பிரான்ஸ்), பஞ்சாச்சரம், யுகனேசன் (பிரான்ஸ்), சந்திரமலர், தர்மதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கமலேந்திரன் (சுவிஸ்), நகுலேந்திரன் (லண்டன்), சுபாஷினி (நோர்வே), கலாஷினி (கனடா), காலஞ்சென்ற நிமலேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தவச்செல்வி (சுவிஸ்), சுகந்தினி (லண்டன்), மதியழகன் (நோர்வே), பரமநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், கோபிகன், பைரவி (சுவிஸ்), தீபிகன், தீபிகா (லண்டன்), நிரோஷன், நிதுஷா, நிவேதன் (நோர்வே), சுரேன், பிரவீன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.11.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுழிபுரம் திருவடி நிலை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி,
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். (54092) (12.6)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.
TP: 021 205 1753

## IELTS-LAST MINUTE PREPARATION

21,22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான சிறப்பான தயார்ப்படுத்தல்கள்.

ACADEMIC AND GENERAL STUDENTS

*LISTENING * SPEAKING * READING * WRITING

காலம்: 16.11.2014 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை

இடம்: V4 EDUCATIONAL CONSULTANCY
49A, CHAPPEL STREET, JAFFNA.
(NEAR PUBLIC LIBRARY)

FEE :- 1000/= ONLY-1 DAY SEMINAR

பதிவுகளுக்கு:- 077 669 7960 (சி/17647) (10)

## தேவை

K.K.S Railway Station இல் வேலை செய்யக்கூடிய மேசன்மார், சட்டறிங் பாஸ்மார், கம்பி வேலை செய்யக் கூடியவர்கள் தேவை. (சி/17619) (7.6.3)

தொடர்பு:
077 375 1803, 071 454 0731

## தேவை

றொசானி காமன்ஸ் இற்கு தையல் தெரிந்த பெண்கள் தேவை.

கிளை
சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தொடர்பு:
263/1, இராஜகாரியர் வீதி,
மானிப்பாய்.

(54100) (4.6.3)

## சவூதி ராஜ்யத்தில் உடனடி வேலை வாய்ப்பு

சவூதி ராஜ்யத்தில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாகக் காத்திருக்கின்றன.

| Category | Salary |
|---|---|
| Baladiya Driver | 1000+200+OT (First time driver) |
| Cleaner | 800+OT |
| Electrician | 1600+OT |
| Meason | 1500+OT |
| Painter | 1500+OT |

| Category | Salary |
|---|---|
| Cook | 1485+Food+OT |
| Tailor | 1300+200+OT |

அதிஉயர் சம்பளம், தங்குமிடம், மருத்துவம் என்பன இலவசம். கைவசம் விசா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம்.

(வங்கிக் கடன் செய்து கொடுக்கப்படும்)

**Arabian Gulf Enterprises**

No: 72/26, Srisangaraja Mawatha, Colombo-10.

Licence No: SLBFE. Reg. 969

உங்கள் விண்ணப்பங்கள் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் ஒரு மணிவரை இல.26/2, ஸ்ரேசன் வீதி, வவுனியா. லங்கா வொய்சில் ஏற்றுக்கொள்ளப்படும்.

வவுனியாவில் தொடர்புகொள்ள:
LANKA VOICE - 0777 929 475


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.